https://t.me/softknowledge
www.TheMagnat.com
www.kalkionline.com

# தீபம்

இல்லத்தின் அருள் வெளிச்சம்
மார்ச் 05, 2017
68 பக்கங்கள்
₹15 தமிழ்நாடு, புதுச்சேரி ₹18 பிற மாநிலங்களில்



அருள் பெருக்கும் அமிர்த குண்டம்!

சிவராத்திரி சிறப்பிதழ்!



## சித்தம் சிறக்கும் சிவராத்திரி!

- அடுக்குமாடி வீட்டுக்கு வாஸ்து அவசியமா?
- உடல் நலம் தரும் கோளறு பதிகம்!
- மன சஞ்சலம் தீர்க்கும் பஞ்ச ஸங்க்யோபசாரிணி!
- ஆனந்த இரவு ஆதிசிவன் உறவு!



https://t.me/softknowledge

https://t.me/softknowledge

THE MAGNAT MAGAZINES

https://t.me/softknowledge

https://t.me/softknowledge www.TheMagnat.com




ஸ்ரீ சுவர்ண பைரவர்
மயிலாப்பூர், சென்னை



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# சமர்ப்பணம்



24

தண்ணீரில் எரிந்த தீபங்கள்!



43

சிம்மவாஹினியாக அருளும் பனசங்கரி!



அருள்பெருக்கும் அமிர்த குண்டம்!

64

www.TheMagnat.com



சித்தம் சிறக்கும் சிவராத்திரி! ...04
பலன் தரும் பரிகாரங்கள்! ...06
சிவாய நம எனப் பெற்றேன்! ...08
மகாசிவராத்திரி மகோன்னதம்! ...11
மோக்ஷம் தரும் தியான முயற்சி! ...12
சௌந்தர்யம் தரும் பெருமாள்! ...14
மனத்தைக் கவரும் மாளிகைத் தேவர்! ...16
சொந்தம் எப்போதும் தொடர்கதைதான்! ...19
கேள்வி நேரம் ...20
சீவன் சிவமாகும் ரகசியம்! ...22
அனந்த வஸ்துவான ஜ்யோதிர் லிங்கம்! ...27
ஆனந்த இரவு ஆதிசிவன் உறவு! ...28
நடனமாடும் தட்சிணாமூர்த்தி! ...30
குடில் ஒன்று கோயிலானது! ...32
அன்னை காமாட்சி அருட்திருவிழா! ...34
பாதம் பணிந்து பலன் பெறுவோம்! ...39
வேடனாக வந்தருளிய வேலவன்! ...40
மோட்சம் அருளும் ஸ்ரீமுகலிங்கேஸ்வரர்! ...44
மந்திரரூப சக்தி! ...46
பலவும் ஆகி நின்ற பரமன்! ...48
பஞ்சாங்கம் ...51
உடல் ஆரோக்கியம் தரும் கோளறு பதிகம்! ...52
சொன்னது பலிக்கும்! ...54
சகல நலமருளும் சப்த ஸ்தான மூர்த்திகள்! ...56
சிவனுக்கிசைந்த சிவராத்திரி! ...59
ஆற்றங்கரை ஓரத்திலே... ...60



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



**தாம் விரதம் இருந்து இறைவனை தியானித்துப் போற்றிய அக்காலத்தை அனைவரும் சிவராத்திரி விரதமாகக் கொண்டாட வேண்டும், அவர்களுக்கு ஈசனின் பரிபூரண அருள் எப்போதும் கிடைக்க வேண்டும்...**



www.TheMagnat.com

# சித்தம் சிறக்கும் சிவராத்திரி!

***'உறவொடு பகையறும் ஒருமுதல் அவன் எவன்?***
***இறுதியில் உலகருள் இறையவன் அவன் எவன்?***
***மறைமுடி வினில்நடம் வளர்பவன் எவன், எவன்?***
***அறிவினில் அறிபவன் அடியினை தொழுதனம்'***

ஈசன், இறையனாராக, தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் புலவனாக இருந்த தமிழ்க் கடவுள். பிட்டுக்கு மண் சுமந்து, நரியைப் பரியாக்கி, கல் யானைக்குக் கரும்பு கொடுத்து பல்வேறு திருவிளையாடல்கள் நிகழ்த்திய பெம்மான். உலகத்தை ஆட்டுவிக்கும் ஆடல்வல்லான். இவ்வாறு பல்வேறு பெருமைகளை தன்னகத்தே கொண்ட தனிப்பெருங் கடவுள் ஈசனுக்கு மிகவும் உகந்த நாள் மகா சிவராத்திரி.

சிவராத்திரி என்பதற்கு, 'சிவனுக்கு உகந்த இரவு' எனப் பொருள். ஒவ்வொரு மாதமும் தேய்பிறை சதுர்த்தசி இரவு மாத சிவராத்திரியாகப் போற்றப்படுகிறது. ஆனால், மாசி மாதத்தில் வரும் தேய்பிறை சதுர்த்தசி இரவு மகா சிவராத்திரியாகப் போற்றப்படுகிறது. எத்தனையோ இரவுகள் இருக்க, மாசி மாதத்து அந்த ஓர் இரவு மட்டும் சிவனுக்கு மிகவும் பிடித்ததாகிப் போனதற்கு ஒரு காரணமும் இருக்கிறது.

**மகா ஜோதி:** பிரம்மாவுக்கு, 'தான்தானே உலகைப் படைப்பவன். தான் இல்லாவிட்டால் உயிர்கள் ஏது? இயக்கம் ஏது? உலகமே ஏது? சிருஷ்டி மட்டும் இல்லாவிட்டால் இந்த உலகை யார், எப்படிக் காப்பது? ரட்சிப்பது? அழிப்பது? ஆகவே, காக்கும் கடவுளான திருமாலை விடவும், அழித்து ரட்சிக்கும் ஈசனை விடவும் தானே உயர்ந்தவன், சிறந்தவன். அளப்பரிய ஆற்றல் படைத்தவன்' என்ற எண்ணம் உண்டானதால், மிகுந்த தலைக்கனமும் ஏற்பட்டது! செருக்குடனே வைகுண்டம் சென்றார். அரிதுயில் கொண்ட அரியுடன் மல்லுக்கு நின்றார். 'நான் உம் நாபிக் கமலத்தில் தோன்றியவனாயினும் உம்மை விடவும் உயர்ந்தவன். நீர் பலரின் சாபத்துக்கு ஆளாகி, பலமுறை பிறப்பெடுத்திருக்கிறீர். ஆனால், நானோ நித்யவாசம் செய்பவன். நான் இந்த உலகத்தைப் படைக்காவிட்டால் நீர் எங்ஙனம் காத்தல் தொழிலைச் செய்ய முடியும்? எனவே, நான் உம்மை விட உயர்ந்தவன் என்பதை உணர்ந்து, எனக்கு ஏவல் செய்வீராக' என்றார்.

புன்னகைத்த மகாவிஷ்ணு, 'அடடே! உம் தலைகளில் ஒன்றை ஈசனார் பறித்து எறிந்த காலத்தில் எங்கே போனது உம் படைப்பாற்றல்? நீர் அளவற்ற ஆற்றல் உடையவர் என்பது உண்மையானால் அதை மீண்டும் உம்மால் ஏன் படைத்துக்கொள்ள முடியவில்லை? சோமுகாசுரன் உம்மிடம் இருந்து வேதங்களைப் பறித்துச் சென்றபோது எங்கே போனது உம் ஆற்றல்? நானல்லவோ மச்ச அவதாரம் எடுத்து உமக்கு மீட்டுத் தந்தேன். எனவே, நான் என்ற அகங்காரத்தை விடும். நானே உலகைக் காப்பவன். காக்கும் தொழிலை நான் செய்யாவிடில் இந்த உலகம் என்றோ அழிந்துவிட்டிருக்கும். என்னிடம் எதிர்வாதம் புரியாதீர்' என்றார்.

இருவருக்குமிடையே வாக்குவாதம் முற்றி, ஒரு



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# அட்டைப்படக் கட்டுரை

பா.சுவாமிநாதன்

போராக மாறியது. அண்ட சராசரமும் நடுங்க, மகா பிரளயம் உண்டானது. இந்திரன் திகைத்தான். முனிவர்கள், சித்தர்கள், யோகிகள் அனைவரும் அஞ்சினர். ஈசனிடம் உலகைக் காக்குமாறு கெஞ்சினர். ஈசனும் அருள்புரிவதாய் அமைதிப்படுத்தினார்.

போர் புரிந்த அயன், அரி இருவருக்குமிடையே பேரொளி தோன்றியது. 'இந்த ஒளியின் அடியையும், முடியையும் கண்டறிபவரே பெரியவர்' என்று அசரீரி ஒலித்தது. தாமே பெரியவர் என நிரூபிக்கும் ஆவலில்



பிரம்மன் அன்னப் பறவையாகி வானில் உயர்ந்தார். விஷ்ணு வராக வடிவுடன் பூமியைக் குடைந்தார்.

பிரம்மா மேலே மேலே சென்றார். அன்னமாகிய பிரம்மன் சிறகுகள் அழலின் வெப்பத்தால் கருகி உதிர்ந்தன. இருப்பினும் அவரால் திருமுடியைக் காண இயலவில்லை. விஷ்ணுவோ, பூமியை பாதாளம் வரை கடைந்தார், ஆயினும், திருவடியைக் காண இயலவில்லை. ஆணவம் ஒழிந்த விஷ்ணு, அண்ணலைச் சரண் புகுந்தார்.

முடி காணாது திகைத்த பிரம்மா, பொய் சாட்சியாக தாழம்பூவைத் துணைக்கொண்டு, ஈசன் திருமுடி கண்டதாகச் சொன்னார். ஆனால், அப்பேரொளி வெடித்துச் சிதற ஈசன் அளவிலாச் சீற்றத்துடன் வெளிப்பட்டார். 'பிரம்மனே! என் திருமுடி காணாது, கண்டதாகப் பொய்யுரைத்தாயே' என்று சபித்தார். சீற்றம் அடங்காத சிவன் அக்னிப் பிழம்பாய்த் தகித்தார். அஞ்சிய பிரம்மனும், விஷ்ணுவும் தங்கள் பிழை பொறுக்குமாறு வேண்ட, தேவர்கள் பாடித் துதிக்க, முனிவர்கள் வேதம் ஓத, ஈசன் குளிர்ந்து, அருணாசல லிங்கமாய் அமர்ந்தார்.

இவ்வாறு ஈசன் ஜோதிப் பிழம்பாய்த் தோன்றி மண்ணுயிர்களைக் காத்த அந்த இரவு மகா சிவராத்திரியாகக் கொண்டாடப்படுகிறது. பகவான் ரமணரும் இதனை,

**'ஆதிஅருணாசலப்பேர் அற்புதலிங்**
**கத்துருக்கொள்**
**ஆதிநாள் மார்கழியில் ஆதிரையச் - சோதியெழும்**
**ஈசனைமால் முன்அமரர் ஏத்திவழி பட்டநாள்**
**மாசிசிவ ராத்திரியா மற்று'**

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சிவராத்திரி குறித்து பரவலாகக் கூறப்படும் இன்னொரு கதை...

ஒரு காலத்தில் பிரளயத்தின்போது அனைத்து உயிர்களும் ஈசனிடத்தில் ஒடுங்கின. உலக இயக்கமே நின்று போனது. இதனால் மனம் வருந்திய அன்னை சக்தி, உலகங்களும் உயிர்களும் தோன்றி இயங்கும் பொருட்டு இறைவனை நோக்கித் தவம் இருந்தாள். அவள் தவத்துக்கு மெச்சிய ஈசன், தன்னுள் ஒடுங்கி இருந்த உலகங்களை மீண்டும் உண்டாக்கி உயிர்களைப் படைத்தருளினார்.

அப்பொழுது அன்னை, தாம் விரதம் இருந்து இறைவனை தியானித்துப் போற்றிய அக்காலத்தை அனைவரும் சிவராத்திரி விரதமாகக் கொண்டாட வேண்டும் என்றும், அவர்களுக்கு ஈசனின் பரிபூரண அருள் எப்போதும் கிடைக்க வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டாள். இறைவனும் அதற்கு அருள் புரிந்தார். அந்நாளே மகா சிவராத்திரியாகக் கொண்டாடப்படுவதாக ஒரு நம்பிக்கை உள்ளது.

**சிவராத்திரி பூஜை:** சிவராத்திரி காலத்தில் நீராடி, நீறு பூசி, ஐந்தெழுத்து மந்திரத்தை விடிய விடிய ஓதி வருதல் சிறப்பு. சிவ புராணம் படித்தலும், திருமுறைகளைப் பாராயணம் செய்தலும் நற்பலனைத் தரக் கூடியதாகும். சிவன் ஜோதியாய்த் தோன்றி லிங்கமாய்க் குளிர்ந்த அண்ணாமலைத் தலத்தை கிரிவலம் வருதல் அளவற்ற புண்ணியத்தைத் தரும். அன்னை பார்வதி தேவியுடன், முப்பத்து முக்கோடி தேவர்களும், சித்தாதி யோகியர்களும், முனிவர்களும் மகா சிவராத்திரி அன்று கிரிவலம் வருவதாக ஐதீகம்.

**'ஓம் நமசிவாய! ஓம் சிவாய நமஹ!'**

எனும் மந்திரங்களையும், சிவ புராணத்தையும் கூறித் துதித்து மகா சிவராத்திரி நாளில் ஈசன் அருள் பெறுவோம்.


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# பலன் தரும் பரிகாரங்கள்!



"கடந்த ரெண்டு வாரமா உங்களுக்குப் போன் பண்ணி, சில விஷயங்களைக் கேட்கணும்னு ரொம்ப முயற்சி பண்ணிக்கிட்டே இருந்தேன். ஆனா, தொடர்பு கொள்ளவே முடியலை'' அப்படின்னு நிறைய வாசகர்கள் வருத்தப்பட்டுக்கிட்டாங்க. அவங்ககிட்ட எல்லாம் ஒரு விஷயத்தை சொல்லிக்க வேண்டியது அவசியம். போன 15 நாட்களுக்கு முன்பு திடீர்னு வீட்டைக் காலி பண்ண வேண்டிய சூழ்நிலை யாகிப் போச்சு. இப்ப புது வீட்டுக்குப் போயிட்டேன். என்னோட புது தொலைபேசி எண் 24347167. இனிமே, என்னைத் தொடர்பு கொண்டு, எப்போதும் போல உங்க சந்தேகங்களைக் கேட்க எந்தத் தடையும் இல்லை. சிரமத்துக்கு வருத்தம் தெரிவிச்சுக்கிறேன். சரி, இனி விஷயத்துக்கு வருவோம்.

''மனசு எப்போதும் சஞ்சலமாவே இருக்கு. நிம்மதியே இல்லை. எவ்வளவுதான் பணமும் பொருளும் வந்தாலும் கையில தங்கவே மாட்டேங்குது. இதனால குடும்பத்துலயும் புருஷன், பெண்டாட்டி ஒற்றுமையே போயிடுச்சு. என்ன பண்றதுன்னே புரியலை. எங்க வீட்டுப் பிரச்னை தீர ஒரு பரிகாரத்தைத் தயவு செஞ்சு சொல்லுங்க'' அப்படின்னு ஒரு பெண்மணி என்னிடம் ரொம்ப கவலையோடு கேட்டாங்க. அதை கேட்கவே பரிதாபமா இருந்தது. இந்தப் பிரச்னை அவங்களுக்கு மட்டுமென்று எனக்குத் தோணலை. பல குடும்பங்கள்லயும் மேற்சொன்ன பிரச்னைகளில் ஏதாவது ஒண்ணாவது இருந்து கொண்டுதான் இருக்கு.

சரி... இதுக்கு ஒரு பரிகாரத்தைப் பார்க்கலாம். இந்தப் பரிகாரத்துக்கு, 'பஞ்ச ஸங்க்யோபசாரிணி' அப்படின்னு பேரு. அதாவது, ஐந்து வகை உபசாரங்களைக் கொண்டு வழிபடறது.

முதல்ல, உங்க வீட்ல துளசி மாடம் இருந்தா அதை நல்லா பெருக்கி, மெழுகி, கோலம் போட்டு அலங்காரம் பண்ணிக்குங்க. சரியா, சாயங்காலம் ஐந்து மணிக்கு ஐந்து வித பழம், ஐந்து விரலி மஞ்சள், ஐந்து வெத்தலை, ஐந்து பாக்கு, வாடாத, வாசமுள்ள ஐந்து வித பூக்கள் ஒரு ஜாக்கெட் பிட் (கருப்பு, வெள்ளை வேண்டாம்), பச்சரிசி கால் கிலோ மற்றும் பால் பாயசத்தை நைவேத்தியமா படைச்சு, துளசி மாடத்துல விளக்கேத்துங்க.



பிறகு, அந்த துளசி மாடத்துக்கு ஒரு பிரதட்சணம் - ஒரு நமஸ்காரம், இரண்டு பிரதட்சணம் - இரண்டு நமஸ்காரம், மூன்று பிரதட்சணம் - மூன்று நமஸ்காரம், நான்கு பிரதட்சணம் - நான்கு நமஸ்காரம், ஐந்து பிரதட்சணம் - ஐந்து நமஸ்காரம்னு செஞ்சு வழிபடுங்க. பிறகு, அங்கு நைவேத்தியமா வைச்சா எல்லா பொருட்களையும் ஏழை சுமங்கலிப் பெண் ஒருவருக்கு தானமா கொடுத்துடுங்க. முக்கியமா, இந்த வழிபாட்டை கணவன் - மனைவி இரண்டு பேரும் தம்பதி சமேதரா சேர்ந்துதான் செய்யணும். அதுதான் முக்கியம்.

குசேலனா இருக்கறவங்களையும், குபேரனா மாத்தக் கூடிய இந்த வழிபாட்டை செஞ்சு, மேற்சொன்ன பிரச்னைகளிலிருந்து விடுபட்ட சிலரோட அனுபவ உண்மைதான் இந்தப் பரிகாரம்.

அடுத்து, வேலை செய்யற இடத்துல செய்யாத குற்றத்துக்காக அவப்பெயர், சாட்சிக் கையெழுத்துப் போட்டதுல பிரச்னை, வாங்கிய சொத்துல வில்லங்கம் இதுபோன்று


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



நரசிம்மன்






உங்களையும் அறியாமல் உங்களை பாதிக்கின்ற மாதிரியான தொல்லைகளைச் சந்தித்து வருகிறீர்களா? கவலையே படாதீர்கள். உங்க வீட்டு பூஜை அறையில முருகப் பெருமான் படத்தை நல்லா அலங்கரிச்சு, அதற்கு முன்பு அறுங்கோண கோலம் போட்டு, அதன் நடுவில், 'ஓம்' என்றும், ஒவ்வொரு கோணத்துலயும் 'சரவண பவ' என்றும் எழுதி, அதன் நடுவில் தீபம் ஏத்துங்க. பிறகு, அதற்கு முன்பு அமர்ந்து சத்ரு சம்ஹார சுப்ரமணிய திரிசதியை பக்தியோடு பாராயணம் செய்யுங்க. இதனால, மேலே சொன்ன எந்தப் பிரச்னைல அகப்பட்டு நீங்க அவதிப் பட்டாலும் அதிலிருந்து நிச்சயம் விடுபட்டு வெளியே வருவீங்க. ஆனா, நீங்க செய்யற வழிபாடு உளப்பூர்வமானதாக, உண்மையான பக்தியோடு இருக்கணும்.

'சரி, இதை எத்தனை நாள் படிக்கணும்' அப்படிங்கறதுதானே உங்க மனசுல உள்ள கேள்வி. நீங்க, பிரச்னையில இருந்து எப்போது வெளியே வருகிறீர்களோ அதுவரை இந்த திரிசதியை பாராயணம் பண்ணலாம். தப்பில்லை.

அடுத்தபடியா, 24.2.2017 அன்னிக்கு மகா சிவராத்திரி. சிவபெருமானை இன்று இரவு முழுவதும் விரதமிருந்து வழிபட வேண்டிய தினம். வாழ்வில் ஒருமுறையேனும் நமக்காக மட்டுமின்றி, நமது முன்னோர்களுக்காகவும், நம்முடைய சந்ததிகள் நலமுடன் வாழ, புண்ணியம் பெற வேண்டி இந்த விரதம் இருக்க வேண்டியது அவசியம். 'இன்று இரவு நான்கு கால பூஜையிலும் கலந்து கொண்டு ஏழை, எளியோருக்கு உங்களால் இயன்ற தானம் செய்தால், நூறு ஏகாதசி விரதமிருந்த பலனை அடையலாம். அதோடு, சிவபெருமானின் அருளைப் பெற்று குபேர சம்பத்துடன் வாழலாம்' என்கிறது சிவாகமம்.



உங்க வீட்டுல பெண் பிள்ளைங்க யாருக்காவது திருமண வயது ஆகியும் கல்யாணம் தடைபடுகிறதா? அதற்கு ஒரு சிறிய பரிகாரம் இருக்கு செஞ்சு பாருங்க. அரச மரம் மற்றும் ஆலமரம் இரண்டும் ஒண்ணா சேர்ந்தாப்போல இருக்கற இடமாப் பார்த்து, இரவு சுமார் எட்டு மணியளவில் அவை இரண்டுக்கும் புதிதாக வேட்டி கட்டி, தீப மேற்றி, பிரதட்சணம் செய்து வழிபடுங்க. உங்க வீட்டுல விரைவில் திருமணம் நடைபெறும்.

'அரச மரம், ஆல மரம் இரண்டும் ஒண்ணா இருக்கறா மாதிரி அமையணுமே' அப்படின்னு நினைக்கறீங்களா? கவலையேபடாதீங்க. இவற்றில் ஏதாவது ஒரு மரத்தை மட்டும் தேர்ந்தெடுத்துக்குங்க. பிறகு, அதன் அருகில் மற்றொரு மரக் கன்றைக் கூட நட்டு இந்த வழிபாட்டைச் செய்யலாம். தப்பில்லை.

அடுத்தபடியா, நட்சத்திர பரிகார வரிசைல இந்த இதழ்ல பார்க்கப்போற நட்சத்திரங்களுக்கான பரிகாரங்கள்.

**மூல** நட்சத்திரத்துல பிறந்தவர்கள் கொள்ளு தானியத்தை அவித்து, அதில் சுண்டல் செய்து, உங்கள் தலையைச் சுற்றி, அதை ஆலமரத்தடியில் வைத்துவிட வேண்டும்.

**ஸ்லோகம்: 'சங்கர தேசிக சாந்த பூரண அன்னமூல தேவி சஹாய க்ருபே'**

**பூராட** நட்சத்திரக்காரர்கள் மொச்சை தானியத்தை அவித்து, அதில் சுண்டல் செய்து, அதை உங்கள் தலையைச் சுற்றி, வீட்டுக்கு மேற்கில் முச்சந்தியில் வைத்து விட வேண்டும்.

**ஸ்லோகம்: 'அனுதின ஸேவித அச்சுத வரப்பிரஸாத பூராட தேவி சஹாய க்ருபே'**

**உத்திராட** நட்சத்திரத்துல பிறந்தவர்கள் கோதுமை சோறு சமைத்து, அதை உங்கள் தலையைச் சுற்றி விநாயகர் கோயில் எதிரே வைத்து விட வேண்டும்.

**ஸ்லோகம்: 'சேர்க விநாசினி ரத்னாலங்கார உத்திராட தேவி சஹாய க்ருபே'**

அடுத்து, மாணவர்களுக்குத் தேர்வு நெருங்கும் சமயம் இது. அதனால நிறைய பெற்றோர்கள் அவரவர்கள் பிள்ளைகள் தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று, தேர்ச்சி பெற வேண்டும் என்று விரும்புவது இயல்புதானே. மாணவர்கள் படித்ததை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும், தேர்வு சமயத்தில் உடல் ஆரோக்கியத்தோடு இருக்கவும் சொல்ல வேண்டிய சுலோகத்தை அடுத்த இதழ்ல பார்க்கலாம். ◆

www.TheMagnat.com



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

**செவிவழி மனப்பாலில் நாம மோர் ஊற்றும் குருநாதன்தான் மிகப் பெரிய சமையல்காரன். சமைக்க முடியாத ஜன்மத்தைச் சமைத்துக் காட்டும் சமயக்காரன். மாணிக்கவாசகர் குருவும் அதையேதான் செய்தார். ஜீவனைச் சிவனாக்கும், நாம உபதேச உறை மோர் ஊற்றி உலாவ விட்டார்.**





# சிவாய நம எனப் பெற்றேன்!

"உங்கள் பேச்சுக்களைக் குறுந்தகடுகள் மூலம் அடிக்கடி கேட்பேன். சமீபமாகப் புதிய குறுந்தகடுகள் ஏதும் வரவில்லையே ஏன்?'' என்று முக வாட்டத்துடன் கேட்டார் ஒருவர். ''பல காரணங்கள்...'' என்று சொல்லிவிட்டு, ''ஏன் இவ்வளவு அக்கறையுடன் கேட்கிறீர்கள்?'' என்று பதில் கேள்வி தொடுத்தேன். ''நானும் ஒரு சமயச் சொற்பொழிவாளன். இதைக் கேட்டு அப்படியே பேசி விடலாம். பணமும் பாராட்டும் கிடைக்கும். புதுத் தலைப்புகள் வந்தால் தானே நானும் புதுசு புதுசாகப் பேச முடியும்'' என்ற படி தம் பையைக் குடைந்து நான்கைந்து குறுந்தகடுகளை என் மேசையில் போட்டார். நான் பேசும் அதே தலைப்புகளில், அதே விஷயங்களைப் பேசி அட, என்னை மாதிரியே அங்கவஸ்திரம் போட்டுக் கொண்ட அவரது புகைப்படத்துடன், அவரது குறுந்தகடுகள் என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தன.

பிறர் பேச்சைக் கேட்டுப் பேசுவது தவிர்க்க முடியாதது. தவறில்லை. ஆனால், யார் யாரோ பேசியதைக் கேட்டு கிளிப்பிள்ளை மாதிரி அப்படியே திருப்பிப் பேசுவது ஒருவரை ஆன்மிகவாதியாக்கி விடாது. உள்ளிருந்து ஒரு குரல் பேசும். அழுத்தம் திருத்தமாக, ஆணி அடித்த மாதிரி நமக்கு மட்டும் கேட்கும்படி ஒரு தெய்வத்தின் குரல் பேசும். பிடரியைப் பிடித்து உலுக்கிப் பேசுடா பேசு என்று உறுமும். கன்னம் வருடும். காதோரத்தில் சூட்சுமங்களைக் கிசுகிசுக்கும். அதைக் கேட்டுப் பேச முடிந்தால் இன்னும் நல்லது என்று, அவரை வாழ்த்தி அனுப்பி வைத்தேன்.

இன்றைய உபந்யாசகர்கள் பலரும், 'பகவந் நாமாவைச் சொல்லுங்கோ... சத்தமா சொல்லுங்கோ' என்று ஒரு நாடக பாணியில் ரசிகர்களைத் தயார் பண்ணுகிறார்கள். மக்கள் கோவிந்த நாம சங்கீர்த்தனம் என்று நாமா சொன்னால், 'இது அடுத்த தெருவுக்கே கேட்காதே. வைகுந்தத்துக்குக் கேட்க வேண்டாமா...' என்று உசுப்பி விட்டு அடிவயிற்றிலிருந்து தொண்டையைக் கிழித்துக் கொண்டு கத்தும்படி தயார்ப்படுத்துகிறார்கள். நாமம் கூச்சலோ கூப்பாடோ அல்ல. அது மனக்கல்லைப் பிளந்து பக்தி கசிய விடும் அதிசய வெடிமருந்து. மோகத்திலும் மாயா தூக்கத்திலும் செயலற்றுக் கிடந்த ஆத்மாவைத் தட்டி எழுப்பி ஆனந்தத்தில் ஆட விடும் அதிசய சங்கீதம். குழப்பத்திலிருந்து தெளிவுக்கு, இருளிலிருந்து ஒளிக்கு உயிரை உந்தித் தள்ளும் உன்னத ஆற்றல். எத்தனை முறை சொன்னோம் என்கிற எண்ணிக்கை முக்கியமே அல்ல. எந்த நிலையிலிருந்து, எந்த நிலைக்குள் பிரவேசித்தோம் என்கிற மாற்றமே முக்கியம்.

***'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்***
***மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்***
***பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்***
***பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்'***

என்று காதலன் பெயர் கிசுகிசுக்கப்பட்டதும் காதலி அடையும் நெகிழ்ச்சி என்று உவமை சொன்னார் திருநாவுக்கரசர். பைத்தியமாக்குமாம் நாமம். அதைப்


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# சித்தம் அழகியார்!

சொல்வேந்தர் சுகி. சிவம் 09

பிச்சி ஆனாள் என்றார். அடுத்த நான்கு வரிகளில் முக்தி இரகசியமே பரிமாறப்பட்டது. நாமம் என்ன செய்யும் என்பதை அற்புதமாகப் படம் பிடிக்கிறார் அப்பரடிகள். அது பற்றிப் பிறகு பார்ப்போம்.

வடநாட்டில் வாழ்ந்த மகான்களில் ராம நாம மகிமையை உணர்த்தியவர் கபீர். நெசவுத் தொழிலில் வாழ்ந்த அந்த மகாத்மா துணி நெய்து சந்தைகளில் விற்கும்போது, போகிற வருகிற அனைவரையும் பார்த்து, 'ராமா' என்று விளிப்பார். தன்னையும், 'ராமா' என்றே நினைப்பார். துணியும் ராமன்... பாவும் ஊடுமாகப் பரவிய நூலும் ராமன். 'ராமா... ராமனுக்காக ராமனே நெய்தது. குறுக்கும் நெடுக்கும் ராமரே நெசவாகி இருக்கிறார்' என்று நெஞ்சு குழைந்து பேசுவார். நாமம் என்ன செய்திருக்கிறது என்பதற்கு இது ஒரு சின்ன அடையாளம்.

அவர் பிறப்பில் இந்து என்கிறார்கள். ஆனால், முஸ்லிம் தந்தையால் வளர்க்கப்பட்டார். நெற்றியில் இந்து மதச் சின்னம். தலையில் முஸ்லிம் குல்லா என்று கடவுள் மதம் கடந்தவர் என்பதைச் சொல் லாமல் சொன்னார். ஆனால், அவரை இந்துப் பள்ளி களும் படிக்க அனுமதிக்கவில்லை. இஸ்லாமியப் பள்ளிகளும் சேர்க்க நினைக்கவில்லை. முஸ்லிம் தந்தை இந்து நெற்றி என்றதால் பள்ளிக்கூடக் கதவு கள் இறுக மூடிவிட்டன. ஏழு வயதில் ஒரு பள்ளி மட்டும் இளகியது. ஆனால், மூன்றே நாட்களில் மூட் டையைக் கட்டிக் கொண்டு வெளியே வந்து விட்டார். படிக்க மறுத்தார். வருத்தத்துடன் தந்தை, 'மொழியில் உள்ள 52 அட்சரங்களையாவது படித்துவிட்டு வெளி வரக் கூடாதா' என்று புலம்ப, '52 அட்சரங்கள் அநாவசியம் தந்தையே... அவசியமான இரண்டே அட்சரங்கள் 'ராம' என்பதே என் முழு வாழ்க்கைக்குப் போதுமானது. அந்த இரண்டு அட்சரங்களை முழுமை யாகப் படித்து விட்டேன்' என்று ஆனந்தக் கூத்தாடி னார். மற்ற அட்சரங்கள் வீண் என்பது அவரது சித்தாந் தம். எத்தனை பெரிய கதவையும் ஒரு சின்ன சாவி திறந்து விடுவது போல் மோட்ச சாம்ராஜ்யத்தின் மிகப் பெரிய கதவுகளைச் சிறிய ராம நாம சாவியால் திறந்து விட முடியும் என்று நிரூபித்தார். மெத்தப் படித்த மேதாவிகள் பாட முடியாத பாடல்களைப் பள்ளிக்கூடம் போகாத இந்த ஞானி பாடிக் குவித்தார்.

நோட்டுப் புத்தகங்களில் கட்டம் போட்டுக் கொண்டு 1008, 10008 என்று நாமாவை எண்ணி எண்ணி எழுதுகிறார்கள் பலர். எண்ணிக்கையில் இருக்கிற அக்கறை வஸ்துவில் இல்லாமல் போவது மகாவேதனை. ராமானுபவம் என்பதே முக்கிய



அம்சம். **'முருகா என ஓர் தரமோதும் அடியார் முடிமீது இணைதாள் புனைவோன்'** என்கிறார் அருணகிரியார். ஓர் தரம் என்பதை உணர வேண்டும். மின்சக்தி தொடர் பில்லாத ஒயரைக் கோடி முறை தொட்டாலும் ஏதும் நடக்காது. மின்சக்தி பாயும் ஒயரை ஒருமுறை தொட் டால்... எனவே, எத்தனை முறை சொன்னோம் என்று உனக்காச்சு எனக்காச்சு என்று கடவுளுடன் மல்லுக்கு நிற்பதாலோ வைகுந்தம் வரை கேட்கும்படி வாய் கிழி யக் கத்துவதாலோ ஆத்ம சாட்சாகாரம் வந்து விடுமா என்ன? பகவந் நாமா என் ஹிருதயத்தின் இருண்ட பகுதிக்கல்லவா கேட்க வேண்டும்? மிக மிக அண்மை யில் இருக்கும் அந்தர் ஆத்மாவுக்கல்லவா கேட்க வேண்டும்? என்னுடைய நாமம் பொய்... பரமாத்மா வின் நாமம் மட்டுமே மெய் என்றல்லவா ரசாயன மாற்றம் நிகழ வேண்டும். அதைத்தானே திருநாவுக்கரசர்,

**'தன்னை மறந்தாள் தன்நாமம் கெட்டாள்**



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

**தலைப்பட்டாள் நங்கை தலைவன்**
**தாளே'**

என்று நெகிழ்ந்து உரைத்தார்.

நாம சங்கீர்த்தனம் என்னும் உபாசன முறையின் பிரதான பக்தர், மகோன்னத மான மாமனிதர் சைதன்ய மகாபிரபு. அவரது வித்தியாசமான விளக்கத்தை பக்தி உலகம் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு முறை ஒரு கிராமத்தில் பக்தி ப்ரவசனம் செய்தபோது ஓர் அன்பர் எழுந்து, 'சுவாமி யார் சிறந்த பக்தன்' என்ற கேள்வியை எழுப்பினார். சைதன்ய மகாபிரபு, 'இடை விடாமல் எவர் நாமஜபம் செய்து கொண் டிருக்கிறாரோ அவரே சிறந்த பக்தன்' என்று பதில் அளித்தார். பதிலைக் கேட்ட பக்தர்கள் ஆனந்தம் அடைந்தனர். சில மாதங்கள் சென்றபின் அதே ஊரில் மகா



பிரபு ப்ரவசனம் செய்ய நேர்ந்தது பெரிய ஆச்சர்யம். அதே மக்கள், அதே கேள்வியை, அதே மகானிடம் கேட்டனர். 'யார் சிறந்த பக்தன்?' என்று.

தயாரித்து வைத்த சாதாரண பதிலைச் சொல்லும் கிளிப் பிள்ளை உபன் யாசகர் அல்லவே சைதன் யர். ஆனந்த நிலையில் கைகளை உயர்த்தியபடி, 'எவனொருவன் சதாகால மும் பகவன் நாம ஜபத் தில் மூழ்கியபடி தன் னைச் சுற்றி இருக்கும் ஜனங்களையும் நாம ஜபம் செய்யத் தூண்டுகி றானோ அவனே சிறந்த பக்தன்' என்றார். மக்கள்



திகைப்படைந்தனர். திருவருள் சித்தத்தால் மறுமுறை யும் அதே மக்கள் முன்னிலையில் சைதன்யர் ப்ரவச னம் செய்ய நேர்ந்தபோதும் விடாமல் அதே கேள்வி அவரிடம் கேட்கப்பட்டது. சலிப்போ, கோபமோ ஏற் படாத மகாபிரபு அதே பக்தர்களின், அதே கேள்விக்கு ஆழமான, முற்றிலும் வித்தியாசமான பதிலைத் தந்தார். 'எவர் ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் பக்தர் களின் இதயங்களில் இறை நாமம் தானாக உதிக் கிறதோ, எவர் ஒருவர் தன்னைச் சூழ்ந்த யாவருக்கும் அந்த அனுபவத்தை நல்குகிறாரோ அவரே சிறந்த பக்தர்' என்றார். எவன் ஒருவன் சன்னிதியில் பிரவே சித்த மாத்திரத்தில் பகவத் எண்ணம் நமக்கு உண் டாகிறதோ அவரல்லவா உத்தமமான பக்தர். ஒவ் வொரு முறையும் அதே கேள்விக்குத் தயாரித்து வைத்த பதிலைத் தராமல், அந்தராத்மாவில் உதயமாகி உருகி வழிந்தோடும் உணர்வையல்லவா பதிலாகத் தந்தார் சைதன்யர்.

சிவனுடைய நாமத்தைக் கேட்ட மாத் திரத்தில் அடியார்கள் என்ன கதிக்கு ஆளா கிறார்கள் என்பதை மணிவாசகர் திருவெம் பாவையில் உருகி உருகிப் பேசுகிறார். பாருங்கள்...

**'மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய**
**வாழ்த்தொலி போய்**
**வீதிவாய் கேட்டலுமே விம்மி விம்மி**
**மெய்ம்மறந்து**
**போதார் அமளியின்மேல் நின்றும்**
**புரண்டு இங்ஙன்**
**ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே**
**என்னே'**

என்று படம் பிடிக்கிறது திருவாசகம். 'தென்னாடுடைய சிவனே போற்றி, எந் நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்று சொல்லும் மகா வாக்கியத்தில் முதல் வரி சொல்லத் தொடங்கும்போதே தீயில் போட்ட மெழுகாகிவிட்டாளாம் ஒருத்தி.

**'தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகொப்பாய்'** என்கிறது திருவாசகம். ஒரு நாமம் கேட்டவரை இந் தப் பாடுபடுத்த முடியுமா என்ன? அதுதான் நாமஜபம். நாம ப்ரபாவம். குத்துக்கல் மாதிரி உட்கார்ந்து கோடி முறை சொல்லிவிட்டு கொத்சு, இட்லி, பொங்கல், காபி என்று பட்டியல் போட்டு, பஸ்மம் பண்ணி விட்டு ஜோல்னா பை மாட்டியபடி அடுத்தவன் கதை யளந்து விட்டு மனக்குப்பை மாறாமல் வீடு என்கிற நரகம் போகும் ஜன்மங்களுக்கு விளங்கவா போகிறது?

அண்டா நிறைய காய்ச்சிய பால்... பாலின் குணம் மாறாமல் இருந்தாலும் ஒரு சொட்டு... ஒரே ஒரு சொட்டு உறை மோர் விழுந்து விட்டால்... இனி அது பாலே இல்லை. மோரின் முன்னுரை... தயிரின் தலை வாசல்... அதைப் பழைய நிலைக்குப் பாலாக மாற்ற பகவானால்கூட முடியாது. அந்த உறைமோர் தான் நாம உபதேசம்... நாம உச்சாடனம்... நாம சங்கீர்த் தனம்... செவிவழி மனப்பாலில் நாம மோர் ஊற்றும் குருநாதன்தான் மிகப் பெரிய சமையல்காரன். சமைக்க முடியாத ஜன்மத்தைச் சமைத்துக் காட்டும் சமயக் காரன். மாணிக்கவாசகர் குருவும் அதையேதான் செய் தார். ஜீவனைச் சிவனாக்கும், நாம உபதேச உறை மோர் ஊற்றி உலாவ விட்டார். பாட்டைப் பாருங்கள்.

**'நானேயோ தவம் செய்தேன். சிவாயநம எனப்**
**பெற்றேன்**
**தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும்**
**சிவபெருமான்'**

என்கிறது திருவாசகம். பாலை மோராக்கும் பிறை மோர் அல்லவா ஜீவனைச் சிவனாக்கும் நாம உபதேசம்!

**(தொடரும்)**



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



# ஜெயலக்ஷ்மி யாத்ரா சர்வீஸ் (Regd.)

நெ.16/54, கிழக்குமாட வீதி, திருவான்மியூர், சென்னை -41.
ஆபீஸ் போன்: 044 - 24451270, செல் : 94449 80270, 81229 96045
E.mail:jayalakshmi.yatra@gamil.com, www.jayalakshmiyatraservice.com



ஸ்ரீதிருப்பதி வெங்கடேஸ்வர ஸ்வாமி திருவருளால் 24 வருடங்கள் அனுபவத்துடன் வழிநடத்தும் வடஇந்திய மற்றும் தென்இந்திய யாத்திரை

| | | |
|---|---|---|
| 1 | 12.3.2017 | 7 நாட்கள்- பாண்டியநாடு திவ்யதேசம், இராமேஸ்வரம், தேவிப்பட்டிணம், உத்தரகோசமங்கை, ஸ்ரீவில்லிபுத்தூர், மதுரை, நபர் ஒன்றுக்கு ரூ.8500/- |
| 2 | 8.4.2017 | 6 நாட்கள் -சோழ நாடு திவ்விய தேசம் - 40. நபர் ஒன்றுக்கு ரூ.7,500/- |
| 3 | 16.4.2017 | 15 நாட்கள் - நேபாள் முக்திநாத் யாத்திரை - காசி, குஷிநகர், சீதாமரி (சீதாஜென்மஸ்தான்), ஜனக்புரி, தனுஷ்தாம், காட்மாண்டு, பசுபதிநாதர், குஜ்ஜேஸ்வரி சக்தி பீடம், போக்ரா, முக்திநாத் யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.17,000/- (முக்திநாத் சென்று வர விமானம் / ஜீப் கட்டணம் தனி) |
| 4 | 1.5.2017 | 8 நாட்கள் - 55 பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் 274 (133-188) யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.9,500/- |
| 5 | 14.5.2017 | 8 நாட்கள்- மலைநாட்டு திவ்ய தேசம் குருவாயூர், திருச்சூர், அஞ்சயக்களம் (பாடல்பெற்ற சிவாலயம்), வைக்கம், காடந்தேத்தி, ஏத்தமானூர், சோட்டாணிக்கரை, கொடுங்கோளூர், யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.9,500/- |
| 6 | 5.6.2017 | 12 நாட்கள்-விசாகப்பட்டிணம், சிம்மாச்சலம், ஸ்ரீகூர்மம், அரசவல்லி, அன்னவரம், பிட்டாபுரம், சாமல்ல கோட்டா, தாக்ஷாராம், பெனுகுண்டா, அந்தர்வேதி (கோதாவரி சாகர் சங்கமம்), பாலகொள்ளு, பீமாவரம், துவாரகா திருமலா, பத்ராசலம், மள்ளூர், பாசரா, யாதகிரிகுண்டா, அகோபிலம், ஸ்ரீசைலம், அமராவதி, கனகதுர்கா ஆந்திரா, தெலுங்கானா யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.13,500/- |
| 7 | 23.6.2017 | 11 நாட்கள்-மேல்கோட்டை, ஸ்ரீரங்கபட்டிணம், மைசூர், பேலூர், ஹலபேடு, சிருங்கேரி, ஹொரநாடு தங்க அன்னபூரணி, நஞ்சன்கூடு, குக்கி சுப்ரமணியா, தர்மஸ்தலா, கட்டில் துர்கா, உடுப்பி, ஆனே குட்டா கணபதி,கொல்லூர் மூகாம்பிகை,முருடீஸ்வரர், கோகரணம், ஷிமோகா(துங்க பத்ரா சங்கமம்), ஹம்பி, நவபிருந்தாவன், கர்நாடகா யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.12,500/- |
| 8 | 5.7.2017 | 17 நாட்கள் - டெல்லி, அக்ஷர்தாம், அமிர்தசரஸ், வாகாபார்டர், ஜம்மு, வைஷ்ணோதேவி, ஸ்ரீநகர், அமர்நாத், சாமுண்டா, காங்கடா, ஜ்வாலாமுகி, சிந்தபூரணி, நைனாதேவி, குருஷேத்திரா, - யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.20,000/- |
| 9 | 15.7.2017 | 12 நாட்கள் - ஆடி அமாவாசை காசி யாத்திரை - அலஹாபாத், நைமிசாரண்யம், அயோத்தியா, சீதாமரி, விந்தியவாசினி, காசி, கயா - யாத்திரை நபர் ஒன்றுக்கு ரூ.13,500/- |

மேலும் விவரங்களுக்கு நிர்வாகி: K.ரகு 'ஜெயலக்ஷ்மி' யாத்ரா சர்வீஸ் போன்- 99628 22782

www.TheMagnat.com

**சி**வபெருமான் லிங்கத்தில் பிரசன்னமான நாள்.

✱பார்வதி தேவி ஈசனை வழிபட்டு, அர்த்தநாரியான தினம்.

✱அடி, முடி தேடிய விஷ்ணு மற்றும் பிரம்மாவுக்கு சிவபிரான் காட்சி தந்த நாள்.

✱அர்ஜுனன் தவமிருந்து பாசுபதம் பெற்ற நாள்.

✱பகீரதன் தவமிருந்து கங்கையைப் பூமிக்குக் கொணர்ந்த தினம்.

✱மார்கண்டேயனுக்காக எமதர்மனை சிவபிரான் சம்ஹாரம் செய்த நாள்.

✱பக்தன் கண்ணப்பன் தன் கண்களை ஈசனுக்கு தானம் தந்த நாள்.

✱பாற்கடல் கடைந்தபோது வெளிப்பட்ட விஷத்தை சிவபெருமான் உண்ண, அதை விழுங்க முடியாது உமை தடுக்க, இதனால் சிவபிரான் நஞ்சுண்டன், நீலகண்டன் எனப் புகழப்பட்ட நாள்.



✱மகா பிரளயத்தில் உலகம் அழிய, மீண்டும் உலகைப் படைக்க பார்வதி தேவி, சிவபெருமானை நோக்கித் தவம் இருந்த நன்னாள்.

**- கே.குருமூர்த்தி, சென்னை**

### சிவ விரதங்கள்!

**சி**வ விரதங்கள் எட்டு. அவை: திங்கட் கிழமை - சோம வார விரதம், வைகாசி (பூர்வ பட்ச அஷ்டமி) - அஷ்டமி விரதம், ஐப்பசி (தீபாவளி) - கேதார கௌரி விரதம், கார்த்திகை (பௌர்ணமி) - உமா மகேஸ்வர விரதம், மார்கழி - திருவாதிரை விரதம், தைப்பூசம் - பாசுபத விரதம், மாசி - மகா சிவராத்திரி விரதம், பங்குனி உத்திரம் - கல்யாண விரதம். இந்த எட்டு விரதங்களை முறைப்படி அனுஷ்டித்தால் ஆயுள், ஆரோக்கியம், ஐஸ்வர்யத்துடன் வாழலாம்.

**ஆதாரம்: கந்தபுராணம் ஏழாவது காண்டம்**

### சிவ பூஜைக்கு உரிய புஷ்பங்கள்!

**பு**ன்னை, வெள்ளெருக்கு, செண்பகம், பாதிரி, நந்தியாவட்டை, நீலோத்பலம், செந்தாமரை, அலரி போன்றவை சிவபெருமானை வழிபட உகந்த புஷ்பங்கள் ஆகும்.

**- மல்லிகா குரு, சென்னை**

## மகா சிவராத்திரி மகோன்னதம்!



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



பூஜ்யஸ்ரீ ஸ்வாமி ஓங்காராநந்த





# மோக்ஷம் தரும் தியான முயற்சி!



பகவான் ஸ்ரீகிருஷ்ணரிடம் அர்ஜுனன் மனதின் அலைபாயும் தன்மையை விவரித்துக் கூறி, அத்தகைய மனதோடு தியானம் பழகுவது மிகவும் கடினம் என்று கூறினான்.



அதற்கு பகவான், 'நெறிப்படுத்தாத மனதைக் கொண்டு, தியானத்தில் ஈடுபடுவது கடினம். முறையான முயற்சியாலும் பயிற்சியாலும் மனதை நெறிப்படுத்துபவர்களுக்கு, தியான யோகத்தை அடைவது எளிது' என்று பதில் கூறியருளினார்.

தியான யோகம் எனப்படும் இந்த ஆறாவது அத்தியாயத்தில் பகவான் தியானத்தின் ஸ்வரூபம், தியானத்துக்குரிய அக ஸாதனைகள், புற ஸாதனைகள், தியானத்தின் பலன் முதலிய பல்வேறு கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். இத்துடன் இந்த அத்தியாயமானது நிறைவு பெற்றிருக்க வேண்டும். ஆனால், அர்ஜுனன் மேலும் ஒரு கேள்வி கேட்கிறான்.

அர்ஜுந உவாச:

**'அயதி: ஸ்ரத்தயோபேத: யோகாச்சலிதமாநஸ:।**
**அப்ராப்ய யோகஸம்ஸித்திம் காம் கதிம்**
**க்ருஷ்ண கச்சதி॥'**

(ஸ்ரீமத் பகவத்கீதை 6-37)

ஓ... கிருஷ்ணா! ஒருவன் ச்ரத்தை மிகுந்தவனாக இருக்கிறான். ஆனால், அவனுடைய முயற்சி போதுமானதாக இல்லை. சஞ்சலிக்கின்ற மனதினால், தியான யோகத்திலிருந்து நழுவி விடுகிறான். யோகத்தின் பலனாகிய மோக்ஷத்தை அடையாத அவனுடைய நிலை எத்தகையதாக இருக்கும்?

சாஸ்த்ரங்களும் குருமார்களும் எத்தனைதான் உபதேசித்தாலும், நம்மால் இப்பிறவியில் மோக்ஷமடைய முடியாது என்பதே பலரது தீர்மானமான எண்ணமாக இருக்கிறது.

இங்கேயே இப்பொழுதே மெய்யறிவைப் பெற்று, மோக்ஷத்தை உணரலாம். மனிதப் பிறவியே இதற்காகத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று சாஸ்த்ரங்களும் பெரியோர்களும் எவ்வளவு வலியுறுத்திக் கூறினாலும், அதனை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள்.

ஒருசில மஹான்களின் பெயர்களைக் கூறி, அவர்கள் அடைந்த நிலையை நம்மால் ஒருபோதும் அடைய முடியாது என்று கூறுகின்றனர்.

இதற்குக் காரணம் தன்னம்பிக்கையின்மையே ஆகும். வாழ்க்கையின் அறுதிக் குறிக்கோளை அடைய வேண்டுமானால், அதற்கு குருவருள், இறையருள், மறையருள் (சாஸ்த்ர க்ருபா), தன்னுடைய மனதின் அருள் (ஆத்ம க்ருபா) ஆகிய நான்கும் மிக முக்கியம்.

குருவருள், இறையருள், சாஸ்த்ரங்களின் அருள் ஆகிய அனைத்தும் இருந்தபோதிலும், ஒருவன் மனம்



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

**பக்தி உலா வழங்கும் யாத்திரைகள்**

**27.03.2017 முதல் 01.04.2017 : ஆந்திர விஜயம் -** அகோபிலம் நவநரசிம்மர் - யாகண்டி - ஸ்ரீசைலம் - மந்திராலயம் - பஞ்சவடி - லேபாக்ஷி - கதரி நரசிம்மர்

**08.04.2017 முதல் 09.04.2017 : சனி பிரதோஷம் - திருமுறை தலங்களில் - வடகரை தலங்கள் 18 மற்றும் திருநாங்கூர் 11 திவ்யதேசம் விஜயம்**

**13.05.2017 முதல் 21.05.2017 - கர்நாடக விஜயம் -** மைசூர் - நிமிஷாம்பாள் - ஸ்ரீரங்கபட்டணம் - நஞ்சன் கூடு - மேலக்கோட்டை - தலை காவேரி - பாகமண்டலா - சுப்ரமண்யா - தர்மஸ்த்தலா - மங்களூர் - கதிரி - கட்டில் - கொல்லூர் - உடுப்பு - சிருங்கேரி - ஒரநாடு - கலசா - பேலூர்

**09.06.2017 முதல் 19.06.2017 - பண்டரிபுரம் பஞ்சஜோதில்லிங்கமும் ஷிரடி விஜயம்** - பஞ்சவடி - நாசிக் - திரியம்பேகேஷ்வர் - சனிசிங்கனாபூர் - அவரங்காபாத் - எல்லோரா - கிருஷ்ணேஸ்வரர் - கண்ணாடி கோயில் - நாகநாதம் - பரலிவைத்தியநாதம் - பண்டரிபூர் - துல்ஜாபூர் - அஷ்டகணபதிகளில் மார்கானி - தேயூர் - ரன்ஜன்கோன் - வேனியாத்ரி - பிமா சங்கர்

**13.09.2017 முதல் 22.09.2017**

**மாளய அமாவாசையில் பித்ருக்களின் பிரித்திக்காக ஒரு பிரத்யேக பயணம்**

**அலகாபாத் - காசி - கயா விஜயம்**

**பூரண வைதீக ஏற்பாடுகள் செய்து தரப்படுகிறது**

**ரயில் யாத்திரைகளுக்கு 120 நாள் முன்பே முன்பதிவு செய்வது சிறப்பு!!**

விபரங்களுக்கு : **ஆர். பட்டாபிராமன்,** ஒருங்கிணைப்பாளர்

**பக்தி உலா, அசோக் மெடிக்கல்ஸ்,**

10, தண்டீஸ்வரம் மெயின் ரோடு, வேளச்சேரி, சென்னை - 42.

**22434374 - 9042042138 - 9840753969**

**யாத்திரைகள் யாவும் உணவு, தங்குதலுடன்**

www.TheMagnat.com

வைக்கவில்லையென்றால், ஆன்மிக வாழ்வில் முன்னேற முடியாது. சுயமுயற்சியின் அவசியத்தை, முக்கியத்துவத்தை பகவான் பல கோணங்களில் உணர்த்தியிருக்கிறார்.

ஆறாவது அத்தியாயத்தின் துவக்கத்தில்கூட, 'ஒருவன் தன்னைத் தானே உயர்த்திக் கொள்ள வேண்டும், ஒருபொழுதும் தன்னைத் தாழ்த்திக் கொள்ளக் கூடாது' என்று கூறியருளினார்.

பலன் கிடைக்கவில்லை என்று பலர் புலம்புகின்றனர். அதற்குக் காரணம், அவர்கள் போதிய அளவு முயற்சி செய்யவில்லை என்ற உண்மையை அவர்கள் ஏற்க மறுக்கின்றனர்.

இந்தப் பிறவியில் மோக்ஷம் கிடைக்கப்போவதில்லை என்று எண்ணிக்கொண்டு, அடுத்த பிறவி என்னவாக இருக்கும் என்ற சிந்தனையில் ஆழ்ந்து விடுகிறார்கள்.

ஞான யோகத்தில் ஒருவன் காலடியெடுத்து வைத்து விட்டான். ஆனால், போதிய முயற்சியில்லாமல், மோக்ஷத்தை உணராமல் அவனுடைய வாழ்க்கை முடிந்து விட்டது. அவனுடைய நிலை என்னவாக இருக்கும் என்பதே அர்ஜுனனின் கேள்வி.

ஞானத்தின் பலனாகிய மோக்ஷம் ஏற்படவில்லை, கர்மத்தின் பலனாகிய ஸ்வர்கலோகமாவது கிடைத்திருக்குமா? என்றால், அதற்கும் வழியில்லை. ஞான யோகத்தின் பொருட்டு, கர்மங்களைத் துறந்துவிட்டு, இதற்கு நேரம் ஒதுக்கியிருக்கிறான்.

எனவே, கர்மத்தின் பலனும் கிடைக்காமல், ஞானத்தின் பலனும் கிடைக்காமல் த்ரிசங்குவைப் போன்று நடுவில் மாட்டிக் கொண்ட நிலையில் இருப்பவனைப் பற்றித்தான் அர்ஜுனன் கேட்கிறான்.

ஆன்மிகப் பாதையில் தொடர்ந்து இடைவிடாத முயற்சியில் ஈடுபடும்பொழுது, மூன்றுவிதமான தடைகள் ஏற்படுகின்றன. ஆத்யாத்மிக தடைகள் (உடல் நிலை, மனநிலை போன்று தனக்குள்ளிருந்து ஏற்படுகின்ற தடைகள்), ஆதிபௌதிக தடைகள் (குடும்பம், சமூகம் போன்ற புறச்சூழல்களால் ஏற்படுகின்ற தடைகள்), ஆதிதைவிக தடைகள் (இயற்கைச் சீற்றங்கள், பேரிடர்கள் போன்றவற்றால் ஏற்படும் தடைகள்).

எத்தனை தடைகள் வந்தாலும், அவற்றால் கலக்கமடையாது, தொடர்ந்து முயற்சியில் ஈடுபடுவதே அறிவாளியின் செயல்.

அடுத்த சுலோகங்களில் அர்ஜுனன் தன்னுடைய கேள்வியை மேலும் விவரிக்கிறான். அவற்றையும் அதற்கு பகவான் கூறும் பதிலையும் அடுத்த இதழில் காண்போம்.

**(தொடரும்)**



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

புத்திர பாக்கியம் வேண்டுவோர், ரோஹிணி நட்சத்திரத்தன்று தம்பதி சமேதராக வந்து ஸ்ரீ வேணுகோபாலன் சன்னிதியில் பசு வெண்ணெய், அவல், சர்க்கரை வைத்து மாலை ஆறு மணி பூஜையின்போது பிரார்த்தித்துக் கொள்கின்றனர்.





www.TheMagnat.com

# சௌந்தர்யம் தரும் பெருமாள்!



திண்டுக்கல்லிலிருந்து சுமார் பத்து கி.மீ. தொலைவில், கரூர் செல்லும் சாலையில், தாடிக் கொம்பு கிராமத்தில் அமைந்துள்ளது சவுந்திரவல்லித் தாயார் உடனுறை அருள்மிகு சவுந்தரராஜப் பெருமாள் திருக்கோயில். ''சகல சௌந்தர்யங்களையும் எங்களுக்கு அள்ளித் தந்து கொண்டேயிருக்கிறார் எங்கள் சவுந்தரராஜப் பெருமாள்'' எனக் கூறுகின்றனர் திண்டுக்கல் மாவட்டம், தாடிக்கொம்பு சுற்று வட்டார கிராம பக்தர்கள்.

சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் விஜயநகர ஆட்சி வழி வந்த அச்சுத தேவராயர் காலத்தில் இத் திருக்கோயில் நிர்மாணிக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது. மிகவும் அதி நுண்ணிய கலை வேலைப்பாடுகள் நிறைந்த கற்சிற்பங்கள் அமைந்துள்ள அழகிய திருக்கோயில் இது. சிற்ப அழகு ஒருபுறமும், சிந்தை குவிந்து வேண்டிக் கொள்வோரின் பிரார்த்தனைகள் உடனே பலிதமாவது மற்றொரு புறமுமாக பக்தர்களை எப்போதும் தம் வசம் ஈர்த்துக் கொண்டேயிருக்கிறார் ஸ்ரீசவுந்தரராஜப் பெருமாள்.

ஐந்து நிலை ராஜகோபுர முகப்புடன் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது திருக்கோயில். பித்தளை பூண் பூண்ட கம்பீரமான கொடி மரம். பிராகார மூர்த்திகளாக ரெட்டை விநாயகர், ஹயக்ரீவர், சரஸ்வதி, விஷ்வக்சேனர், நம்மாழ்வார். உள் பிராகாரத்தில் தன்வந்த்ரி பெருமாள், லட்சுமி நரசிம்மர், ஆண்டாள், ஆஞ்சநேயர். வடகிழக்கு மூலையில் சுவர்ணாகர்ஷன பைரவர். உட்பிராகாரத்துக்கு வெளியே சக்கரத்தாழ்வார், வேணுகோபால ஸ்வாமிகள் சன்னிதிகள் அமைந்துள்ளன.


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



ஸ்ரீரங்கம் **திருநாவுக்கரசு**



தம்மைச் சுற்றிலும் அனைத்து திருமூர்த்திகளையும் அமர்த்திக் கொண்டு, நாடி வரும் பக்தர்களுக்கு அனைத்துவித சௌந்தர்யங்களையும் அள்ளி அள்ளித் தந்து கொண்டே இருக்கிறார் இந்த சவுந்தரராஜப் பெருமாள்.

நின்ற திருக்கோலத்தில் அருள்பாலிக்கும் சவுந்தர ராஜப் பெருமாள், ஸ்ரீதேவி பூதேவி தாயாருடன் இணைந்து கருவறையில் எழுந்தளியுள்ளார். சவுந்தர வல்லித் தாயார் தனிச் சன்னிதி கொண்டு அருள்பாலிக் கிறார். தாயார் சன்னிதியின் முன்பு உள்ள மண்டபத்தில் பதினான்கு கல் தூண்கள் காட்சியளிக்கிறது. எதி ரெதிரே அமைந்துள்ள அந்தக் கல் தூண்களில்தான், கண்களையும் கருத்தையும் கவரும் கலை வேலைப் பாடுகள் கொண்ட மிக அழகிய சிற்பங்கள் காட்சி தருகின்றன. எதிரெதிரே ரதி - மன்மதன் உட்பட பலப் பல தெய்வ சிற்பங்கள்.

சரஸ்வதி - ஹயக்ரீவர் சன்னிதியில் திருவோண நட்சத்திரத்தன்று, மாலை ஆறு மணிக்கு தேன் வைத்து பூஜை நடைபெறுகிறது. நோய் நாடி நோய் முதல் நாடும் தன்வந்திரி பெருமாள் சன்னிதியில் அமாவாசையன்று மாலை நேரத்தில் அபிஷேக அலங்காரம். பக்தர்களுக்கு லேகியம் தைலம் பிரசா தம். பௌர்ணமி, பிரதோஷம், சுவாதி நட்சத்திரம் போன்ற தினங்களில் லட்சுமி நரசிம்மருக்கு சிறப்பு பூஜை. மன வேதனை, மனச்சங்கடம், கடன் சார்ந்த பிரச்னைகளைத் தீர்த்து வைக்கிறார் இந்த லட்சுமி நரசிம்ம பெருமாள்.

இக்கோயிலில் உள்ள ஆண்டாள் சன்னிதி மிகப் பிரசித்தி வாய்ந்தது. ஒவ்வொரு வாரமும் வியாழக் கிழமை அன்று நடைபெறும் நான்கு கால பூஜையிலும் திருமணத் தடை பரிகார பிரார்த்தனை பூஜை செய்யப் படுகிறது. திருமணம் கைகூடி வராத ஆண்களும், பெண்களும் ஆண்டாள் சன்னிதி எதிரே அமர்ந்து பிரார்த்தித்துக் கொள்கின்றனர். பூஜை நிறைவு பெற்று அவர்கள் அணிந்திருக்கும் கழுத்து மாலையினை ரதி - மன்மதனுக்கு அணிவித்து அவர்கள் பிரார்த்தனை யினை பூர்த்தி செய்கின்றனர். தொடர்ந்து ஐந்து வாரங் கள் இதுபோன்று பிரார்த்தித்துச் செல்லும் பெண் களுக்கும் ஆண்களுக்கும் திருமணம் கைகூடி வருவ தாக ஐதீகம்.



தேய்பிறை அஷ்டமி தினத்தன்று, ஸ்வர்ண ஆகர் ஷன பைரவர் சன்னிதியில் ஆறு கால பூஜை நடை பெறுகிறது. இப்பெருமானை வழிபடுவோரின் தீராத வழக்குகளைத் தீர்த்து வைத்தும், வராத கடன்களை வசூலித்துத் தந்தும் அருள்பாலிக்கிறார் இந்த பைரவர். புத்திர சந்தான பாக்கியம் வேண்டுவோர், ரோஹிணி நட்சத்திரத்தன்று தம்பதி சமேதராக வந்து ஸ்ரீ வேணு கோபாலன் சன்னிதியில் பசு வெண்ணெய், அவல், சர்க்கரை வைத்து மாலை ஆறு மணி பூஜையின்போது பிரார்த்தித்துக் கொள்கின்றனர்.

இத்தனை சௌந்தர்யங்களையும் தம்மைச் சுற்றி லும் அமைந்துள்ள பிராகார மூர்த்திகள் வாயிலாக, தம்மை நாடி வரும் பக்தர்களுக்கு அள்ளி அள்ளித் தந்தருளிக் கொண்டேயிருக்கிறார் சௌந்தரராஜப் பெருமாள்.

மதுரை, கள்ளழகர் பெருமாளே இங்கும் எழுந் தருளியிருப்பதாக இப்பகுதி மக்கள் கருதுகிறார் கள். சித்ரா பௌர்ணமி அன்று கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கி பக்தர்களுக்கு சேவை சாதிக்கின் றார். அதுபோலவே, தாடிக்கொம்பு சவுந்தரராஜப் பெருமாளும் சித்ரா பௌர்ணமி அன்று பட்டு உடுத்தி குதிரை வாகனத்தில் எழுந்தருளி, அருகி லிருக்கும் குடகனாற்றில் இறங்கி பக்தர்களுக்கு சேவை சாதிக்கின்றார். ◆

https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge





# மனத்தைக் கவரும் மாளிகைத் தேவர்!

திருவாவடுதுறைக்கு அருகே இருந்த பேட்டை அது. திடீரென அரச பரிவாரங்களோடு முகாம் ஒன்று அங்கே முளைத்திருந்தது. தலைமை தாங்கி நடத்தி வந்தவன் சிற்றரசனான நரசிங்கன். அடிக்கடி அவன் வந்து தங்கும் இடம்தான். அதனாலேயே அந்த இடத்துக்கு, 'நரசிங்கன்பேட்டை' என்றே பெயர். பல்லவ மன்னன் காடவர்கோன் கழற்சிங்கனுக்கு கப்பம் கட்டும் சிற்றரசன் இந்த நரசிம்மன். அதனால்தான் கப்பம் கட்டப்போகும் வழியில் இங்கே தங்கி இளைப்பாறுதல் அவன் வழக்கமாயிற்று!

நரசிங்கன் வந்து முகாமிட்டிருக்கிறான் என்று தெரிந்ததும் திருவாவடுதுறையில் இருந்தவர்கள் அவனைப் பார்க்க விரைந்தார்கள். என்றுமில்லாத விரைவு இன்று மட்டும் ஏன்? காரணம் இருந்தது! அவர்கள் சாதாரணமாக வரவில்லை, கையோடு ஒரு புகாரையும் எடுத்து வந்திருந்தனர். அது, கேட்டவுடன் கதிகலக்கும் மோசமான புகார்தான்!

அப்படி என்ன புகார்? அந்தத் திருவாவடுதுறையில் திருமாளிகைத்தேவர் என்று ஒருவர். அவர் எவருக்கும் தெரியாமல், அங்குள்ள பிள்ளைப் பேறற்ற பெண்களின் கற்பைப் பாழ்படுத்தி வருகிறாராம்! இந்த விபரீதத்தைத் தடுக்க வேண்டும்; திருமாளிகைத் தேவரை தண்டிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள் அவ்வூர்க்காரர்கள்.

புகாரைக் கேட்டதும் நரசிங்கன் அதிர்ந்துதான் போனான். கோபம் கிளர்ந்தது. அடுத்த நொடி வீரர்களை அழைத்தான். ''ம் இவர்களோடு செல்லுங்கள். இவர்கள் கைகாட்டும் அந்தக் கொடியவனைக் கட்டி இழுத்து வாருங்கள்'' என்று ஆணையிட்டான்.

வீரர்களும் விரைந்தார்கள். வந்தவர்கள் சுட்டிக் காட்டிய திருமாளிகைத் தேவரை அவர்கள் நெருங்கினார்கள். அவர்களின் நோக்கத்தை அறிந்த மாளிகைத் தேவரோ, ''ஆகட்டும் ஆகட்டும்! கட்டிக் கொண்டு செல்லுங்கள்'' என்று மந்திரம் போல் சொன்னார். மென்மையாக ஒலித்த அந்த வார்த்தைகளே வீரர்களை மதி மயக்கியது. அவர்கள் தாங்களாகவே ஒருவரை ஒருவர் கட்டிக் கொண்டனர். கட்டுண்டு தள்ளாடிய படியே நரசிங்கனுக்கு முன் சென்று நின்றனர்.

அவர்களைக் கண்டதும் நரசிங்கனுக்குக் கோபம் தலைக்கேறியது. கோபத்தின் கடுகடுப்பை சிறிதும் விலக்காமலே, சேனாபதியை அழைத்தான். ''அந்தக் கொடியவன் சிந்தையை மயக்குவன் போலுள்ளது. அவனைச் சிதைத்து விடுங்கள். அவன் உயிருடன் இருக்கக் கூடாது'' என்று கட்டளையிட்டான்.

நடந்ததை எல்லாம் படபடப்புடன் பார்த்துக் கொண்டிருந்த சேனாதிபதி, வீரர்கள் சிலரை அழைத்துக் கொண்டான். ''அவன் தலையைச் சீவி வருகிறேன்'' என்று வீம்பாகப் புறப்பட்டான்.

திருமாளிகைத்தேவர் புதிதாக வந்த படையினரைப் பார்த்தார். புன்னகைத்தார். ''ஓ! என் தலையை வெட்டிக் கொண்டு செல்லத்தானே வந்தீர்கள்! சரி... வெட்டிக் கொண்டு செல்லுங்கள்'' என்று அமைதியாகக் கூறினார். அவரது அமைதியான பேச்சு, சேனாதிபதிக்கு என்னவோ போலிருந்தது. ஆனால், மந்திரத்துக்குக் கட்டுப்பட்ட மாயம் போல், வீரர்கள் தாங்கள் வைத்திருந்த வாள்களால் ஒருவருக்கொருவர் தங்களாகவே வெட்டி மாண்டார்கள். சேனாதிபதி திகைத்தான். உயிருடன் மீண்ட ஓரிருவர் விழுந்தடித்து ஓடினர். நரசிங்கனிடம் சென்று கலவரக் குரலில் அழுது தீர்த்தனர்.



இதைக் கேட்ட நரசிங்கனுக்குக் கடுங்கோபம் மூண்டது. தானே கிளம்பினான். அவனும் மந்திரங்களில் கைதேர்ந்தவன்தான். 'அப்படி என்ன மந்திர மாயங்களை அவன் காட்டுகிறான் பார்க்கிறேன்' என்று வீராவேசமாகக் கிளம்பிவிட்டான். சிவ அனுபவத்தில் திளைத்த சித்த புருஷரான

https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

சுப யாத்ரா



ஷிரிடி சாயி பாபா தரிசனம்
விமானம் (2 நாட்கள்) ரூ. 10,000
ரயில் (4 நாட்கள்) ரூ. 5,000 | 12.03.2017 | 16.04.2017



காசி-அலகாபாத்-கயா (5 நாட்கள்) ரூ. 28,000
விமானம், ஏசி பஸ் தங்குமிடம் மற்றும் உணவு
ரயில் (7 நாட்கள்) ரூ. 15,000 | 05.03.2017 | 16.04.2017

பத்ரிநாத்-கேதார்நாத் (7 நாட்கள்) ரூ. 30,000
விமானம், ஏசி பஸ் தங்குமிடம் மற்றும் உணவு | 17.05.2017 | 07.06.2017





வைஷ்ணவ தேவி (6 நாட்கள்) உணவு உட்பட
விமானம் | 02.04.2017 | ரூ. 30,000

மேலும் விவரங்களுக்கு : சுப யாத்ரா
43, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர், சென்னை - 4.
Tel. : 2495 2319 / 2495 0218 | Email : shubhyatra.m@gmail.com

www.TheMagnat.com

திருமாளிகைத்தேவர் அவர் என்பதை அவன் அறிந்திருக்கவில்லை! உருவிய வாளுடன், உடன் தன் படையும் வர, விரைந்தான் திருவாவடுதுறைக்கு!

திருவாவடுதுறையில் இருந்த மாசிலாமணி ஈஸ்வரர் கோயில், மிகப் பிரமாண்டமானது. மதில்களோ மிகப் பெரிது. அவற்றின் மேல் நிலைத்திருந்த நந்திகளோ அற்புதம்தான். இங்கே நரசிங்கனின் படைகள் உள்ளே புகுந்தபோது, அந்த நந்திகள் திடீரென உயிர் பெற்றன. பூதகணங்களும் திடீரென உயிர்பெற்று எல்லாம் ஒன்றாகிக் கலந்து கிளம்பின. காளைகள் படையென களத்தில் புக, நரசிங்கனின் படைகள் செய்வதறியாது திகைத்தன. அப்படையை காளைப் படை நாசம் செய்ய, மன்னன் நரசிங்கனையும் மந்திரியையும் பூத கணங்கள் கட்டித் தூக்கி, திருமாளிகைத் தேவரின் முன் நிறுத்தின. யோசித்துக் கொண்டிருந்தபோதே, அந்தக் காளை வடிவங்கள் நந்தி உருவங்களாகி அங்கிருந்து மறைந்தன.

எல்லாவற்றையும் இமைகொட்டாமல் திகிலுடன் பார்த்துக் கொண்டிருந்த நரசிங்கனுக்கு உடல் ஆட்டம் கண்டது. என்ன மாயம் இது. யார் இவர்? யோசித்துக் கொண்டே திருமாளிகைத் தேவரைப் பார்த்தான். அவரோ சிவனே என்று, நடந்ததற்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றவாறு



அமர்ந்திருந்தார். அவரின் தவ நிலை, நரசிங்கனுக்கு பல உண்மைகளைப் புரிய வைத்தது. தாம் நினைத்த மாதிரி மந்திரவாதி இல்லை இவர் என்பதை உணர்ந்தான். அவர் மிகப்பெரும் சித்த புருஷன் என்பதை அறிந்தான். உடனே, அவர் கால்களில் விழுந்தான். ''சித்தர் பெருமானே, தங்களது மகிமையை உணர்ந்தேனில்லை. மாபெரும் தவறு செய்யத் துணிந்தேன். என்னை மன்னியுங்கள்'' என்று மன்றாடினான்.



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



நரசிங்கனை அமைதிப்படுத்திய திருமாளிகைத் தேவர், ''நரசிங்கா... நீ எதற்காக என்னை தண்டிக்க நினைத்தாய்? என் மீதான புகார் என்ன? சொல்கிறேன் கேள்! எவர் ஒருவர் தன் மனத்தில் இடைவிடாமல் ஒன்றை நினைத்துக் கொண்டே இருக்கிறார்களோ, அதுவே நெஞ்சில் பதிந்து நிற்கும். அதன் தன்மை அப்படியே அவர்களுக்குள் வெளிப்படும். இதுதானே மனத்தின் நிலை. ஆத்திகக் கருத்தின் அடிப்படை!

குழந்தைப் பேறில்லாத பெண்கள் என்னை மனத்தால் தியானித்தனர். என்னை அன்புடன் அவர்களின் மனத்தில் நினைத்தனர். அதனால் அவர்களுக்கு என் முகச் சாயலில் குழந்தைகள் பிறந்தன. இதில் யார் மீதும் தவறு இல்லை. என் மீது புகார் சொன்னவர்களின் பேச்சைக் கேட்ட நீ, அந்த நேரமே என்னையும் அழைத்து, உன் மீதான புகார் உண்மைதானா எனக் கேட்டிருந்தால், இந்தப் பிரச்னை வந்திருக்காது. நீ வாதிகளின் பேச்சைக் கேட்டாய், பிரதிவாதியை அழைத்துக் கேட்க வேண்டும் என்று உனக்குத் தோன்றாமல் போனதே! நீ ஓர் அரசன் அல்லவா! நீ இப்படிச் செய்யலாமா? இனியாவது இப்படிப்பட்ட தவறுகளைச் செய்யாதே! நீதியை நிலைநாட்டு!'' என்று அறிவுரை வழங்கினார். அமைச்சரையும் நரசிங்கனையும் பீடித்திருந்த கட்டுகளிலிருந்து விடுவித்து, இருவரையும் ஆசீர்வதித்து திருப்பி அனுப்பினார்.

இந்தக் காரணத்தால்தான், திருவாவடுதுறை மாசிலாமணீஸ்வரர் திருக்கோயிலில் மதில் மேல் இன்றும் நந்திகள் இல்லாமல், வெறுமையாக இருப்பதை நாம் காணலாம்! இப்படிப்பட்ட பெருமைக்கு உரியவராகத் திகழ்ந்தவர் சித்தர் திருமாளிகைத் தேவர். சித்தருள் சிறந்த போகரின் மாணாக்கர்களில் ஒருவர்! ஏன் இவருக்கு இப்படி ஒரு பெயர் ஏற்பட்டது?

திருவாவடுதுறை - நவகோடி சித்தர்புரம் என்ற பெயர் கொண்ட திருத்தலம். இங்கேதான் சித்தர் போகர் ஞான யோக சாதனை செய்து வந்தார். இவருடைய சீடர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் திருமாளிகைத்தேவர். இவருடன் போகரின் சீடர்களில் ஒருவராகத் திகழந்தவர்தான் கருவூர்ச் சித்தர்.

ஆதியந்தமற்ற சிவபெருமானின் ஐந்து திருமுகங்களில் இருந்து ஆதிசைவர்கள் தோன்றினர் என்பர். அவர்கள் பரி ஏறும் பெரியர், தெய்வப்படிமப் பாதம் வைத்தோர், மாணிக்கக்கூத்தர், குருராயர், சைவராயர் எனப்படுவர். ஐந்து கொத்தாருள் ஒருவரான சைவராயர் வழியில் வந்தவர்தான் திருமாளிகைத் தேவர். இவரின் முன்னோர் வாழ்ந்த மடம் மாளிகை மடம் (பெரிய மடம்), திருமாளிகை எனப்பட்டது. அம்மடத்தின் சார்பால் இவர் திருமாளிகைத் தேவர் எனப்பட்டார். இவர்கள் சோழ மன்னர்களுக்கு தீட்சா குருவாக விளங்கியவர்கள். அந்த அடிப்படையில் திருமாளிகைத் தேவரும் சோழ அரசருக்கு குருவாக இருந்தார்.

தாம் பிறந்த மரபின்படி, காலை அனுட்டானங்களை முடித்து, ஈசன் ஆலயம் சென்று, பெருமானையும் அம்பிகையையும் தொழுது, பெருமான் நைவேத்தியத்தை உண்டு, தினசரி கடமைகளைச் செய்து வந்தார். அரண்மனையில் அரசருடன் இருந்தபோதும், அவர் மனம் பெருமானிடமே லயித்திருந்தது.

ஒரு நாள், சித்தர் போகர் திருவாவடுதுறை வந்திருப்பதை அறிந்து அவர் அடி பணிந்தார். சித்த புருஷரான போகர், சித்துக்களில் கரை கண்டவர். ஆகம நுட்பங்கள் அறிந்தவர். ஆலய வழிபாட்டின் மாட்சிமையை அகிலம் பரப்பியவர். சிவ தத்துவங்களை உள்ளபடி எடுத்தியம்புவர் என்றெல்லாம் அறிந்த திருமாளிகைத்தேவர், அவரிடம் பணிந்து தமக்கு உபதேசம் நல்க வேண்டும் என்று கோரினார்.

www.TheMagnat.com

திருமாளிகைத் தேவரின் அதிதீவிரப் பக்குவ நிலை அறிந்த போகரும், அவருக்கு ஞான வழிபாட்டின் உள்ளர்த்தத்தை உபதேசித்து, ஞான நூல்களின் தத்துவங்களையும் போதித்தருளினார். போகர் காட்டிய வழியை விடாமற் பிடித்து, தம் தவ வாழ்க்கையைத் தொடர்ந்தார் திருமாளிகைத் தேவர். அந்தத் தவ நெறியால், அவர் உடலும் உள்ளமும் ஜொலித்தது. உடல் தங்கம் போல் மின்னியது. முக வசீகரமும் உடல் வன்மையும் பெற்ற திருமாளிகைத் தேவரைக் கண்டு எல்லோருமே ஆச்சரியப்பட்டனர். ஆண்கள் அந்த அழகில் மயங்கினர் என்றால், பெண்களோ வசீகரிக்கப்பட்டு அவர் உருவத்தை மனத்தில் பதிந்தனர். அந்தக் காரணத்தால், பிள்ளைப் பேறு இன்றித் தவித்த பெண்கள் எல்லாம், பெருமான் அருளால் அவர் உருவம் பதியப்பெற்று, அவர் முக சாயலிலேயே குழந்தைகளைப் பெற்றெடுத்தனர். இதைக் கண்ட அப்பெண்களின் கணவர்களோ, தங்கள் மனைவியர் பேரில் சந்தேகம் கொண்டனர். இதனாலேயே அவரைத் தீர்த்துக் கட்ட வேண்டும் என்ற எண்ணத்தில் அங்கே வந்த மன்னன் நரசிங்கனிடம் முறையிட்டனர்.

ஆனால், திருமாளிகைத் தேவர் பெரும் சித்த புருஷர் என்பது, அவர் செய்த அற்புதங்களால் உள்ளூர் மக்களுக்கே ஒரு நாள் தெரிய வந்தது.

**(தரிசனம் தொடரும்)**




https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



# சொந்தம் எப்போதும் தொடர்கதைதான்...



ஸ்ரீராமர், யுத்தத்தில் தமது கையால் அரக்கர்கள் பலர் மடிந்ததற்கு பிராயச்சித்தமாக தீர்த்த யாத்திரை சென்றார். அங்கு, தாமிரபரணி சங்கமமாகும் இடத்தில் ஒரு கன்னிகை பூமாலையுடன் தனக்காகக் காத்திருப்பதை அறிந்தார். அவளிடம் சென்று, ''உனது தந்தை சொற்படி சுஸேந்திரரை மணம் புரியாமல், ஏகபத்னி விரதனான எனக்காகக் காத்திருப்பது தகுமா?'' என வினவினார்.

அந்தக் கன்னிகை, ''பிரபோ! விவாகம் மனம் சம்பந்தப்பட்டது. எனது அன்னை என் திருமணத்துக்காக பல ஆண்டுகள் சேகரித்ததை எனது பிதா சமுத்திரத்தில் கொட்டி விட்டார். அதுபற்றி வருத்தமில்லை. எனது வாழ்வில் திருமணம் நடக்குமானால் அது தங்களோடுதான்'' என ஆணித்தரமாகக் கூறினாள்.

''பெண்ணே! மறுபிறவியில் நீ ஜாம்பவான் என்ற கரடியின் மகளாகப் பிறப்பாய். அப்போது உனக்கு மாலையிடுவோம்'' என்றார் ரகுகுலோத்தமர். மங்கை ஸ்ரீராமரை வணங்கி தவத்தைத் தொடர, ஸ்ரீராமபிரான் தீர்த்த யாத்திரையைத் தொடர்ந்தார்.

கிருத யுக முடிவில், மாயாபுரியில் தேவசர்மா என்ற அந்தணர் இருந்தார். சகல சாஸ்திர விற்பன்னர். ஆத்ரேய கோத்திரத்தில் பிறந்த அவரது மகள் குணவதி, அழகிலும், அறிவிலும் சிறந்தவள். அவளைத் தனது சீடன் சந்திரனுக்கு மணமுடித்தார். அக்காலத்தில் மங்கை ருதுவாகுமுன் விவாகம் செய்விப்பது வழக்கம். தேவசர்மா, சந்திரனுடன் சமித்துக்கள் சேகரிக்க இமயமலை சென்றார். அங்கே ஓர் அரக்கன் அவர்களை அடித்துக் கொன்று இரையாக்கிக் கொண்டான்.

இதைக்கேட்ட குணவதி, தவசியாய் வாழ்ந்தாள். சித்திரை மாதம் அயோத்தி வந்து சரயூ நதியில், ராம தீர்த்தத்தில் நீராடினால் மோக்ஷமென்று கேட்டு அங்கு வந்தாள். ஸ்ரீராமர் அங்கிருப்பதை அறிந்து அவரைத் தரிசிக்க விரும்பினாள். அப்போது, சீதையோடு சொக்கட்டான் ஆடிக் கொண்டிருந்த ஸ்ரீராமரை நமஸ்கரித்த குணவதி, ''ரகுகுல திலகரே! தங்களுக்குப் பணிவிடை செய்யும் தாதிகளில் ஒருவளாய் என்னை நியமிக்க வேண்டுகிறேன்'' என்று இறைஞ்சினாள்.

''பெண்ணே! நீ அந்தண குலத்தவள். உன் தந்தை தேவசர்மா துவாபர யுகத்தில் சத்ராஜித் என்ற அரசனாகப் பிறக்கப்போகிறான். சந்திரன் அக்ரூரன் என்ற பெயரோடு விளங்குவான். சத்யபாமையாக உதிக்கும் உன் ஆசை அப்போது நிறைவேறும்'' என்றருளினார். குணவதி ஹரித்வாரில் நெடுங்காலம் தங்கியிருந்து அங்கேயே உயிர்த் தியாகம் செய்தாள்.

ஒருசமயம் ஸ்ரீராமர் வேட்டையின்போது சிங்கம் ஒன்றைத் துரத்திக் கொண்டு ஒரு குகைக்குள் பிரவேசித்தார். அங்கே ராம பாணத்தால் அடிபட்ட சிங்கம் சாபம் நீங்கி வித்யாதரனாகி தேவலோகம் சென்றது. அந்தக் குகை அவரை மற்றொரு குகைக்கு இட்டுச் சென்றது. அங்கே நான்கு பெண்கள் எலும்பும், தோலுமாய் தவம் புரிந்தனர். அவர்கள் முன் தோன்றி, ''யாது வரம் வேண்டும்?'' என்று கேட்டார் ஸ்ரீராமர். அவர்கள், ''துந்துபி என்ற அசுரன் இறந்து விட்டானா? தாங்கள் யார்?'' என ஹீனஸ்வரத்தில் கேட்டனர். ஸ்ரீராமர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, ''துந்துபி வாலியால் மாண்டான். வாலி என் கையால் மடிந்தான். நான் தொட்டதும் தாங்கள் இளமையும், வலிமையும், சௌந்தர்யமும் பெற்றீர்கள்'' என்றார்.

அவர்கள் மகிழ்ச்சியுடன், ''பிரபு! எங்களைப் போல் துந்துபியால் கவர்ந்து வரப்பெற்ற 16,000 பெண்கள் சற்றுத் தொலைவில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களையும் தாங்கள் காப்பாற்ற வேண்டும்'' எனப் பிரார்த்தித்தனர். அவ்வாறே செய்தார் ஸ்ரீராமபிரான். அவர்கள் அவரையே பர்த்தாவாக வரிக்க, ''கிருஷ்ணாவதாரத்தில் தங்கள் அனைவரையும் திருமணம் செய்து கொள்கிறேன்'' என்று வரமளித்து அவ்விடம் விட்டு அயோத்தி சென்றார் ஸ்ரீராமர்.

**– ஆனந்த ராமாயணம். இராஜ்ய காண்டம்**



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# கொடிமரம் அமையாத ஆலய தெய்வங்களுக்கு சக்தி குறைவா? கொடிமரத்துக்கு என்ன முக்கியத்துவம்?



– ரா.பாஸ்கரன், பெங்களூரு



**சா**ஸ்திரங்களில் ஓர் ஊர் என்று எடுத்துக் கொண்டால், அந்த ஊரில் எவ்வளவு பேர் வசிக்கிறார்கள் என்பதை வைத்துத்தான் அந்த ஊரின் ஆலய நிர்மாணம் அமைந்தது, அந்த ஆலயத்தின் சக்தி மக்களுக்குப் போய்ச் சேர்வதற்காக! கர்ப்பக்ரஹம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் என்றெல்லாம் சொல்வார்கள். இதெல்லாம் பார்த்தாலே, இந்த ஊரில் இத்தனை பேர் இருந்திருக்கிறார்கள் அல்லது இருக்கிறார்கள் என்பது நமக்குப் புரியும். அப்படி மண்டபங்கள் அமைக்கும்போது, கோயில் ஆகம சாஸ்திரங்களில் இந்தந்த இடத்தில் இன்னின்ன தேவதைகள் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இப்படி பல சன்னிதிகள் வரும்போது, துவஜஸ்தம்பம் வந்து விடும். அதாவது, கோயில் உத்ஸவங்கள் நடைபெறுவதற்காக. எந்தக் கோயிலில் பிரம்மோத்ஸவம் முதலிய உத்ஸவங்கள் நடக்கிறதோ, அப்போது துவஜாரோஹணம் நடைபெற வேண்டும் என்பதற்காக, துவஜஸ்தம்பம் நடப்படச் சொல்லப்பட்டிருக்கிறது. துவஜஸ்தம்பம் இல்லை என்றால், சக்தி குறைவு என்றெல்லாம் கிடையாது. அந்த ஊரில் அவ்வளவு மக்கள் இருந்திருக்க மாட்டார்கள், ஒரே ஒரு சன்னிதியாக வைப்பார்கள் அல்லது பிரம்மோத்ஸவம் முதலிய உத்ஸவங்கள் தொடர்ச்சியாக நடைபெறாமல் இருந்திருக்கலாம். சன்னிதியின் சான்னித்தியத்துக்கும், துவஜஸ்தம்பத்துக்கும் சம்பந்தம் கிடையாது.

TheMagnat.com

## அடுக்குமாடிக் குடியிருப்பில் இருப்பதால் வாஸ்து பார்க்க முடியவில்லையே! அதனால் வீட்டில் பிரச்னைகள் வருமா?

– செல்லையா, திருநெல்வேலி

**அ**ப்படிச் சொல்ல முடியாது. ஒரு இடத்தைப் பார்க்கும்போதே, அதை நாம் மொத்தமாகத்தான் பார்க்க வேண்டும். அப்போதுதான் அந்த இடத்தில் அனைத்தும் சரியாக அமைந்திருக்கிறதா என்று அறிய முடியும். அதற்குமேல், அந்த இடத்தில் அமைந்திருப்பதான சான்னித்யம் இதைப் பார்ப்பது. அந்த இடம், மயான பூமி இல்லையா, துர் தேவதைகள் வாசம் செய்த இடமில்லையா, எல்லாம் பார்த்துத்தான் அந்த இடத்தைத் தேர்வு செய்வார்கள். அது அந்த இடத்துக்குப் போனாலே புரியும். இன்னும் மனசில் நன்றாகவே அது தெரியும். வாஸ்து என்பது பெரும்பாலும் கோயிலுக்குத்தான் பார்ப்பார்கள். வீட்டுக்கு என்று வரும்போது, குளியலறை, சமையலறை இப்படித்தான் பார்ப்பார்கள். இன்றுதான் எல்லா இடங்களுக்கும் வாஸ்து பார்ப்பது என்பதாக வந்திருக்கிறது. இது பற்றி சாஸ்திரம் ஒன்றும் சொல்லவில்லை. வாஸ்து குறித்து அறிந்தவர்களின் அறிவுரையை வேண்டுமானால் கேட்டுச் செய்யலாம்.

## அந்தணர்கள் அரிசி விற்கக் கூடாது என்பது எதனால்?

– தளவாய் நாராயணசாமி, ஒக்கூர்

**பொ**துவாக, அந்தணர்கள் வியாபாரமே செய்யக் கூடாது. அந்தணரின் வாழ்க்கை என்பது, ஆறு அங்கங்களைக் கொண்டது. அவை, யஜனம், வ்யாஜனம், அத்யயனம், அத்யாபனம், தானம், ப்ரதிக்ரஹம் என்பவை. யாகம் செய்வது, யாகம் செய்து வைப்பது, வேதம் ஓதுவது, வேதம் ஓதுவிப்பது. தானம் செய்வது, தானம் வாங்குவது. இவைதான் அந்தணர் தொழில். ஆக, அந்தணர்கள் ஒரு பொருளை வியாபாரம் செய்யக் கூடாது. முக்கியமாகக் கிராமங்களில் ஒரு வசனம் உண்டு. ஒரு கண், இரு கண், மூன்று கண் இந்த வியாபாரம் செய்யக் கூடாது என்பார்கள். ஒரு கண் என்பது அரிசி. இரு கண் என்பது பசு மாடு. மூன்று கண் என்பது தேங்காய். இவற்றை எக்காலத்திலும் பிராமணர்கள் வியாபாரமாகச் செய்யக் கூடாது.





https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# கேள்வி நேரம்

சேங்காலிபுரம் **பி.தாமோதர தீட்சிதர்**



## வட இந்தியாவில் முருகனுக்கு ஆலயங்கள் அமையாதது ஏன்?

**- அயன்புரம் சத்தியநாராயணன், சென்னை**

இதை, இருவிதமாகச் சொல்லலாம். வட இந்தியாவில் முருகனை, 'கார்த்திகேயன்' என்று பிரம்மசாரியாகத்தான் வழிபடுவது வழக்கம். அதனால், சிவபெருமானின் ஒரு சன்னிதியிலேயே ஒரு சிறு சன்னிதியாக முருகனுக்கு இருக்கும். இதில் ஒரு சூட்சுமமான காரணம் என்னவென்றால், முருகன் என்பது சிவபெருமானின் வடிவம். இன்னொன்று அக்னியின் வடிவம் என்று சாஸ்திரம் சொல்கிறது. முருகனின் வாகனம் எதுவென்று கேட்டால், பெரும்பாலானவர்கள் மயில் அல்லது சேவல் என்றே சொல்வார்கள். அவை இரண்டுமே கிடையாது. முருகனின் வாகனம் ஆடு.

அக்னி பகவானின் வடிவம்தான் முருகன். அக்னி பகவானின் வாகனமும் ஆடுதான். அக்னி பகவானை அந்தணர்கள், குறிப்பாக இந்துக்கள் அனைவருமே அனைத்து வழிபாட்டிலுமே வழிபடுவதால், தனியாக முருகனுக்குக் கோயில் என்பது விதிக்கப்படவில்லை. தமிழ்நாட்டில் சுத்தமான பிராம்மண்யம் இருந்ததால், பிராம்மண்யத்தை வளர்க்கக்கூடிய அக்னி சொரூபமாக முருகன் இருப்பதால், முருகனுக்கு அநேக ஆலயங்கள் இங்கே ஏற்பட்டன. அதனால்தான் முருகனுக்கு சுப்ரம்மண்யன் என்றே பெயர். முருகனை தமிழ்க் கடவுள் என்று நாம் சொல்வோம். ஏன் என்றால், தமிழ் மொழிக்கு இலக்கணம் அமைத்துக் கொடுத்தார் என்பதால். ஆனால், உண்மை என்னவென்றால், ஆதியான மூத்த கடவுள் முருகப்பெருமான்.

படிப்பு வேண்டுமென்றால் சரஸ்வதியை வழிபட வேண்டும். செல்வம் வேண்டும் என்றால் மகாலட்சுமியை பூஜை செய்ய வேண்டும். காரியத் தடை என்றால் விநாயகரை பூஜிக்க வேண்டும். சத்ரு நாசம் என்றால், சுதர்ஸனரை பூஜிக்க வேண்டும் என்றெல்லாம் இருப்பதுபோல், ப்ராம்மண்யம் - அதாவது, ப்ராமணத் தன்மையான, அஹிம்சை, பொறுமை, நேர்மை, ப்ரம்மசரியம், தவம் இவை வளர வேண்டும் என்று ஒருவன் ஆசைப்பட்டால் சுப்ரம்மண்யரைப் பூஜிக்க வேண்டும் என்று சாஸ்திரம் சொல்கிறது.

## செவ்வாய்க்கிழமைகளில் சுப காரியங்களைச் செய்யலாமா?

**- டி.என்.ரங்கநாதன், திருச்சி**

பொதுவாக, செவ்வாய்க்கிழமை என்பது புருஷ வாரம். இன்றைய காலங்களில் நாம், செவ்வாய், சனி ஆகிய கிழமைகளை கண்களை மூடிக்கொண்டு விலக்குகிறோம். சாஸ்திரம் அப்படிச் சொல்லவில்லை. இன்னின்ன வாரத்தை (கிழமையை) புருஷ வாரம், ஸ்திரீ வாரம் என்று சொல்கிறது. ஞாயிறு, செவ்வாய், வியாழன் இம்மூன்றும் புருஷ வாரம். இம்மூன்றிலும், பும்ஸவனம், சீமந்தம் ஆகியவற்றைச் செய்ய வேண்டும். வெள்ளி ஸ்திரீ வாரம். புதன், சனி ஆகிய இரண்டும் நடுவில் சேர்ந்தது. சனிக்கிழமைகளில்தான் சுப காரியங்கள் செய்யக் கூடாது என்று சாஸ்திரம் விதிக்கிறதே தவிர, மற்ற கிழமைகளில், எந்தெந்தக் காரியம் என்பதைப் பொறுத்து, என்னென்ன கிழமை என்று சாஸ்திரம் விதித்துள்ளது.



## கௌளி பஞ்சாங்கம் என்பது எதற்குப் பயன்படுகிறது?

**- பத்ம.சிவாஜி, மாரியம்மன்கோவில், தஞ்சாவூர்**

பதில் அடுத்த இதழில்...



https://t.me/softknowledge

https://t.me/softknowledge
www.TheMagnat.com

**பெயரென்ற சுமையைப் பெருஞ்சுமையாய்க் கருதியவர் சுவாமி விவேகானந்தர். அவருடைய அனுபவத்தை நிகர்த்த ஒன்று தமிழ்நாட்டிலும் காவிரிக் கரையில் நடந்தது.**



# சீவன் சிவமாகும் ரகசியம்!



'அடையாளங்கள் அகல வேண்டும்' என்பது ஆன்மிகப் படிநிலைகளில் முக்கியமான ஒன்று. பக்தி செய்வதில், கேட்பது, அழுவது, இறைஞ்சுவது, ஆர்பாட்டம் செய்வது, கொடுத்துப் பெறுவது, நைச்சியம் செய்வது என்று பல வகை உண்டு. ஆனால், இதெல்லாம் பயிற்சி செய்து பழகிப் பார்த்து, அலுத்துச் சலிக்கும்போது ஒரு புதிய உத்தி கையாளப்படுகிறது. அது கொடுப்பதை பற்றி அல்ல, எடுப்பதைப் பற்றி. அது ஓர் உயர்ந்த நிலை. 'அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே' என்று சொல்லி, கொடுத்தது போதும் என்று உறுதி ஏற்பது.

www.TheMagnat.com

நம்மிடமிருக்கும் ஏகப்பட்ட சுமைகளை எடுத்துக் கீழே பரப்பிப் பார்க்க வேண்டும். அதற்கான களம் தான் இந்த உலகம். அதற்கான காலக்கெடுதான் மனித வாழ்க்கை என்கிற புரிதலோடு வாழ வேண்டும். இருந்தாலும், இந்த பாரம் இறக்குதல் வேலையை இறைவனன்றி யாரால் செய்திட முடியும். எனவே, 'எடுத்துவிடு' என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டும். சன்யாசம் என்பது கூட இதற்கான ஒரு முயற்சிதான்.

துறவிகள் நியமப்படியும், வெளித் தோற்றத்துக்கும் எல்லாவற்றையும் துறந்துவிட்டது போல் தோன்றினாலும், அது முழு உண்மையல்ல. காவி உடை என்பது சாதனைக்கான துணை, சங்கல்பத்துக்கான தொடக்கம். துறவிகளும் இழக்க வேண்டிய விஷயங்கள் பல உண்டு என்பதை இந்த நாட்டின் மகோன்னதமான துறவிகளின் வாழ்க்கையைப் படித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். இந்தியத் துறவிகளின் பெருமையை உலகறியச் செய்த சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையில் ஒரு கட்டத்தைப் பார்க்கலாம். அடையாளங்கள் அவரை விட்டு அகன்ற நேரம் அது.



நரேந்திரன் என்ற பெயரோடு இருந்த அவர், துறவியானபோது, ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரால், 'சுவாமி விவேகானந்தர்' என்று பெயர் சூட்டப்பட்டார். பரமஹம்சர் சமாதியான பிறகு, இந்தியா வெங்கும் யாத்திரை மேற்கொண்ட விவேகானந்தர், தன்னுடைய பெயரை மக்களுக்குத் தெரியாமல் மறைத்து விட்டார். அந்த அடையாளம்கூட அவருக்கு அந்நியமாகப்பட்டது. இந்தியா முழுவதும் யாத்திரை செய்த சுவாமி விவேகானந்தர், பூனா நகரில் பால கங்காதர திலகர் வீட்டில் தங்கியிருந்தார். அது பற்றி திலகர் எழுதியது... (ரா.கணபதி எழுதிய, 'சுவாமி விவேகானந்தர்' புத்தகத்தில் இருந்து...)

"அந்த சன்னியாசி என் வீட்டில் எட்டு அல்லது பத்து நாட்கள் தங்கி இருந்தார். அவருடைய பெயரைக் கேட்டேன். அவர் கூறவில்லை. 'நான் ஒரு சன்னியாசி அவ்வளவுதான்' என்றார். அவர் மேடைப்பேச்சு எதுவும் நிகழ்த்தவில்லை. வீட்டில் அத்வைத சாஸ்திரம் பற்றியும் வேதாந்தம் பற்றியும் அடிக்கடி பேசி வந்தார். அவரிடம் ஒரு சல்லிக் காசுகூட இல்லை. மான் தோல், ஓரிரு துணிகள், கமண்டலம் இவையே அவருடைய உடைமைகள். யாராவது டிக்கெட் வாங்கிக் கொடுத்தே யாத்திரை செய்து வந்தார்.

அப்போது நான் ஹிராபாக்கிலுள்ள, தக்காண சங்கத்தில் அங்கத்தினராக இருந்தேன். சங்கத்தில் வாராந்திர கூட்டங்கள் நடைபெறும். இந்தக் கூட்டம் ஒன்றுக்கு சுவாமிஜியும் என்னுடன் வந்திருந்தார்.


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# அடையாளம்

சுப்பு



அன்றைக்கு ஏதோ வேதாந்த விஷய மாக, காலம் சென்ற கோவிந்தநாதர் ஓர் அருமையான பிரசங்கம் செய் தார். அதுபற்றி எங்களில் யாரும் எதுவும் சொல்லவில்லை. ஆனால், சுவாமிஜி எழுந்தார். கோவிந்தநாதர் பேசிய விஷயத்தின் மாற்றுக் கோணத்தை மிகவும் தெளிவான முறையில் சரளமான ஆங்கிலத்தில் விவாதித்தார். அவர் உயர்ந்த திறன் கள் பெற்றவர் என்று எல்லோருக்கும் ஒரு திடமான கருத்து உண்டாயிற்று. இந்தச் சம்பவம் நடந்த பிறகு வெகு விரைவிலேயே சுவாமிஜி பூனாவி லிருந்து புறப்பட்டு விட்டார்.



இரண்டு மூன்றாண்டுகளுக்குப் பிறகு சுவாமி விவேகானந்தர் உலகப் புகழுடன் இந்தியாவுக்குத் திரும்பினார். சர்வமத மஹா சபையிலும், அதற்குப் பிறகு அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய தேசங்களிலும் அவர் பெற் றிருந்த மகத்தான வெற்றி காரணமாகவே அவருக்கு இந்தப் பெரும் புகழ் கிடைத்திருந்தது. இந்தியாவில் அவர் சென்ற இடங்களிலெல்லாம் வரவேற்பிதழ் அளிக்கப்பட்டது. சில செய்தித்தாள்களில் அவரது புகைப்படத்தைப் பார்க்க நேர்ந்தது. தோற்றத்தில் தெரிந்த சாயல்களிலிருந்து என் இல்லத்தில் முன்பு தங்கியிருந்த சுவாமியாகத்தான் இருக்க வேண்டும் இந்த விவேகானந்தர் என்று எண்ணினேன். என் அனுமானம் சரியானதுதானா என்று அவருக்குக் கேட்டு எழுதியிருந்தேன். கல்கத்தாவுக்குச் செல்லும் வழியில் பூனாவுக்கு விஜயம் செய்யும் படியும் அவரைக் கூறியிருந்தேன். என் அனுமானம் சரியே என்று அவர் தெளிவு படுத்திப் பதில் எழுதினார்'' என்று எழுதுகிறார் திலகர்.



மீனாட்சி அம்மன் பிள்ளைத் தமிழ், சகலகலா வல்லி மாலை போன்ற அருள் சுரக்கும் பாக்களை இயற்றியவர் குமரகுருபரர். அவர் ஆரம்ப நாட்களில் மெய்ஞான வேட்கையோடு குருவைத் தேடி அலைந்தார். மாயவரம் வந்த அவர், மாயவரத்திலிருந்து புறப்பட்டு தருமபுரத்துக்கு வந்தார். தருமபுரத்தி லிருந்த மஹா சன்னிதானம் மாசிலா மணி தேசிகர்தான் அவருக்கு குரு வாகப் போகிறவர். அந்த மண்ணில் கால் வைத்தவுடன் தனக்குள் ஏற் பட்ட ரசவாதத்தை, பண்டார மும் மணிக்கோவை என்ற நூலில் பதிவு செய்துள்ளார் குமரகுருபரர்.

**'ஊரிற் குறுகினேன் ஓர்**
**மாத்திரை அளவு,**
**பேரிற் குறுகினேன் பின்'**

என்கிறார் அவர்.

ஊருக்கு வந்து விட்டேன். ஊருக்கு வந்தவுடன் என்னுடைய பெயரில் ஒரு மாத்திரை குறுகி விட் டது என்பது விளக்கம்.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு பெயரிருக்கிறது. எல்லா மனிதர்களுக்கும், 'மனிதன்' என்ற பொதுப் பெயரிருக்கிறது. மனிதன் போன்று, மற்ற உயிரினங் களுக்கும் ஒரு பொதுப்பெயர் உண்டு. அது சீவன். அந்த சீவன், தன்னுடைய அடையாளத்தில் ஒரு மாத் திரை அளவைக் குறைத்துவிட்டால், சிவனாகி விட லாம் என்பதுதான் யோக ரகசியம். ◆

## மேற்கு வங்கத்தில் சிவராத்திரி!

மேற்கு வங்காளத்தில் மகாசிவராத்திரி மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. பக்தர்கள் அன்று முழுவதும் பட்டினியிருந்து கங்கைக் கரையில் களிமண்ணால் நான்கு சிவலிங் கங்கள் செய்வார்கள். அதற்கு அன்றிரவு நான்கு முறை (3 மணி வீதம்) அபிஷேகம் செய்வார்கள். முத லில் ஒரு சிவலிங்கத்துக்கு பால் அபிஷேகம், இரண் டாவது சிவலிங்கத்துக்கு தயிர், மூன்றாவது சிவலிங் கத்துக்கு நெய், நான்காவது சிவலிங்கத்துக்கு தேனாலும் அபிஷேகம் செய்து, சிவராத்திரி இரவு முழுவதும் கண் விழித்திருப்பர். அடுத்த நாள் காலை பூஜை, அன்னதானம், உபந்யாசங்கள் கேட்டபின் தங்கள் உபவாசத்தை முடித்துக் கொள்வர்.

– கே.ராஜலக்ஷ்மி,
சென்னை



**சிவராத்திரித் துளிகள்**



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

துறவிகளை உண்பிக்க வேண்டிய கடமை இல்லறத்தார்களுக்கு இருக்கிறது என்பதையும், அவர்களிடம் இரந்து உணவு கேட்டதின் மூலம் அவர்களுக்கு ஞாபகப்படுத்தினார் பாபா.



# தண்ணீரில் எரிந்த தீபங்கள்!



நம் பாரத நாட்டில் எத்தனையோ மகான்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால், அவர்களில் மக்களோடு ஒருவராகக் கலந்து பழகி அவர்கள் இன்ப, துன்பங்களில் பங்கு கொண்டு அவர்கள் வாழ்க்கையை நெறிப்படுத்த பாடுபட்டவர்களில் ஷீர்டி சாயிபாபா முதன்மையானவர்.

காண்டோபா கோயில் பூசாரி மஹல்சாபதிதான் முதலில் பாபாவின் தெய்வீகத் தன்மையை உணர்ந்து அவரிடம் மரியாதை செலுத்தியவர். பாபா அவரை அன்புடன், 'பகத்' என்று அழைத்தார். பாபாவின் உடைமைகள் என்று சொல்லிக்கொள்ள அவர் அணிந்திருக்கும் கஃப்னி, சட்கா என்னும் குறுந்தடி, கிழிந்த சாக்குத் துணி அவருடன் கூடவே வைத்திருக்கும் ஒரு செங்கல் தவிர, வேறு ஏதும் இல்லை. தழையத் தழைய நீண்ட கஃப்னி ஒன்றை அணிந்து கொண்டு, சுத்தமான வெள்ளைத் துணியொன்றை தலை மேல் போர்த்தி, இடது காதுக்குப் பின்னால் ஜடா முடியைப் போல இறுக்கமாக முறுக்கி ஒரு அழகான தலைப் பாகையைப் போலக் கட்டிக் கொண்டார். அவர் தங்கியிருந்ததும் ஒரு பாழடைந்த மசூதியில் தான்.



பாபா தினமும் நாலு வீடுகளில் பிச்சையெடுத்து உண்டார். அவர் அந்தக் கிராமத்தில் யார் வீட்டை நோக்கி, 'அம்மா' என்றழைத்து தன் திருக்கரங்களை நீட்டி உணவை யாசித்தாரோ, உண்மையில் அந்த வீட்டிலிருந்தவர்கள் மிகவும் கொடுத்து வைத்தவர்கள். பாபா அவர்களிடம் யாசகமாகக் கேட்டது உணவை மட்டுமல்ல, அவர்களுடைய துயரக் கர்மாக்களையும் கை நீட்டி வாங்கி அவற்றை, தான் நாள் முழுவதும் எரிய விட்டுக் கொண்டிருக்கும் துனியில் போட்டு எரித்தார். பாபா ஒரு கரத்தில் சோலி என்கிற சதுரத் துண்டையும் மறு கரத்தில் ஒரு தகரக் குவளையையும் ஏந்தி சில குறிப்பிட்ட இல்லங்களின் வாயிலில் நின்று பிச்சை கேட்டார். திரவ ஆகாரங்கள் சூப், பாஜி, பால், மோர் போன்றவை அனைத்தும் தகரக் குவளையில் வாங்கிக் கொள்ளப்பட்டன. திட ஆகாரங்கள் சாதம், ரொட்டி போன்றவைகளை அவரது மேல் துண்டில் வாங்கிக் கொண்டார். பாபாவைப் போன்ற மகான்களுக்குத் தங்கள் நாவு மேல் மிகுந்த கட்டுப்பாடு உண்டு. இது வேண்டும், அது வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுக் கேட்கவில்லை. தன் துண்டில் என்ன ஆகாரம் வந்து விழுந்ததோ அதை மிகுந்த திருப்தியுடன் உண்டார். ருசிகளையும் வாசனைகளையும் நாவு அறியாதபோது மனதில் சாப்பாட்டைப் பற்றி என்ன ஆசை ஏற்படும்? ஒவ்வொரு நாளும் காலை நேரத்தில் அவர் பிச்சை

https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# ஷீர்டி சாயி சரிதம்!

ரேவதி பாலு

03



எடுப்பார். இப்படிப் பிச்சை எடுத்து சேர்க்கப்பட்ட உணவு மசூதியில் இருந்த ஒரு வாயகன்ற மண் பாத்திரத்தில் கொட்டப்பட்டது. இதிலிருந்து நாய்களும், காக்கைகளும், பூனைகளும் சுதந்திரமாக உணவு உண்டன.

ஆரம்பத்தில் கிராமத்து மக்கள் அவரை ஒரு பைத்தியக்கார பக்கிரியாகவே நினைத்தனர். உண்மையில் பிச்சை எடுத்து உண்ணத் தகுதியானவர்கள் யார்? செல்வம், புகழ், வம்சாபிவிருத்தி ஆகிய மூன்று ஆசைகளைத் துறந்து துறவை மேற்கொள்வோரே பிச்சையெடுத்து உண்ண உரிமை உள்ளவர்கள். சாயி பாபா இல்லறத்தாருமல்ல, இல்வாழ்க்கை முடிந்து வானபிரஸ்தம் என்று சொல்லப்படும் காடுகளில் தனிமையில் வாழும் வாழ்க்கையை மேற்கொண்டவருமல்ல. அவர் பிரம்மச்சரியத்தைக் கடைபிடித்த ஒரு துறவி. துறவிகளை உண்பிக்க வேண்டிய கடமை இல்லறத்தார்களுக்கு இருக்கிறது என்பதையும் அவர்களிடம் இரந்து உணவு கேட்டதின் மூலம் அவர்களுக்கு ஞாபகப்படுத்தினார் பாபா.

மசூதியில் தினமும் பாபாவுடன் தாத்யா கோதே பாடீலும், மஹல்சாபதியும் படுத்து உறங்கினார்கள். பாபா நாள் முழுவதும் அந்தப் பாழடைந்த மசூதியிலேயே வீற்றிருப்பார். சில சமயங்களில் குறிக்கோள் இன்றி காட்டுப் பக்கம் வெகு தூரம் நடந்து செல்வார். அந்த நாட்களில் பிச்சை எடுப்பது தடைபடும். அந்தக் குக்கிராமத்திலும் சிலர் இயற்கையாகவே மிகுந்த இரக்க குணமுள்ளவர்களாக இருந்தார்கள். அவர்கள் இவரை ஒரு சாதுவாக ஏற்று மதித்தார்கள். பாபா பட்டினியாகயிருப்பாரே என்ற பதைப்புடன் தாத்யா கோதே பாடீலின் தாயார் பாயிஜாபாயி மதியம் உணவு வகைகள் அடங்கிய கூடையைத் தன் தலையில் வைத்துக் கொண்டு காட்டுக்குள் பல மைல்கள் கல்லிலும் முள்ளிலும் அலைந்து திரிந்து அவரைச் சாப்பிட வைப்பாள். அந்தக் காலகட்டத்தில் பாயிஜா பாயி பாபாவுக்குச் செய்த ஆத்மார்த்தமான சேவை பாபாவை மிகவும் நெகிழ வைத்தது. ஆண்டி என்றும் பக்கிரி என்றும் கருதியவர்களிடம் பாபா எப்போதும் சொல்லுவார், 'ஆண்டித் தனம்தான் உண்மையான அரச போகம். ஏனென்றால், ஆண்டியாக இருப்பது மட்டுமே நிரந்தரம். மற்ற செல்வபோகம் எல்லாம் என்றைக்குமே நிலைத்து நிற்காது!'

சாயிபாபாவுக்கு விளக்குகள் என்றால் மிகவும் பிரியம். இதற்காகத் தாமே போய்க் கடைக்காரர்களிடம் எண்ணெய் கேட்டு வாங்கி வந்து, அகல் விளக்குகளை எரிய விடுவார். மசூதியில் இரவு முழுவதும் விளக்கெரிப்பது வழக்கம். தீபத் திருநாளான தீபாவளியையும் பிரகாசமான விளக்குகளை ஏற்றிக் கொண்டாடுவார். திடீரென்று ஒரு நாள், எண்ணெயை இலவசமாக அளித்து வந்த வணிகர்கள் அனைவரும் ஒன்றுகூடி இனி, பாபாவுக்கு எண்ணெய் தருவதில்லை என்று தீர்மானித்தனர். அப்படியே வழக்கம்போல் பாபா வந்து அவர்களிடம் எண்ணெய் கேட்டபோது அவர்கள் எண்ணெய் இல்லையென்று சொல்லி விட்டனர். பாபா பேசாமல் மசூதிக்குத் திரும்பினார்.

காய்ந்த துணிக் கிழிசலைத் திரிகளாக்கி அகல் விளக்குகளில் இட்டார். எண்ணெய் இல்லாமல் இவரால் எப்படி விளக்கேற்ற முடியும் என வணிகர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். பாபா தகர டப்பாவை மசூதியின் கைப்பிடிச் சுவரிலிருந்து எடுத்தார். அதில் ஓரிரு துளிகள் எண்ணெய்தான் இருந்தது. ஒரு விளக்கு ஏற்றுவதற்குக்கூட அது போதாது. அந்த எண்ணெயில் சிறிது தண்ணீரை ஊற்றி இறைவனுக்கு அர்ப்பணம் செய்வது போல அதைக் குடித்தார். பிறகு, அந்த தகர டப்பாவில் தண்ணீரை நிரப்பி எல்லா விளக்குகளிலும் அதையே ஊற்றி ஏற்றினார். வணிகர்களுக்கு ஆச்சரியத்தையும் பயத்தையும் விளைவிக்கும்படி விளக்குகள் எரியத் தொடங்கின. அணுவளவும் எண்ணெய் இல்லாமல் வெறும் தண்ணீரால் ஏற்றப்பட்ட விளக்குகள் இரவு முழுவதும் எரிந்து கொண்டிருந்தன.

விளக்கெரிக்க எண்ணெய் தர மறுத்த வணிகர்கள், 'ஓ! பாபா எப்பேர்ப்பட்ட மகான்! எவ்வளவு அதிசயமான சக்தியைப் பெற்றவர்?' என்று வியப்பிலாழ்ந்தனர். எண்ணெய் வணிகர்கள் தங்கள் செய்கைக்கு மனம் வருந்தி பாபாவிடம் மன்னிப்பு கேட்டுக் கொண்டனர். இவர்கள் எண்ண ஓட்டம் இவ்வாறாக இருந்தபோதிலும் தன் வாழ்க்கையில் சினத்துக்கும்


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



வெறுப்புக்கும் இடமே கொடுத்திராத பாபா இதைப் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. எதிர்காலத்தில் அவர்களை அதிக உண்மையோடும் நேர்மையோடும் இருக்கும்படி கேட்டுக்கொண்டார். இந்தச் சம்பவம் கிராமம் முழுவதும் விரைந்து பரவியது. மக்களுக்கு ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது.

ஷீர்டிக்கு தெற்கே ரஹதாவும் வடக்கே நீம்காவனும் அமைந்துள்ளது. இந்த இடங்களைத் தாண்டி பாபா வேறு எங்கும் சென்றதில்லை. அவர் எந்த ரயில் வண்டியையும் பார்த்ததோ, அதில் பிரயாணம் செய்ததோ இல்லை. ஆனால், ரயில் வண்டிகளின் பெயர்கள், வரும் நேரம், போகும் நேரம் எல்லாம் மசூதியில் அமர்ந்துகொண்டே துல்லியமாக உரைப்பார். ஏதோ காரணங்களினால் தாமதமாகப் புறப்படும் வண்டிகளைப் பற்றியும் அவர் அறிந்திருந்தார்.

மாலை நேரங்களில் அவர் குறிக்கோளின்றி நடப்பது வழக்கம். சில நேரங்களில் நீம்காவனுக்குப் போவார். அங்கே, திரயம்பக் டேங்க்லேயின் வீட்டுக்குப் போவார். பாபாவுக்கு அவர் மேல் பிரியம் அதிகம். தன் தம்பியான நானா சாஹேப் டேங்க்லேக்கு புத்திர பாக்கியமில்லாததால், அவரை சாயி தரிசனத்துக்கு ஷீர்டிக்கு அனுப்பி வைத்தார் டேங்க்லே. விரைவிலேயே பாபாவின் அருளால் அவருக்கு ஒரு மகன் பிறந்தான். அதிலிருந்து சாயியின் புகழ் நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவி அடியவர் திருக்கூட்டம் பாபாவின் தரிசனத்தையும் ஆசீர்வாதத்தையும் பெறுவதற்காக வந்தது.

சாயி சகாப்தம் துவங்கி விட்டது. இதுவரை மஹல் சாபதி மற்றும் ஓரிருவரைத் தவிர, மற்றவர்கள் பாபாவை ஒரு பொருட்டாக எண்ணவில்லை. இப்போதோ, 'சித்தர்! மஹான்!' என்றும் 'அவதார புருஷர்! அவலியா!' என்றும் போற்றினர். அவரைக் கடவுளாக மதித்து பூஜை செய்து வழிபட ஆரம்பித்தனர். பாபாவுக்கு இதிலெல்லாம் பெரிதும் விருப்பமில்லை என்றாலும், கிராமவாசிகளின் அன்பையும் விசுவாசத்தையும் புறக்கணிக்க அவரால் இயலவில்லை. பாபா அவதாரம் செய்ததின் நோக்கமே மக்களை நல்வழிப்படுத்தி சன்மார்க்கத்தில் ஈடுபடுத்த வேண்டுமென்பதுதானே?

கௌலிபுவா என்னும் தொண்ணூற்றைந்து வயதான பண்டரிநாதனின் பக்தர் பண்டரிபுரத்துக்கு வருடந்தோறும் யாத்திரையாகச் செல்பவர். வருடத்தில் நான்கு மாதங்களை கோதாவரிக் கரையிலும் மீதி எட்டு மாதங்களை பண்டரிபுரத்திலும் கழித்தார். தன் மூட்டைகளைச் சுமப்பதற்காக ஒரு கழுதையையும், துணைக்கு ஒரு சீடனையும் தம்மோடு வைத்துக் கொண்டிருந்தார். இவ்வாறு பயணம் செய்ததால் அவரால் பாபாவை வருடத்துக்கு ஒரு முறை தரிசனம் செய்ய முடிந்தது. பாபாவைப் பணிவுடன் நோக்கி, 'சந்தேகமேயில்லை! ஏழை, எளிய மக்களிடம் கருணை காட்டும் இவரே பண்டரிநாத விட்டலின் அவதாரம்' என்று ஷீரடி மக்களிடம் கூறுவார்.

'ஷாமா' என்று பாபாவால் பிரியமாக அழைக்கப்பட்ட மாதவ்ராவ் தேஷ் பாண்டே, பாபா அமர்ந்திருந்த மசூதிக்கு அடுத்த கட்டடத்திலுள்ள ஷீர்டி கிராமத்தின் பள்ளியில் ஆசிரியராகப் பணி புரிந்தார். பாபா ஷீர்டிக்கு வந்ததிலிருந்தே அவர் செய்கைகள் அனைத்தையும் கூர்ந்து கவனித்து வந்த மாதவ்ராவ் அவருடைய தெய்விகத்தன்மையை புரிந்து கொண்டார். ஆறு வருடங்களுக்குப் பின் அவருக்குப் பணியிட மாற்றம் வந்தபோது அதை நிராகரித்து விட்டு பாபாவுடனேயே இருக்க விரும்பி, ஷீர்டியிலேயே தங்கி விட்டார்.

ஹேமத்பந்த் ஷாமாவை நந்தி பகவானுக்கு ஒப்பிடுகிறார். சிவபெருமான் நந்தி பகவான் மூலம் அணுகப் படுவது போல பக்தர்களுக்கும் பாபாவுக்குமிடையே ஷாமா ஒரு பாலமாக விளங்கினார். ஷீர்டிக்கு வரும் பக்தர்கள் முதலில் ஷாமாவையே பார்த்து தங்களுடைய கோரிக்கையை வெளியிட்டு, பாபாவை தரிசிக்கவும் கோரிக்கை நிறைவேறவும் உதவுமாறு கேட்டுக் கொள்வர்.

பாபாவின் தரிசனத்தைப் பெற்றதால் மக்கள் மிகவும் பயனடைந்தார்கள். பாபா ஷீர்டி கிராமத்தின் வைத்தியராகவும் மக்களால் அறியப்பட்டார். நோயாளிகளான சிலர் பாபாவைத் தரிசித்து தங்கள் ஆரோக்கியம் மீளப் பெற்றார்கள். குருடர்கள் எந்த விதமான மருந்து, மாயமுமின்றி கண் பார்வை பெற்றார்கள். சில முடவர்கள் பாபாவின் தரிசனத்துக்குப் பின் நடக்க ஆரம்பித்தார்கள்.

சாதாரண மக்கள் மட்டுமின்றி, முக்தியில் ஆர்வமுள்ள பல சன்னியாசிகளும், சாதகர்களும் கூட பாபாவின் தரிசனத்தைப் பெற விரும்பி ஷீர்டி வந்தனர். எத்தனை கூட்டம் கூடியபோதும், பாபா தன் ஆத்மாவிலேயே லயித்து அமைதியாக அமர்ந்திருந்தார். பாபா எப்போதும் தம் நாவினால், 'அல்லா மாலிக்' (இறைவனே எஜமானர்!) என்று மொழிந்தார்.

**(தொடரும்)**


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge





"விளக்கு எரியும்போது பார்த்தால், அந்த ஜோதியின் அடியில் மஞ்சளாகவும், நடுவில் கருப்பாகவும் மேலே சிவப்பாகவும் இருக்கும். மஞ்சள் பிரம்மாவின் நிறம், கருப்பு விஷ்ணுவின் நிறம், சிவப்பு சிவனுடையது.

ஆக, ஜோதி மும்மூர்த்திகளின் சொரூபம்! சிவ லிங்கமும் அப்படியே! சாதாரணமாக எல்லோரும் நினைப்பதுபோல அது சிவரூபம் மட்டுமல்ல; லிங்கத்தின் அடிப்பகுதி பிரம்ம பாகம். நடு பீடம் விஷ்ணு பாகம். மேலே லிங்கம் இருப்பது சிவனுடைய பாகம். அந்தக் காலத்தில் ரிஷிகள் ஆங்காங்கே ஜ்வாலாமுகி போல் இயற்கையாய் ஏற்பட்ட ஜோதியையோ அல்லது வடலூரில் இருப்பது போலச் செயற்கையான தீப ஜோதியையோ வழிபட்டு வந்திருக்கிறார்கள். இந்த வழிபாடு தொடர்ந்து நடைபெற அதையே லிங்கத்தில் பிரதிஷ்டை செய்து ஜோதிர்லிங்கமாக முன்னோர்கள் ஆராதித்தார்கள். ஜோதிதான் லிங்கம்; லிங்கம்தான் ஜோதி!

யாராவது உறவினரை நினைக்கிறோம். அப்போது சந்தோஷமாய் இருக்கிறது. அதேபோல், உருவம் இல்லாத சிவமும், ஒரு



# அனந்த வஸ்துவான ஜ்யோதிர் லிங்கம்!

உருவத்துடன் வந்து அனுக்கிரகம் பண்ணினால்தான் ரொம்ப சந்தோஷமாக இருக்கும். ஞானிகளுக்கு மட்டும் பரமாத்மா சொரூபத்தின் உருவம் இல்லாத பண்பு புரியும். உருவத்தைப் பார்த்துப் பார்த்து ஆனந்தம் அனுபவிக்கிற நமக்கு, ஈசுவரனை உருவத்தோடு கண்டால்தான் ஆனந்தம் உண்டாகும். அதற்காகத்தான் அருவமான ஈசுவரன், அருவுருவமான லிங்கத்துடன் நில்லாமல், அந்த லிங்கத்துக்குள்ளேயே திவ்ய சொரூபம் காட்டும் லிங்கோத்பவ மூர்த்தியாகக் காட்சி அளிக்கிறார்.

இப்படி ரூபத்தைக் காட்டினாலும், வாஸ்தவத்தில் தமக்கு அடியும் இல்லை, முடியும் இல்லை என்றும் தாம் ஆதியோ அந்தமோ இல்லாத அனந்த வஸ்துவே என்றும் உணர்த்துவதற்குத்தான். மேலே லிங்க வட்டத்துக்குள் ஜடாமுடி முடியாமலும், கீழே தமது பாதம் அடங்காமலும் இருப்பதாகக் காட்டுகிறார்!

அப்படி அடி, முடி இல்லாமல் அவர் ஜோதி ஸ்வரூபமாக நின்றார். ஜ்யோதிர் லிங்கமாக ஆகாயத்துக்கும், பூமிக்குமாக இப்படி பரமசிவன் உற்பவித்த இரவே சிவராத்திரி. சகல பிரபஞ்சமும் அடங்கி இருக்கிற லிங்க ரூபமானது ஆவிர்பவித்த சிவராத்திரி மகா சதுர்தசி! இந்த இரவில் அவரை அப்படியே ஸ்மரித்து ஸ்மரித்து அவருக்குள் நாம் அடங்கி இருக்க வேண்டும். இதைவிட ஆனந்தம் நமக்கு வேறு இல்லை!"

**- சிவராத்திரியின் பெருமை குறித்து காஞ்சி மகாபெரியவர் கூறியதிலிருந்து...**

**- இரா.திலிப், பெங்களூரு**





https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

**அற்புத வைபவமாக நிகழும் சிவராத்திரி, அன்பர்கள் அனைவரும் அனுஷ்டிக்க வேண்டியதும், அனுபவிக்க வேண்டியதுமான ஆனந்த இரவு!**





# ஆனந்த இரவு ஆதிசிவன் உறவு!

**'சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்**
**அவன் அருளாலே அவன்தாள் வணங்கி...'**

என்று திருவாசகத்தில் பாடிப் பரவுகிறார் மாணிக்க வாசகர். அப்படிப்பட்ட ஆதிசிவனின் அருளை நாம் முழுமையாகப் பெற உதவும் முக்கியமான விரத நாளே சிவராத்திரி. எண் குணத்தானாகிய பரமேஸ்வரனின் பக்தியில் திளைத்து வரம் பெறுவதற்கு எட்டு விரதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை: சோம வார விரதம், உமா மகேஸ்வர விரதம், திருவாதிரை விரதம், கல்யாண விரதம், பாசுபத விரதம், அஷ்ட விரதம், கேதார கௌரி விரதம், மகா சிவராத்திரி விரதம். அனுஷ்டிக்கத்தக்க சிவ விரதங்கள் அனைத்துமே சிறப்பானவை என்றாலும், அபரிமிதமான பலன்களை அள்ளித் தரும் விரதமாக அனைத்து ஆலயங்களிலும் விமரிசையாகக் கொண்டாடப்படுவது, மாசியில் வரும் மகா சிவராத்திரியே.

**'இமைப்போதும் என் நெஞ்சில் நீங்காதான்**
**தாள் வாழ்க'**

என்று சிவபுராணம் குறிப்பிடுகின்றது. வினாடி கூட பக்தர்களை விட்டு விலகாத சிவபெருமானுக்கு நன்றிக்கடனாக மாசி தேய்பிறை சதுர்த்தசியிலே அன்பர்கள் விழித்திருந்து ஆராதனை செய்ய வேண்டியது அவசியமல்லவா?

**'மாதமோ மாசி! இதில்**
**திருநீறு பூசி-அந்த**
**மகாதேவனைப் பூசி! - அவன்**
**அடியார்களை நேசி! - பன்னிரண்டு**
**திருமுறைகளை வாசி - உடனே**
**கிடைக்கும் அவன் ஆசி!'**

சிவம் என்றால், 'மங்கலம்' என்று பொருள். இவ் விரதச் சிறப்பை நந்திதேவர் மூலம் அறிந்து சூரியன், மன்மதன், அக்னி, எமன், இந்திரன், குபேரன், முருகப்பெருமான் முதலானோர் பக்திப் பாங்குடன் அனுசரித்து பரமேஸ்வரனின் கிருபைக்கு ஆளானார்கள் என்று பகர்கின்றன புராணங்கள்.

'இந்நாள் எமைக் கண்டவர், நோற்றவர், பூஜை புரிந்தவர் நற்கதி அடைவர்' என்று சிவனாரே உறுதி அளித்துள்ளார் என்று உரைக்கின்றது, 'வரத பண்டிதம்' என்னும் நூல். **'காலம் உண்டாகவே காதல் செய்து உய்மின்'** என்று தேவாரம் குறிப்பிடுவதற்கிணங்க மண்ணில் நல்லவண்ணம் வாழ, இவ்விரதத்தை முறையாக, முழுமையாக அனுஷ்டிக்க வேண்டியது அவசியம். சிவ நாமத்தை ஒருமைப்பட்ட எண்ணத்துடன் உச்சரித்தும், ஆலயங்களில் நான்கு கால தரிசனம் கண்டும், அன்பர்களுக்கு பிரசாதம் அளித்தும், திருநீறு பூசியும், திருமுறை பாடியும் இந்நோன்பை ஏற்றால் அசுவமேத யாகம் செய்த பலன் கிட்டும் என்கின்றது புராணம். பிரம்ம தேவரை சரஸ்வதி கணவராகப் பெற்றதும், திருமால் சக்ராயுதம் பெற்றதும் இவ்விரதத்தை ஏற்றே என்கின்றன இதிகாசங்கள்.

'சிவராத்திரி எவ்வாறு தோன்றியது?' என ஏடுகளைப்



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# சிவராத்திரி (24.2.2017)

திருப்புகழ்த்திலகம் மதிவண்ணன்



புரட்டினால் பலவிதமான கதைகள் கிடைத்தாலும், முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுபவை கீழ்க்காணும் சில நிகழ்வுகளே!

★அமுதத்தை விண்ணுலகத்தினருக்கு அளித்து, ஆலகால விஷத்தை தான் உண்ட தியாகத்தின் திருவுருவம்தான் சிவபெருமான். அகிலத்துக்கே மூலமான பரம்பொருளுக்கு முடிவு நேர்ந்து விடுமோ என்று எண்ணி, அஞ்சி நடுங்கி உருத்திரர், நாரணர், விண்ணோர், வேந்தர், இயக்கர், சித்தர், மருத்துவர், பூதர், யோகியர், தேவர்கள் அனைவரும் ஒருசேர, 'நமசிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!' என்று அழுதும், தொழுதும், பாடியும், பரவியும் பரமேஸ்வரனைப் பணிந்தனர். அந்த வேளையே 'சிவராத்திரி'யாக சிறப்புப் பெற்றது.

★ யுக முடிவில் பிரளயம் உண்டாகி அனைத்தும் அழிந்துபோக, சிவனும் சக்தியும் மட்டுமே இருந்தனர். அப்போது புவனத்தை மீண்டும் புரந்தருள, அம்பிகை நான்கு காலங்களும் நாதனைத் தொழுதாள். அந்த நற்பொழுதே சிவராத்திரி ஆனது.

★ லிங்கோத்பவராக, ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதி வடிவாக, விசுவரூப அனல் உருவில் சிவபெருமான் விளங்கியபோது பிரம்மாவும், திருமாலும் இறைவனின் அடி முடி காணாது அலமந்தனர். 'மாலறியா, நான்முகனும் காணா மலை வடிவம் ஆனார் மகாதேவன்.' அந்நிகழ்வே சிவராத்திரி விரதமாகத் தோற்றம் பெற்றது.

இப்படி, லிங்க புராணம், ஸ்காந்தம், சிவமகா புராணம் போன்றவை சிவராத்திரி குறித்து சித்திரிக்கின்றன. இதன் வழி நாம் விளங்கிக் கொள்ள வேண்டியது, 'இது பேரின்ப இரவு! இதில் நாம் பெற வேண்டியது சிவபெருமானின் உறவு! ஆதிசிவனே அனைத்துக்கும் மூலம்! அவனருளே இந்த ஞாலம்!' என்பதுதான்.

பால பருவம், இளமைப் பருவம், நடு வயது, முதுமை என நான்கு காலமும் நாம் நன்றாக வாழ வேண்டுமென்றுதான் சிவராத்திரிப்போதில் நான்கு காலம் அபிஷேகம், ஆராதனை, நிவேதனம், வழிபாடுகள், பாராயணம், பஜனைகள். மாலை 6 முதல் 9 மணி வரை முதல் ஜாம பூஜை. முதல் காலத்தில் பஞ்சாட்சரப் பெருமானுக்கு பஞ்சகவ்யத்தால் அபிஷேகம். வில்வம், தாமரை மலரால் முதல் ஜாம அர்ச்சனை நடைபெறும். இரவு 9 முதல் 12 மணி வரை இரண்டாம் காலத்தில் தேன், சர்க்கரை, பால், நெய், வாழைப்பழம் சேர்ந்த பஞ்சாமிர்த அபிஷேகம். சண்பகம், துளசியால் அர்ச்சனை.

நடுநிசி 12 முதல் அதிகாலை 3 மணி வரை மூன்றாம் காலத்தில் தேனால் அபிஷேகமும், செங்கழுநீர், அருகம்புல்லால் அர்ச்சனையும் நிகழும். அதிகாலை 3 மணி முதல் வைகறை நேரம் 6 வரை கருப்பஞ்சாற்றால் அபிஷேகமும், நீலோத்பலம், விளா இலைகளால் அர்ச்சனையும் நிகழ்த்தப்பெறும்.

**'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்!**
**இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்!**
**துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்!**
**தொழுகையர்! அழுகையர்! துவள்கையர் ஒருபால்!**
**சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்!'**

என்று திருப்பள்ளி எழுச்சியில் மாணிக்கவாசகர் தெரிவிப்பது போல் விதவிதமான வழிபாட்டில் பக்தர்கள் உள்ளம் ஒன்றி ஈடுபடுவதை அனைத்து சிவாலயங்களிலும் கண்டு மகிழலாம்.

**'காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி**
**ஓதுவார் தம்மை நன்னெறிக்கு உய்ப்பது**
**வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது**
**நாதன் நாமம் நமசிவாயவே!'**

என்று தேவாரம் தெரிவிக்கின்றது.

**'எந்தை பேர் ஆயிரம் அன்றே! நூறும் அன்றே!**
**வெறும் ஐந்தெழுத்தே!'**

என்று ராமலிங்க அடிகளார் திருஅருட்பாவில் பகர்கின்றார். அகம் உருகிச் சொல்வதற்கு எளிதாக ஐந்தே எழுத்துக்களில் சிவபிரானின் திருநாமம் அமைந்துள்ளது. அந்த ஐந்தெழுத்து மந்திரத்தை சிவராத்திரியில் விழித்திருந்து ஓதினால், இனி வாழ்வில் இருட்டே ஏற்படாது என விளங்கிக் கொள்ளலாம்!



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



# ருத்ராட்ச சிவலிங்கம்!



**சு**யம்பு லிங்கம், மரகத லிங்கம், ஸ்படிக லிங்கம் என பல தலங்களில் தரிசித்திருப்போம். ருத்ராட்சத்தால் உருவான சிவலிங்கத்தை ஒரே ஒரு கோயிலில்தான் தரிசிக்க முடியும். திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் பாபநாசநாதர் கோயிலில் அருள்பாலிக்கும் மூலவரே ருத்ராட்ச வடிவத்தில் அருள்பாலிக்கிறார். இதுவே, உலகின் முதல் சிவலிங்கம் என தலபுராணம் கூறுகிறது. அகத்திய முனிவர் தென்திசைக்கு சிவபெருமானால் அனுப்பப்பட்ட போது அவர் இத்தலத்தில் தங்கி, ஈசனின் திருமணக் காட்சியை சித்திரை முதல் நாளன்று கண்டுகளித்தார். இதை நினைவுபடுத்தும் வகையில் சித்திரை முதல் நாள் இத்தலத்தில் திருவிழா கொண்டாடப்படுகிறது.

## ஒரே லிங்கத்துக்குள் ஆயிரம் லிங்கங்கள்!



**ரா**மநாதபுரம் மாவட்டம், உத்தரகோசமங்கை மங்களநாத சுவாமி கோயிலில் ஆயிரம் ஆண்டுகளைக் கடந்த ஒரு இலந்தை மரம் உள்ளது. இந்த மரத்தின் அருகிலுள்ள லிங்கத்தின் மீது வரிசைக்கு 50 வீதம் 20 வரிசைகளில் 1000 லிங்கங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற சகஸ்ரலிங்க தரிசனம் செய்வது சகல சம்பத்தும் அளித்திடும் என்பது ஐதீகம்.

www.TheMagnat.com

## ஐந்து முக சிவபெருமான்!



**ப**ஞ்சமுக சிவபெருமானை நேபாளம், காசி, காளஹஸ்தி, திருவானைக்காவல், சித்தேச்வர் மஹாதேவ் (மத்தியப் பிரதேசம்) ஆகிய ஸ்தலங்களில் கண்டு தரிசிக்கலாம். இதில், கிழக்கு முகமாக உள்ளது தத்புருஷம், தெற்கு முகமாக உள்ளது அகோரம், மேற்கு முகமாக உள்ளது ஸத்யோஜாதம், வடக்கு முகமாக உள்ளது வாமதேவம், ஐந்தாவது முகமாக, அதாவது அரூபமாக விளங்குவது ஈசானம் (தேஜோ ரூபம்).

## விளைச்சலைப் பெருக்கும் வன்மீகநாதர்!

**கா**ஞ்சிபுரம் அருகிலுள்ள பிள்ளைபாளையம் என்ற ஊரின் வயல்காட்டின் நடுவே அமைந்துள்ளது புறாக்கோயில். வயல்வெளியின் சேற்றுக்குள் உள்ள இந்த சிவலிங்கம் வன்மீகநாதர் என்ற அழைக்கப்படுகிறார். விவசாயப் பணிகளை இவரை வணங்கிய பிறகே துவங்குகின்றனர் இப்பகுதி விவசாயப் பெருமக்கள். இதன் மூலம் விளைச்சல் பெருகும் என்பது இவர்களது நம்பிக்கை.

## சிவராத்திரி அபிஷேக, ஆராதனைகள்!

**முதல் யாமம்:** பஞ்சகவ்ய அபிஷேகம், சந்தனப் பூச்சு, வில்வம், தாமரை அலங்காரம், அர்ச்சனை, பச்சைப்பயிறு பொங்கல் நிவேதனம், ருக் வேத பாராயணம்.

**இரண்டாம் யாமம்:** சர்க்கரை, பால், தயிர், நெய் கலந்த ரஸ பஞ்சாமிர்த அபிஷேகம், பச்சைக் கற்பூரம் பன்னீர் சேர்த்து அரைத்து சாத்துதல், துளசி அலங்காரம், வில்வார்ச்சனை, பாயசம் நிவேதனம், யஜுர் வேத பாராயணம்.

**மூன்றாம் யாமம்:** தேன் அபிஷேகம், பச்சைக் கற்பூரம் சாத்துதல், மல்லிகை அலங்காரம், வில்வார்ச்சனை, எள் அன்னம் நிவேதனம், சாம வேத பாராயணம்.

**நான்காம் யாமம்:** கருப்பஞ்சாறு அபிஷேகம், நந்தியாவட்டை மலர் சாத்துதல், அல்லி, நீலோத்பலம் சாத்தி அலங்காரம், அர்ச்சனை, சுத்தான்ன நிவேதனம், அதர்வண வேத பாராயணம்.

**– ப்ரவீணா அருண், பென்னாகரம்**



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# நடனமாடும் தட்சிணாமூர்த்தி!



திருச்சி மாவட்டம், திருப்பாற்றுத்துறையில் உள்ளது ஸ்ரீஆதிமூலேஸ்வரர் திருக்கோயில். இக்கோயில் கருவறை சுற்றுச்சுவரில் தட்சிணாமூர்த்தி வீணை வாசிக்கும் கோலத்தில் காட்சியளிக்கிறார். அவரது இடதுகால் சற்றே மடங்கி நளினமாக, நடனமாடும் கோலத்தில் காட்சி தருகிறது. சீடர்களின்றி, வீணையோடு, நடனமாடும் திருக் கோலத்தில் காட்சி தரும் இந்த தட்சிணாமூர்த்திக்கு இசைக்கலைஞர்கள் சிறப்பு வழிபாடுகள் செய்து வழிபடுகின்றனர்.

## லிங்க வடிவில் சனீஸ்வரர்!

திருவண்ணாமலை மாவட்டம், ஏரிக்குப்பம் எனும் சிற்றூரில் லிங்க வடிவில் சனீஸ்வரர் காட்சி யளிக்கிறார். இவரின் மேனியில் யந்திரம் பொருத்தப்பட்டுள்ளதால், 'யந்திர சனீஸ்வரர்' என அழைக்கப்படுகிறார். ஆறடி உயரமும், இரண்டரை அடி அகலமும் கொண்ட இந்த யந்திர சனீஸ்வரர் தாமரைப் பீடத்தில் வீற்றிருந்து கிழக்கு நோக்கிக் காட்சியளிக்கிறார்.



## கரத்துக்கு பூஜை!

ராமேஸ்வரம் திருத்தலத்தில் பல்லாயிரக் கணக்கான ருத்ராட்சங்கள் சேர்த்துப் பின்னப்பட்ட ஒரு பந்தலின் கீழ் நடராஜ பெருமான் அருள்பாலிக்கிறார். இப்பெருமானுக்கு எதிரில் நந்தியெம்பெருமான் காட்சி தருகிறார். நடராஜர் சன்னிதியின் பின்புறம் ஒரு கரம் மட்டுமே உள்ளது. இக்கரத்துக்குத் தினமும் பூஜை நடைபெறுகிறது. இங்கு அருவமாக பதஞ்சலி முனிவர் உறைந்திருப்பதாக ஐதீகம்.

– நெ.இராமன், சென்னை

## இரண்டு நந்திகள்!

நாகப்பட்டினம் மாவட்டம், திருநாங்கூரில் உள்ளது ஸ்ரீமதங்கீஸ்வரர் திருக்கோயில். இக்கோயிலின் அருகில் உள்ள திருவெண்காட்டில் சிவபெருமான்-மாதங்கியின் திருமணம் நடைபெற்றது. ஈசன், மாதங்கியிடம் எந்த சீரும் வாங்காமல் திருமணம் புரிந்தார். இதனால், திருமணத்துக்கு வந்திருந்தோர் அதைப் பற்றிக் குறை கூறினர். மாதங்கியை தான் மணப்பதால் இருவரும் ஒருவரே என்று கூறிய ஈசன், நந்தியை கயிலாயத்துக்கு அனுப்பி செல்வத்தை எடுத்து வரும்படிக் கூறி, இறைவியிடம் தந்தார். இதை உணர்த்தும் விதமாக இக்கோயிலில் இரு நந்திகள் முன்னும் பின்னுமாகக் காட்சி தருகின்றன. மதங்க நந்தி இறைவனைப் பார்த்தபடியும், சுவேத நந்தி மறுபக்கம் திரும்பியிருப்பதைக் காணலாம். பிரதோஷத்தின்போது இரு நந்திகளுக்கும் சிறப்பு பூஜை நடைபெறுகிறது.





https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

**வங்கத்தில் பிளேக் நோய் மனித உயிர்களைக் கொள்ளை கொண்டு போனபோது, நோய்வாய்ப்பட்டவர்களுக்கு ரண சிகிச்சை செய்தார். மாண்டு போனவர்களைத் தோளில் சுமந்து நல்லடக்கத்துக்கு ஏற்பாடு செய்தார் நிவேதிதா.**



சகோதரி நிவேதிதாவின் 150 ஆம் ஆண்டு சிறப்புக் கட்டுரை








www.TheMagnat.com

# குடில் ஒன்று கோயிலானது!

முருகன் வாழும் குன்றுகளைச் சுற்றியிருக்கும் இல்லங்களில் எப்போதாவது சில மயிலிறகுகள் வந்து விழுவதுண்டு. அப்படி விழும் இறகைப் பெரியவர்கள் பார்த்தால், அதனை பூஜை அறையில் வைத்து பூஜிப்பர். சிறு பிள்ளைகள் கையில் கிடைத்தால், புத்தகங்களுக்கு இடையில் வைத்து நேசிப்பர். அப்படி அயர்லாந்து மண்ணில் இருந்து வந்து விழுந்த ஒரு மயிலிறகே, மார்கரெட் எலிஸபெத் நோபிள் எனும் நிவேதிதா தேவி!

பொதுவாக, சீடர்கள்தாம், குருநாதரைத் தேடிப் போவதுண்டு; ஆனால், குருநாதர் தேடிக் கண்டுபிடித்த சீடர், இந்த நிவேதிதா. இந்திய மண்ணில் அடிமைத்தனத்திலும் அறியாமையிலும் மூழ்கிக் கிடந்த பெண் இனத்தை ஈடேற்ற ஓர் அறிவுஜீவியைத் தேடிய போது, மாமணியாய் வந்து வாய்த்தார் நிவேதிதா. 1898இல் கொல்கத்தா துறைமுகத்துக்கு வந்தவர், தம்மை இந்தியப் பெண்ணாகவும், அன்னை சாரதாமணியின் சீடராகவும் மாற்றிக் கொண்டு, 16, பாஸ்பரா தெருவிலுள்ள வீட்டில் குடியேறினார். தாம் குடியேறிய அந்த இல்லத்தையே, பெண் பிள்ளைகள் கல்வி பெறுவதற்குரிய பள்ளியாகவும் மாற்றினார்.

துறைமுகத்துக்கு சுவாமிஜியே நேரில் சென்று அவரை வரவேற்றார்.


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# ஆன்மிகத் தொண்டு

பேராசிரியர் தி.இராசகோபாலன்

அவரின் ஆன்மிகப் பணியில் தம்மை இணைத்துக் கொண்ட மார்கரெட்டுக்கு, 'நிவேதிதா' எனத் திருநாமம் சூட்டினார். நிவேதிதா என்பதற்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் எனப் பொருள். இந்தியா எப்படி ஆங்கிலேயர்களால் சுரண்டப்படுகிறது என்பதை இந்தியர்களுக்கே எடுத்துரைத்தார். பாரத நாடு ஒரு பாரம்பரியம் மிக்க பழைமையான நாடு என்பதை, ஐரோப்பியர்களுக்கும் அமெரிக்கர்களுக்கும் விளக்கிச் சொன்னார். வங்காள ஓவியங்களின் சிறப்பை உலகுக்கு எடுத்துரைத்தார். ஓவியர் அபானிந்தநாத் தாகூர் துணையுடன், பாரதமாதாவின் ஓவியத்தை தீட்டிக் காட்டினார்.

அவர் இல்லம், இந்திய விடுதலைக்குப் போராடும் போராளிகளின் பாசறை ஆனது. அரவிந்த கோஷ், ரவீந்த்ரநாத் தாகூர், ஜெகதீஷ் சந்திரபோஸ், விவேகானந்தர் ஆகியோர் அரசியல் வியூகங்களை வகுப்பதற்குரிய அந்தரங்க இடமானது. அரவிந்தரை சதி வழக்கில் சிக்க வைத்து, ஆயுள் தண்டனை வழங்குவதற்கு ஆங்கில அரசு முயன்றபோது, அவரை பாண்டிச்சேரியில் தஞ்சம் புக அறிவுறுத்தியவர் நிவேதிதா!



1899இல், வங்கத்தில் பிளேக் நோய் மனித உயிர்களைக் கொள்ளை கொண்டு போன போது, நிவாரணப் பணிகளில் துணிந்து இறங்கியவர் நிவேதிதா. நோய்வாய்ப்பட்டவர்களுக்கு ரண சிகிச்சை செய்தார். மாண்டு போனவர்களைத் தோளில் சுமந்து நல்லடக்கத்துக்கு ஏற்பாடு செய்தார். வங்காளத்தில் அரசாலும், பதுக்கல்காரர்களாலும் உருவாக்கப்பட்ட பஞ்சத்தில், மனிதர்கள் நடைபாதைகளில் பசியாலும் பட்டினியாலும் மடிந்து விழுந்தனர். அப்போது சுவாமிஜி அவர்களுடைய துணிச்சலான நிவாரணப் பணியில், சகோதரி நிவேதிதாவும் சம பங்கேற்றார்.

ஒரு குருநாதருக்குச் சீடராக வந்தவரே, மற்றொரு சீடருக்குக் குருவாக முடியும் என்பது நிவேதிதா - பாரதியார் சந்திப்பால் புலனாகிறது. 1905இல் காசியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் கலந்துகொண்டு, கொல்கத்தா டம்டம் விமான நிலையத்துக்கு வந்த பாரதியாரை, நிவேதிதா தேவி சந்திக்க நேர்ந்தது. அப்போது, நிவேதிதா பாரதியாருக்கு வாசக தீட்சை, மானஸ தீட்சை, நயன தீட்சை அனைத்தையும் நல்குகிறார். நிவேதிதா தமக்குத் தந்த ஞான உபதேசத்தை பாரதியார், 'ஸ்ரீ கிருஷ்ணன் அர்ஜுனனுக்கு விசுவரூபம் காட்டி, ஆத்மநிலை விளக்கியதொப்ப, எனக்குப் பாரத மாதாவின் சம்பூர்வ ரூபத்தைக் காட்டி, சுதேச பக்தியுபதேசம் புரிந்தருளிய குருவின் சரண மலர்களில் இச்சிறு நூலைச் சமர்ப்பிக்கின்றேன்' என்று எழுதிக் காட்டுகிறார்.

பாரதியார் தாம் பெற்ற விசுவரூபத்தை அவருடைய மனைவி செல்லம்மாவிடமும் கூறியிருக்கிறார். அதனை பாரதியின் மறைவுக்குப் பிறகு எழுத வந்த செல்லம்மா பாரதி, 'காசியில் நடந்த காங்கிரஸ், பாரதியாரை புது மனிதனாக மாற்றியது. அதற்கு முன்னால் நடந்த காங்கிரசுகளைப் போலன்றி, இந்தக் காங்கிரஸ் புத்துயிர் பெற்று விளங்கிற்று. டம்டம் விமான நிலையத்தில் நிவேதிதா தேவியார் அவருக்கு ஞானோபதேசம் செய்ததை பாரதியார் என்னிடம் உணர்ச்சியோடு தெரிவித்திருக்கிறார்' என்கிறார்.

அரசியல் பணியிலும் ஆன்மிகப் பணியிலும் தம்மைக் கரைத்துக் கொண்ட நிவேதிதாதேவி, தம் 44ஆம் வயதில் 13.10.1911 அன்று இறைவனடி எய்தினார். நிவேதிதா தேவி ஒரு வீராங்கனையாகத் திகழ்ந்ததை, அவருடைய நினைவேந்தல் கூட்டத்தில் பேசிய ராஷ்பிகாரி கோஷ், ''கருகிப் போன எலும்புகளும் கூட உயிர் பெற்று அசையத் தொடங்குகின்றன என்றால், அவற்றுக்குள் சகோதரி நிவேதிதா செலுத்திய உயிர்மூச்சே காரணம் எனலாம்! நமது இளைஞர்கள் ஒரு புதிய, உயர்வான, உண்மையான, உன்னதமான வாழ்க்கையைப் பெறுவதற்கான உணர்ச்சி நெருப்பால், உத்வேகம் பெற்றுள்ளார்கள் என்றால், அது அந்த மாது சிரோமணிக்குச் சேர வேண்டிய பெருமை'' எனப் பேசிய பேச்சு, நமக்குப் புலப்படுத்துகிறது.

அவர் குடியிருந்த வீடு, கோயிலாகிறது. அதனைப் புதுப்பிப்பதற்கு மத்திய அரசு ரூ.1.35 கோடி ஒதுக்கியுள்ளது. அதனை கோயிலாக்கும் பொறுப்பு, ராம கிருஷ்ணா - சாரதா மடத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

சகோதரி எழுதிய, 'தி மாஸ்டர் ஐ சா ஹிம்', 'தி வெப் ஆப் இன்டியன் லைப்', 'ஸ்டெடீஸ் ப்ரம் ஆன் ஈஸ்டன் ஹோம்' ஆகிய நூல்கள், அவர் பயன்படுத்திய நாட்குறிப்பு, ஓவியங்கள், அயல்நாடுகளுக்கு அவர் எழுதிய மடல்கள், விடுதலைப் போராட்ட கால ஆவணங்கள் என, அனைத்தும் அங்கே வைக்கப்படும். மொத்தத்தில், பாரதப் புத்திரர்கள் பார்வையில் குடில் ஒன்று, கோயிலாகிறது.


https://t.me/softknowledge

www.TheMagnat.com

https://t.me/softknowledge



எம்.கோதண்டபாணி



# அன்னை காமாட்சி அருட்திருவிழா!



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge





அருட்கருணை பொங்கும் திருவிழி நோக்கினால், தம்மை நாடிப் பணிபவர்களின் விருப்பங்களை நிறைவேற்றி அருள்பவள் ஸ்ரீகாஞ்சி காமாட்சி அம்மன். 'காம' என்றால் அன்பு மற்றும் கருணை எனப் பொருள். 'அட்ச' என்றால் கண் என அர்த்தம். ஆக, அன்பையும் கருணையையும் கண்களாகக் கொண்டவள் அம்பாள் காமாட்சி எனப் பொருள் கொள்ளலாம். தவிர, 'கா' என்றால் ஸரஸ்வதி, 'மா' என்றால் மஹேஸ்வரி, 'க்ஷி' என்றால் லக்ஷ்மி. எனவே, முப்பெரும் சக்திகளும் ஒன்றாக இணையப் பெற்றவள் அன்னை காமாட்சி எனவும் கொள்ளலாம்.

புண்ணிய பூமியான பாரதத்தின் ஐம்பத்தியொரு சக்தி பீடங்களில், 'காமகோடி பீடம்' என்று அழைக்கப்படும் காஞ்சிபுரத்தில், அன்னை ஸ்ரீகாமாட்சி பத்மாசனத் திருக்கோலத்தில், நான்கு திருக்கரங்களில் பாசம், அங்குசம், கிளி அமர்ந்த புஷ்பபாணம் மற்றும் கரும்பு வில் ஏந்தி, பக்தர்களைக் காக்கும் பரோபகாரியாக அமர்ந்து அருள்புரிந்து வருகிறாள். 'காமேஸ்வரி, திரிபுரசுந்தரி, ராஜராஜேஸ்வரி, மகாதேவி, லலிதா, ஸ்ரீசக்ரநாயகி' என்றெல்லாம் பக்தியுடன் அழைக்கப்படும் காமாட்சி அன்னை, கலைமகளையும் திருமகளையும், தமது இரு கண்களாகக் கொண்டு இத்தலத்தில் அருளாட்சி நடத்துகின்றாள். கருவறையில் மூலவர் காமாட்சிக்கு அருகில் ஒற்றைக் காலில் தவம் புரியும் அன்னை காமாட்சியின் திருக்கோல தரிசனம் பக்தர்கள் அவசியம் காண வேண்டிய ஒன்று.

அம்பாளின் திருப்பாதப் பெருமையை சௌந்தர்ய லஹரியில் ஆதிசங்கரர் மிகவும் விரிவாக எடுத்துரைத்துள்ளார். தெய்வங்களின் பொற்பாத தரிசனப் பேறு தரும் ஆலயங்கள் அரிது. அப்படிப்பட்ட அம்பிகையின் பாத தரிசனத்தை வழங்கும் ஆலயமாகக் காஞ்சி காமாட்சி அம்மன் கோயில் விளங்குகிறது. காஞ்சி நகரத்தின் பிரதானத் திருக்கோயில்கள் அனைத்தும், ஸ்ரீகாமாட்சி அம்மனை நோக்கியே அமைந்துள்ளது சிறப்பு. மேலும், 108 வைணவ திவ்யதேசப் பெருமாள்களில் ஒருவரான கள்வர் பெருமாள் இக்கோயிலில் அருள்பாலிப்பது குறிப்பிடத்தக்கது.

நித்ய விஸ்வரூப தரிசனம் தரும் காமாட்சி அன்னை, பாலகியாக அவதாரம் செய்த திருத்தலம் இது. 24 அட்சரங்களைக் கொண்டது காயத்ரி மந்திரம். அதை உணர்த்தும் விதமாகவே ஆலயத்தில் அமைந்துள்ள காயத்ரி மண்டபம், 24 தூண்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. முப்பத்து முக்கோடி தேவர்களும் தினமும் வழிபடும் அன்னை ஸ்ரீகாமாட்சி திருக் கோயிலில் தினமும் அதிகாலை கோ பூஜைக்குப் பிறகே அன்றாடத் திருப்பணிகள் நடைபெறுகின்றன.

அசுரனை அழித்து, தேவர்களின் துயரம் போக்க பிரத்யட்சமான அன்னை காமாட்சி, அசுர சம்ஹாரத்துக்குப் பின்பு மிகவும் உக்கிரமாக விளங்கியதால், ஆதிசங்கரர் அம்பாளின் முன்பு ஸ்ரீசக்கரத்தை பிரதிஷ்டை செய்து, அம்மனின் உக்கிரத்தை அருள் சக்தியாக மாற்றினாராம். ஸ்ரீஆதிசங்கரர் இக்கோயிலில் தனிச் சன்னிதியில் வீற்றிருந்து அருள்பாலிப்பதும், கருவறையில் மூலவர் காமாட்சி அம்பாளின் இடது பக்கத்தில் வடதிசை நோக்கியவாறு அரூப லட்சுமியாகிய அஞ்சன காமாட்சி காட்சியளிப்பதும் இக்கோயிலில் விசேஷம்.


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



காஞ்சிபுரம் திருத்தலத்தில் அமைந்துள்ள எல்லா சிவாலயங்களுக்கும் காமாட்சி அம்பாளே மூலவராக விளங்குகிறாள். இதனால், காஞ்சியில் உள்ள எந்தக் கோயிலிலும் அம்பாளுக்கு தனி சன்னிதி கிடையாது. அம்பாளின் உத்ஸவ மூர்த்திகள் மட்டுமே அனைத்துக் கோயில்களிலும் அருள்பாலிக் கின்றனர்.

*'நானாஸ்தி விக்ரஹ தேவ்யாஹா காஞ்ச்யாம் தன்மூல விக்ரஹாயாம்'*

எனும் ஸ்லோக வாக்கியம் இதனை தெளிவாக்குகிறது. இக்கோயிலில் மிகவும் உக்கிரமாக இருந்த காமாட்சி அம்மனை, எட்டாம் நூற்றாண்டில் ஜகத்குரு ஆதிசங்கரர் ஸ்ரீசக்ரம் பிரதிஷ்டை செய்து, சௌம்ய ரூபிணியாக மாற்றி சாந்தப்படுத்தினார் என்பது வரலாறு. அயோத்தியின் தசரத சக்ர வர்த்தி இக்கோயிலில், 'புத்திர காமேஷ்டி' யாகம் செய்தார் என்பதும் மார்கண்டேய புராணத்தின் மூலம் அறிய வருகிறது.

ஸ்தூலம், சூட்சுமம், காரணம் எனும் மூவகை வடிவில் அம்பாள் அமர்ந்து அருள்புரியும் உலகப் பிரசித்தி பெற்ற இத்திருக் கோயிலின் அஷ்ட பந்தன மகா கும்பா பிஷேகப் பெருவிழா, 9.2.2017 அன்று காலை சுமார் 9.30 மணியளவில் நடை பெற்றது. தமிழ்நாடு மட்டுமின்றி, வெளி மாநில, வெளி நாடுகளைச் சேர்ந்த லட் சக்கணக்கான பக்தர்கள் பக்தியோடு கை தொழ, மங்கல இசை முழக்கத்தோடு, அதிர்வேட்டுகளின் சத்தம் வானைப் பிளக்க, வானோரும் மண்ணோரும் வணங்கித் துதிக்க, வெகு விமரிசையாக நடைபெற்றது.



நகரங்களில் சிறந்தது காஞ்சி என்பது முதுமொழி. ஏராளமான திருக்கோயில் களைத் தன்னகத்தே கொண்ட காஞ்சி மாநகருக்கு தினமும் பல்லாயிரக் கணக் கான பக்தர்கள் வருகை தருகின்றனர். இங்கே தனிக் கோயிலில் எழுந்தருளி இருக்கும் அம்பாள் காமாட்சி திருக் கோயில் உலகப் பிரசித்தி பெற்றதாகும்.

ஸ்ரீகாமாட்சி அம்மன் கோயிலில், காயத்ரி மண்டபத்துக்கு வலப்பக்கம் சன்னிதி கொண்டு அருள் பாலிக்கும் ஸ்ரீ வாராஹி அம்மன் மிகவும் சக்திவாய்ந்த வள். பிரதி வெள்ளிக் கிழமைகளில்

காஞ்சி சங்கராச்சாரியார்கள் ஸ்ரீஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீவிஜயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆகியோர் ஸ்ரீகாமாட்சி அன்னை கருவறை விமானக் கலசங்களின் மீது புனித நீரை ஊற்றி கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்தனர். இதைத் தொடர்ந்து, நான்கு ராஜ கோபுரங்களின் கலசங்களுக்கும் அபிஷேகம் செய்விக் கப் பெற்றது. அதைத் தொடர்ந்து கோயிலின் உள்ளே யும் வெளியேயும் திரண்டிருந்த பக்தர்களின் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது. புனித நீர் தெளிக்கப்பட்ட தும் பக்தர்கள் தங்கள் பாவங்கள் தொலைந்ததாய், பக்திப் பெருக்கில் திளைத்ததைக் காண முடிந்தது.

கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு கோயிலின் நான்கு திசை ராஜகோபுரங்கள், நூதன தங்கப் பல்லக்கு, காமகோடி விமான வாகனம், வெள்ளித் தேர் ஆகியவை புதுப்பிக்கப்பட்டுள்ளன. அன்னை காமாட்சியின் கருவறை விமானம் 70 கிலோ தங்கத் தால் வேயப்பட்டு மின்னுகிறது. ஆதிசங்கரர் சன்னிதி முழுவதும் கருங்கற்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளதோடு, கோயில் வளாகத்தில் உள்ள அர்த்த மண்டபம், காயத்ரி மண்டபம், வசந்த மண்டபங்கள், நவராத்திரி மண்டபம், கனு மண்டபம், வாகன மண்டபம், கோசாலை, சுக்ரவார மண்டபங் கள், ரிஷிகோபுரம், திருமடப்பள்ளி, திருக்குளம், வெளிப்பிராகாரம் உள்பட, அனைத்துப் பகுதிகளும் ரூ.35 கோடி செலவில் புனரமைக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, கும்பாபிஷேகத்தையொட்டி, 3.2.2017 முதல் விக்னேஸ்வர பூஜை, கணபதி பூஜை, ஹோமம், நவக்கிரஹ ஹோமம், வாஸ்து ஹோமம், ரக்ஷா பந்தனம், யாகசாலை பூஜைகள், மண்டல பூஜை, ஏழு கால யாக சாலை பூஜைகள், சதுர்வேத சமர்ப்பணம், கன்யா பூஜை, சுவாசினி பூஜைகள் நடைபெற்றன.

தினமும் பிரபல இசைக் கலைஞர்களின் வாய்ப் பாட்டு, வயலின், மிருதங்கம், நாகஸ்வர கச்சேரி மற்றும் பல ஆன்மிக நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

கும்பாபிஷேக வைபவத்துக்குப் பின்னர், பிற்பகல் காமாட்சி அன்னையை தரிசனம் செய்ய பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. மாலை அம்பாளுக்கு மகா அபிஷேகமும், இரவு அன்னையின் வெள்ளி ரத வீதியுலா புறப்பாடும் சிறப்பாக நடைபெற்றன.

**புகைப்படம்: எல்.கோபிநாத், எல்.பத்மநாபன், காஞ்சிபுரம்**


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

1841, 1944, 1976, 1995 ஆகிய வருடங்களில் இந்தக் கோயிலின் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டிருந்த நிலையில், தற்போது 2017ல் இந்த கும்பாபிஷேகம் நடந்தேறியுள்ளது மிகவும் சந்தோஷம் தருவது. காமாட்சி அம்மனை பதினாறு நாட்கள், பதினாறு பிர தட்சிணம் செய்து பக்தர்கள் வணங்கி வர, திருமணம், குழந்தைப்பேறு, வேலை கிடைத்தல் போன்ற அனைத்துக் காரியங்களும் நிச்சயம் கைகூடும் என்பது பலரின் அனுபவத்தில் இன்றளவும் காணும் உண்மை.

**– ஸ்தானிகர், அர்ச்சகர், மிராஸ்தார்**
**நீலக்கல் சி.என்.இராமச்சந்திர சாஸ்திரிகள்,**
**ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்**

இந்த அம்மனை மனதார வணங்கி வழிபட்டு வர, நினைத்த காரியங்கள் அனைத்தும் தடையின்றி நடைபெறும்.

அதே போல், இக்கோயிலில் உள்ள பைரவர் மற்றும் துர்கை சன்னிதிகளில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் 4.30 - 6.00 ராகு காலத்தில் பூஜை செய்து வணங்க, அனைத்துக் காரியத் தடைகளும் விலகி, ஜயம் ஏற்படும் என்பது எங்களது அனுபவத்தில் கண்ட உண்மை என்றுகூட சொல்லலாம். இன்றும் இந்த பூஜையை நாங்கள் விடாமல் செய்து, அம்பாள் அருளால் பலன் அடைந்து வருகிறோம்.

**– டாக்டர் பி.கோபிநாத்,**
**இயக்குநர், வரமஹாலக்ஷ்மி சில்க்ஸ், காஞ்சிபுரம்**



## சமயபுரம் மாரியம்மன் கோயில்

**மகா கும்பாபிஷேகம்!**

**தி**ருச்சி மாவட்டம், சமயபுரம் மாரியம்மன் கோயிலில் 12 ஆண்டுகளுக்குப் பின்பு 6.2.2017 அன்று காலை மகா கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ்விழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு அம்பாளின் அருள் பெற்றனர்.

தமிழகத்தின் சக்தி வாய்ந்த அம்மன் திருக்கோயில்களில் பிரசித்தி பெற்றது சமயபுரம் மாரியம்மன் திருக்கோயில். தமிழகம் மட்டுமின்றி, வெளி மாநிலங்களிலிருந்தும் வருகை தரும் பக்தர்களுக்கு வேண்டும் வரம் தந்தும், தீராத நோய்களைத் தீர்த்து வருவதாலும் பக்தர்கள் நம்பிக்கையோடும் பயபக்தியோடும் அம்மனை தரிசனம் செய்து வருகிறார்கள்.

இக்கோயில் மகா கும்பாபிஷேகத் திருப்பணிகள் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, அரசு ஒதுக்கிய 25 கோடி ரூபாயிலும், பக்தர்களின் நன்கொடையாலும் வேகமாக நடைபெற்று வந்தன. கோயிலில் புதிதாக விநாயகர் சன்னிதி, உத்ஸவர் சன்னிதி, மேற்கு, தெற்கு, வடக்கு திசை கோபுரங்களும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.





இருநூறுக்கும் மேற்பட்ட சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க, 6.2.2017 அன்று காலை ஏழு மணியளவில் கோபுரக் கலசங்களுக்கு புனித நீர் தெளிக்கப்பட்டு கும்பாபிஷேகம் வெகு விமரிசையாக நடைபெற்றது. பின்னர், புனித நீரை சிவாச்சாரியார்கள் பக்தர்கள் மீது தெளித்தனர். இவ்விழாவில், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று அம்மனை தரிசித்து மகிழ்ந்தனர்.

**– எஸ்.எம்.எஸ்.சங்கர்,**
**திருச்சி**


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge





## கங்கை கொண்ட சோழபுரத்தில்...

**ரா**ஜேந்திர சோழன் 1019-ல் கங்கை வரை படையெடுத்து வெற்றி பெற்றதன் காரணமாக கங்கை கொண்ட சோழன் எனப் போற்றப்பட்டான். தன் வெற்றியை சிவபெருமானுக்கு அர்ப்பணிக்கும் விதமாக, கி.பி.1023-ல் அரியலூர் அருகே கங்கை கொண்ட சோழபுரம் எனும் நகரை உருவாக்கி, அதில் பிரகதீஸ்வரர் கோயிலைக் கட்டினான். இக்கோவில் யுனெஸ்கோவால் உலக பாரம்பரியச் சின்னமாக பாராமரிக்கப்பட்டு வருகிறது. இக்கோயிலில் கடந்த 1932-ல் கும்பாபிஷேகம் நடந்தது. பின் 85 ஆண்டுகளுக்கு பிறகு பிப்.2ம் தேதி விமரிசையாக நடைபெற்றது. இதற்காக ஜனவரி 6-ம் தேதி ரிஷிகேசத்தின் கங்கையிலிருந்து 108 குடங்களில் புனிதநீர் எடுத்து வரப்பட்டு, திருலோக்கி எனும் இடத்தில் வைக்கப்பட்டு, வரலாற்று அறிஞர்கள், ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், ஆதினகர்த்தர் ஆகியோர் புடைசூழ யானை மீது புனிதநீர் வைக்கப்பட்டு ஊர்வலமாக கங்கை கொண்டசோழபுரத்திற்கு கொண்டு வரப்பட்டது.

காலை 9.30 மணியளவில் மூலவர், துர்க்கையம்மன், பிரகன்நாயகி ஆலய கோபுரங்களின் கலசங்களுக்கு சிவாச்சாரியார்கள் புனிதநீரை ஊற்றினர். பின் மூலவர்களுக்கு புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. கோவில் வளாகத்தில் திரண்டிருந்த பக்தர்கள் மீது புனிதநீர் தெளிக்கப்பட்டது. •


## திருஅண்ணாமலையில்...

**மகா கும்பாபிஷேகம்!**

**தி**ருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழா 15 ஆண்டுகளுக்குப் பிறகு 6.2.2017 அன்று கோலாகலமாக நடைபெற்றது. அன்று காலை சுமார் 7 மணியளவில் ஆறாம் யாகசாலையில் இருந்து கலசங்கள் புறப்பட்டு, கிளி கோபுரம் வழியாக சுவாமி, அம்மன், விநாயகர், முருகன் சன்னிதிகளின் விமானங்களுக்கு கொண்டு செல்லப்பட்டது. தொடர்ந்து 9.20 மணி அளவில் ராஜ கோபுரம், அம்மணி அம்மன் கோபுரம், பேயகோபுரம், திருமஞ்சன கோபுரம், கிளி கோபுரம் உள்ளிட்ட ஒன்பது கோபுரங்கள், புதிதாக அமைக்கப்பட்ட கொடிமரம் மற்றும் மூலஸ்தான அம்பாள், சுவாமி விமான கோபுரக் கலசங்களுக்கும் புனித நீர் ஊற்றி அபிஷேகம் செய்யப்பட்டது. இவ்விழாவில், திருவண்ணாமலை, வேலூர், காஞ்சி, சென்னை, திருவள்ளூர், சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி உள்ளிட்ட ஊர்களில் இருந்தும் அண்டை மாநிலங்களிலிருந்தும் பக்தர்கள் பெருமளவில் கலந்து கொண்டு அருள் பெற்றனர்.

**- எஸ்.ஆர்.வி. பாலாஜி, திருவண்ணாமலை**








https://t.me/softknowledge

https://t.me/softknowledge
www.TheMagnat.com



# பாதம் பணிந்து பலன் பெறுவோம்!











கோயில் விக்ரகங்களின் பாதங்களைக் கவனித்திருக்கிறீர்களா? சிலர், இரு பாதங்களையும் பூமியில் பதித்தும், இன்னும் சிலர் ஒரு பாதத்தை மட்டும், அதாவது இடது பாதத்தையோ அல்லது வலது பாதத்தையோ நிலத்தில் பதித்து வைத்து, மற்றொன்றை மடியின் மீது கிடத்தியவாறு அமர்ந்த நிலையிலும் காட்சி தருவர். இன்னும் சிலர் ஒரு பாதம் மட்டும் ஊன்றி, மற்றதை சற்று உயரத் தூக்கி வைத்தோ அல்லது காது குண்டலங்கள் வரை கூட தூக்கிய நிலையிலோ திகழ்வதைப் பார்த்திருப்பீர்கள்.

சரி, இரு பாதங்களையுமே தரையில் பதிக்காமல் உயரத் தூக்கி வைத்திருக்கும் விக்ரகங்களையும் கவனித்திருக்கிறீர்களா? இக்காட்சிகளின் பின்னணியில் ஒரு தத்துவம் உள்ளது. நின்ற கோலம், அமர்ந்த கோலம் இவற்றில் ஒரே தெய்வம் இருவேறு நிலைகளிலும் காணப்படும்!

இடது பாதம் மட்டும் ஊன்றி, வலது பாதம் மடித்த நிலையில் உள்ள ஷீர்டி சாயிபாபா, அம்மன் திருவுருக்களை வணங்குவதால், பூலோகத்தில் உள்ள சுகங்கள் மற்றும் 16 வகையான செல்வங்களைப் பெறலாம்.

வலது பாதம் மட்டும் ஊன்றி, இடது பாதம் மடக்கி வைத்திருக்கும் தட்சிணாமூர்த்தி போன்ற தெய்வங்களை வணங்குவதால் கல்வி அறிவு, கலைகள், உயர்ந்த ஞானம் போன்றவற்றை அடையலாம்.

இரு பாதங்களையும் ஊன்றியிருக்கும் வைணவ தெய்வங்களான விஷ்ணு, திருமால், வேங்கடாசலபதி, ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர் வடிவங்களைத் தொழுவதால் இக, பர சுகங்களை அடையலாம்.

நடராசர் திருவுருக்களில் வலது பாதம் பதித்து, இடது பாதத்தை ஓரளவு உயர்த்தியும், சிதம்பரம், திருக்கயிலை போன்றவற்றில் பாதங்களை மாற்றி வைத்திருப்பதையும் கவனித்திருப்பீர்கள்!

ஸ்ரீரங்கம் ரங்கநாதர் இரு பாதங்களையும் பூமியில் பதியாவண்ணம் கிடந்த நிலையில் (சயனக் கோலத்தில்) இருந்து அவற்றுள் இடது பாதத்தை மட்டும் சற்று உயர்த்தி வைத்திருப்பதைப் பார்த்திருப்பீர்கள். இவரை வணங்குவதால், மேலான சுக வாழ்வையும் ஆரோக்கியத்தையும் இடது பாதம் வழங்கும். வலது பாதம் சுவர்க்கத்துக்கும் மேலான மோட்ச நிலை, அதாவது மீண்டும் பிறவா நிலையை அருளும் ஆற்றல் படைத்தது. எனவே, இவற்றைக் கவனித்து யாருக்கு எது வேண்டுமோ, அவ்வடிவைத் தொழுது அருள்பெறலாமே!

**– பா.மா.வரதன், பெங்களூரு**



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



**சங்கப் புலவர்களில் ஒருவராயிருந்து தமிழ் வளர்த்த தெய்வம்; தமிழ்க்கடவுள் என்று புகழப்படும் முருகப்பெருமான், புலவர் ஒருவரைத் தேடிப்போய் அருள்புரிந்த வரலாறு இது.**

# வேடனாக வந்தருளிய வேலவன்!





தொண்டைநாட்டில் வயிரபுரம் எனும் ஊரில் தோன்றிய சிறுவன், அவ்வூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மாகாளியம்மனை மனம், மொழி, மெய்களால் வணங்கி வந்தான். பள்ளியில் ஆசிரியரிடம் கல்வி கற்கும்போது, அவரை வணங்கி உயிருள்ள ஓவியம் போல, ஆடாது அசையாது இருந்து கல்வி கற்றான். அதுமட்டுமல்ல, பாடம் நடக்கும்போது, 'இது எப்படி? அது எப்படி?' என்றெல்லாம் ஆராய்ச்சியில் ஈடுபடாமல், பாடம் முடியும்வரை பொறுமையாகக் கேட்பான்.

www.TheMagnat.com

அதன்பின், குருநாதர் சொல்லிக்கொடுத்த பாடங்களை மனதில் நினைத்து, சிந்தித்துத் தெளிவு பெறுவான். புல் கண்ட இடங்களில் மேய்ந்த பசு, அதன்பின் ஓரிடத்தில் வயிற்றிலிருந்து புல்லைச் சிறிது சிறிதாக வாய்க்குக் கொண்டு வந்து, அசைபோட்டு ஜீரணிப்பதைப் போல, அச்சிறுவன் குருநாதர் சொல்லிக் கொடுத்தவைகளை நன்கு மனதில் வாங்கிக்கொண்டு, பிறகு தனியே இருந்து அவற்றைச் சிந்தித்துத் தெளிவு பெறுவான்.

அச்சிறுவனின் பெயர்... என்ன அவசரம்? குருநாதரே பெயர் சூட்டுவார். அதுவரை பொறுமையாக இருப்போமே! செல்வந்தரிடம் ஏழை ஒருவர் வணங்கிப் பொருள் பெறுவதைப்போல, சிறுவன் குருநாதரிடம் அடக்கமாக இருந்து கல்வி கற்று வந்தான்.

ஒரு நாள்... தன் தினைக்கொல்லையைக் காவல் காக்க, சிறுவனை அனுப்பினார் குருநாதர். சிறுவனும் பொறுப்பாகத் தினைக்கொல்லையைக் காவல் காத்தான். வீசிய தென்றல் காற்றில் அசதியால் கண்கள் மூட, சிறுவன் தூங்கி விட்டான். திடீரென்று அவன் கண் விழித்தபோது, ஐயனார் கோயில் மண் குதிரையைப் போலப் பெருங்குதிரை ஒன்று, தினைக்கொல்லையில் மேய்ந்து கொண்டிருந்தது. வாயால் தள்ளித்தள்ளித் தின்பதும், உறுதியான கறுத்த கால்களால் பயிர்களை அழித்துக் கொண்டும் இருந்த அக்குதிரையைப் பார்த்ததும், சிறுவனுக்குப் பதறியது. 'நாம் தெய்வமாக மதிக்கும் குருநாதரின் வயலை இக்குதிரை அழித்துக் கொண்டிருக்கிறது. குதிரையோ, மன்னர் காளிங்கராயனுடையது' என்று பதறியபடியே, குதிரையை விரட்டினான். குதிரையோ, சிறுவன் மீது பாய்ந்தது. சிறுவன், 'பளிச்'சென்று ஒதுங்கி, மாகாளியம்மனை மனதில் இருத்தி,

**'வாய்த்த வயிரபுர மாகாளியம்மையே!**
**காய்த்த தினைப்புனத்துக் காலைவைத்துச் சாய்த்துக்**
**கதிரைமா ளத்தின்னும் காளிங்க னேறும்**
**குதிரை மாளக் கொண்டு போ!'**



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# முருகன் திருவிளையாடல்

பி.என்.பரசுராமன்

19

- எனப் பாடினான். அதே விநாடியில் குதிரை கனைத்துத் துள்ளிக் குதித்துக் கீழே விழுந்து இறந்தது. சிறுவனுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. 'இந் நிகழ்ச்சியை குருநாதரிடம் கூற வேண்டும்' என எண்ணி, குருநாதரிடம் ஓடி நடந்ததைக் கூறினான். குருநாதரோ, கழனிக்கு ஓடிப்போய்க் காளிங்கராயன் குதிரை இறந்து கிடந்ததைக் கண்டார்.

விநாடி நேரத்தில் நடந்ததை உணர்ந்த குருநாதர், ''அப்பா... சீடனே! இது மன்னன் காளிங்கராயனின் குதிரை. தகவல் தெரிந்தால் மன்னன் நம் தலையைக் கிள்ளி விடுவான். குதிரை மறுபடியும் உயிரோடு வரும்படியாகப் பாடு'' என்றார்.

சிறுவனோ யோசிக்கவே இல்லை. வயிரபுர மாகாளியைத் துதித்துத் தான் ஏற்கெனவே பாடிய பாடலைச் சற்றே மாற்றிப் பாடினான். பாடலின் கடைசி வரியில், 'குதிரை மாளக்கொண்டு போ' எனப் பாடியிருந்ததை, 'குதிரை மீளக்கொண்டு வா!' எனப் பாடினான். அவ்வளவில், காளிங்கராயனின் இறந்த குதிரை, மறுபடியும் உயிர் பெற்றுத் துள்ளி எழுந்து ஓடியது. நேருக்கு நேராகப் பார்த்த குருநாதர் வியந்தார். ''குழந்



தாய்! உன் வாக்குகள் பொய்ப்பதில்லை. அகத்தியனாகவும் பொய்யாமொழியாகவும் விளங்குவாய் நீ'' என ஆசிர்வதித்தார். அவர் ஆசி கூறியபடியே, அச்சிறுவன் 'பொய்யாமொழிப் புலவன்' ஆனான்.

ஆம்! தமிழ்ப் புலவர்களில் பெரும்புகழ் பெற்ற பொய்யாமொழிப் புலவர்தான் அச்சிறுவன். குருநாதரிடம் மிகுந்த பயபக்தியோடும் அடக்கத்தோடும் கல்வி கற்றுப் பெரும் புகழ் பெற்ற பொய்யாமொழிப் புலவர், கல்விமான்களாலும் அரசர்களாலும் பெரிதும் பாராட்டப்பட்டார். சிவ வழிபாடு முதிர்ந்தது. நின்று, இருந்து, கிடந்து என எதைச் செய்தாலும், சிந்தையில் சிவனே நிறைந்திருந்தார்.

சிவனது வேறு வடிவங்களான முருகன், விநாயகர் முதலான மற்ற தெய்வங்கள் எதுவுமே, பொய்யாமொழியின் அகப்பார்வையில் படவில்லை. அதற்காக ஆறுமுகப்பெருமான் விட்டுவிடுவாரா? தமிழின் கரை கண்ட தண்டமிழ்ப்புலவர் தமிழ்க் கடவுளைப் பாடவில்லையென்றால்... பொய்யாமொழிப்புலவரின் கனவில், பன்னிருகைப் பரமன் காட்சியளித்தார். ''பொய்யா மொழி! நீ நம் மீது ஒரு பாடல் பாடு'' என்றார்.

கனவு கலைந்தது. விழித்தெழுந்த புலவர், ''ஹ...! தந்தையை வணங்கும் நான், தனயனைப் பாடுவதா? கோழியைப் பாடிய வாயால், முட்டையைப் பாடுவேனோ? சிவபெருமானைப் பாடிய வாயால், அவர் மகனான முருகனைப் பாடுவதா? மாட்டேன்'' என்று வாய்விட்டுச் சொன்னார். ஆறுமுக வள்ளலின் ஆணையை மீற முடியுமா? அதற்கான வழி பிறந்தது. ஆமாம்! வழிநடையில்தான் பாடல் பிறக்கப்போகிறது.

தலைசிறந்த வீரரும், கொடையாளியும், தமிழ்ப் புலவர்களைத் தன் உயிர்போல் நினைப்பவருமான தஞ்சைவாணன் என்பவர் மீது, 'தஞ்சைவாணன் கோவை' எனும் நூல் எழுதினார் பொய்யாமொழிப் புலவர். அதை அப்படைத் தலைவரிடம் காண்பிப்பதற்காகச் சென்று கொண்டிருந்த வழியில், பாலை நிலம் குறுக்கிட்டது. பொய்யாமொழி அப்பாலை நிலத்தில் நடந்து செல்கையில், இடக்கையில் வில்லும், வலக்கையில் அம்பும், தோளில் அம்பறாத்தூணியும் கொண்டு வேடன் ஒருவன், பொய்யாமொழியை வழி மறித்தான்.

''ம்...ம்! இருப்பதையெல்லாம் எடுத்து வையுங்கள்! இல்லாவிட்டால், இந்த அம்பை உங்கள் நெஞ்சில் பாய்ச்சி விடுவேன்'' என்றான் வேடன். அதுவரையில் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலேயே, அகப்பட்டிராத பொய்யாமொழி ஏதோ யோசித்தவாறு, ''அப்பா! என்னிடம் செல்வம் ஏதுமில்லை. சிறிதளவு கல்விச் செல்வம்தான் உள்ளது'' என்றார்.

''அப்படியா! நீங்கள் என்ன புலவரா?'' எனக் கேட்டான் வேடன்.

''அப்படித்தானப்பா உலகம் சொல்கிறது'' என்றார் பொய்யாமொழி.

வேடன் சற்று நிதானப்பட்டு, ''சரி! உடன்போக்கின் போது, நற்றாயிரங்கலாக என் மீது ஒரு பாடல் பாடுங்கள்'' எனக் கேட்டான். (பெண்ணொருத்தி தன்


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

மனதுக்குப் பிடித்தவனுடன், பெற்றோரின் அனுமதியின்றி சென்று விடும்போது, அவ்வாறு சென்ற மகளின் நிலையை எண்ணித் தாய் பாடுவதே, நற்றாயிரங்கல்' எனப்படும்.) வேடனின் வார்த்தைகளைக் கேட்டதும் பொய்யாமொழிக்கு மிகுந்த தைரியம் வந்தது. 'இவன் வழிப்பறி செய்பவன் மட்டுமல்ல, தமிழின் வளமையும் அறிந்தவன் போலிருக்கிறது. இல்லாவிட்டால், நற்றாயிரங்கல் துறையில் என்னைப் பாடச் சொல்வானா?' என்று மகிழ்ந்தார்.



''சரி! உன் பெயர் என்ன சொல்'' என்றார் பொய்யாமொழி.

மென்மையாகச் சிரித்த வேடன், ''என் பெயர் முட்டை'' என்றான்.

'இவன் ஒரு தமிழ்ப் புலவனாக இருக்கலாம். தமிழ்ப் புலவனைப் பாடுவதில் குற்றமில்லை' என நினைத்த பொய்யாமொழி, முட்டை என வேடன் சொன்ன பெயரை வைத்தே பாடினார்.

**'பொன்போலும் கள்ளிப் பொறி பறக்கும் கானலிலே**
**என் பேதை செல்லற்கு இயைந்தனளே - மின்போலும்**
**மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போம்**
**கானவேல் முட்டைக்கும் காடு'**

- எனப் பொய்யாமொழி பாடி முடித்ததும் வேடன் பலமாகச் சிரித்து விட்டான்.

பொய்யாமொழிக்குச் சீற்றம் வந்தது. ''ஏன் சிரிக்கிறாய்?'' எனக் கேட்டார்.

சிரிப்பை அடக்கிக்கொண்ட வேடன், ''நீங்கள் பாடிய பாடலின் பொருளைச் சொல்லுங்கள்! நான் சிரித்ததன் காரணத்தைச் சொல்கிறேன்'' என்றான்.

பொய்யாமொழி திகைப்பில் ஆழ்ந்தாலும், தான் பாடிய பாடலுக்குப் பொருள் கூறினார். ''மின்னலைப் போலக் கூர்மையான வேலை உடைய முட்டை என் பவனுக்கு மாறுபட்ட பகைவர்கள் செல்லும், கூர்மையான வேல மரத்தின் முள் தைக்கின்ற காட்டில், பொன்னைப்போல் கள்ளியின் பொறி பறக்கும் காட்டில், என் மகள் தலைவனோடு செல்ல உடன்பட்டு விட்டாளே'' எனப் பொருள் கூறினார்.

வேடன் மேலும் பலமாகச் சிரித்தான். பொய்யாமொழிக்கோ, முகத்தில் சீற்றம் வெடித்தது. அதை லட்சியம் செய்யாத வேடன், ''ஹ...! உங்களைப்போய் 'பொய்யாமொழி' என்கிறார்களே! நீர் சொல்லும் மொழி, 'பொய்யாம்மொழி'யாக இருக்கையில் உம்மைப் பொய்யாமொழி என்று எப்படி அழைக்கலாம்? தவறல்லவா?'' என்றான்.

தன்னை அவமானப்படுத்திய வேடனைக் கூர்மையாகப் பார்த்தார் பொய்யாமொழி. அவருக்குக் குழப்பமாக இருந்தது. வேடனோ, மேலே பேசத் தொடங்கி விட்டான்.

''பொய்... ஆம்... மொழிப் புலவரே! நீர் பாடியதில் சொற்குற்றமில்லை. ஆனால், பொருள் குற்றம் இருக்கிறதே! பல மாதங்கள் தண்ணீர் இல்லாவிட்டாலும், கள்ளிச் செடிகள் காய்ந்து போகாதென்பது உமக்கே தெரியும். அப்படிப்பட்ட கள்ளிச் செடிகளே, சூரியனின் வெப்பத்தால் காய்ந்து கருகி எரிந்து பொறி பறக்கும் பாலை நிலத்தில், கருவேல மரத்தின் முட்கள் தீய்ந்து போகாமலா இருக்கும்? கருவேல முள் காலில் எப்படிக் குத்தும்? நீங்கள் பாடிய பாடலில் பொருள் குற்றம் இதுதான். புரிந்ததா? இனி நான் பாடுகிறேன். நீங்கள் கேளுங்கள்'' என்ற வேடன் பாடினான்.

நிலத்தின் வெப்பத்தால், விண்ணையும் சூரியனையும் சுடும் என்று, மேகம் ஏங்கி (மழை) பெய்யாத பாலைவனத்தில், பொய்யாமொழிப் பகைவர் போல என் மகள் தலைவனோடு சென்றாள் - எனும் கருத்தமைந்த பாடலைப் பாடினான்.

பொய்யாமொழி திகைத்தார். அதை மேலும் அதிகமாக்கும் விதமாக, ''புலவரே! முட்டை பெரியதா? குஞ்சு பெரியதா?'' எனக் கேட்டான் வேடன்.

''குஞ்சுதான் பெரிது'' என்றார் புலவர். அதைக் கேட்ட வேடன், ''அப்படியானால், கோழியைப் பாடிய வாயால், அதன் குஞ்சினையும் பாடுக'' என்று சொல்லி மறைந்தான். திகைத்தார் புலவர். பழைய நினைவுகள் வந்து அவர் மனதை அலைக்கழித்தன. 'அடாடா! வந்தது முருகப்பெருமான். முன்பு அவனே வந்து கனவில் சொல்லியும் நான் கேட்கவில்லை. கோழியை(சிவ பெருமானை)ப் பாடிய வாயால், அதன் குஞ்சை (முருகப்பெருமானை)யும் பாட மாட்டேன் என்றேன்.அப்படிப்பட்ட என்னைத் திருத்திப் பணிகொள்ளத்தான் முருகப்பெருமான் இவ்வாறு வேடனாக வந்து எனக்கு அருள்புரிந்திருக்கிறார்' என்று உளம் உருகிச் சொல்லி, முருகனைத் துதித்துப் பாடிப் பரவசமடைந்தார்.

சிலைகளாக இருந்த சங்கப் புலவர்களைத் தலையசைக்க வைத்தும்,பொற்றாமரைக் குளத்தில் அமிழ்ந்து கிடந்த சங்கப் பலகையை மறுபடி மிதக்கச் செய்தும் அதிசயங்கள் நிகழ்த்திய புலவர் இப்பொய்யாமொழிப் புலவர். அவரைப் பாட வைத்து அருள்புரிந்த ஆறுமுக வள்ளல் நமக்கும் அருள்புரிய வேண்டுவோம்!

**(விளையாடல் தொடரும்)**


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge





# சிம்மவாஹினியாக அருளும் பனசங்கரி!

கர்நாடக மாநிலம், பெங்களூருவில் அமைந்த 'உத்யான நகரி' எனப் போற்றப்படும் பனசங்கரி திருக்கோயில் சக்தி பீடங்களில் பிரசித்தி பெற்றது. இத்திருக்கோயில் அமைந்த காரணத்தாலேயே இத்தல முழு பகுதியுமே பனசங்கரி என்றே அழைக்கப்படுகிறது. சக்தி தேவிக்கு திராவிட பாணியில் அமைந்த பெரிய திருக்கோயில் இது. கோயிலிலுள்ள அறுபத்தைந்து கம்பங்கள் ஒவ்வொன்றிலும் விதவிதமான சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது. சபா மண்டபத்துக்கு ஆதாரமான நான்கு புலி உருவத்துடன் கூடிய ஸ்தம்பங்களும் உண்டு.

அறுபத்தைந்து சன்னிதிகளின் மத்தியில் சிம்ம வாஹினியாக அருள்பாலிக்கிறாள் பனசங்கரி தேவி! வாஸ்து சாஸ்திரம், கல்வி, வலிமை மற்றும் சாதனைகளின் அதிவேதை இவள். காய்கறிகளால் அலங்கரிக்கப்பட்டதால் இவளுக்கு, 'சாகம்பரி' (காய்களை ஆடையாகக் கொண்டவள்) என்ற காரணப் பெயரும் உண்டு. தேவியின் அருகில் அலைமகள், கலைமகள், ஆவரணத்தில் பரிவார தேவதைகளான கணபதி, பர்வத மல்லிகார்ஜுன சுவாமி, துர்கா பரமேஸ்வரி, சௌடேஸ்வரி ஆகியோருக்கு சன்னிதிகள் உண்டு. அருகில், யாகசாலை மற்றும் தேவியின் எதிரில் கூர்ம(ஆமை) சன்னிதியும் அமைந்துள்ளது.

சுமார் நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இக்கோயில் தோன்றியமைக்கு வரலாற்றுக் கதை ஒன்றும் கூறப்படுகிறது. பசப்ப ஷெட்டி எனும் பக்தர், ஆண்டுதோறும் தேவியைத் தரிசிக்கப் பாதாமிக்குப் போய் வருவார். வயோதிகத்தின் காரணமாக ஒருமுறை அவரால் பாதாமிக்குச் சென்று தேவியை தரிசிக்க முடியவில்லை. இதனால் வருத்தமுற்ற அவரது துயரத்தைப் போக்க, தேவி அக்கோயில் அர்ச்சகரின் கனவில் தோன்றி, 'பெங்களூருவிலிருக்கும் என் பக்தனுக்காக அங்கு என்னை பிரதிஷ்டை செய்' என்று பணித்தாளாம். அப்படியே செய்வதாகக் கூறிய அர்ச்சகர், பசப்ப ஷெட்டியைச் சந்தித்து தேவியின் அடையாளம் ஒன்றைக் கொடுத்தாராம். அதையே ஆதாரமாகக் கொண்டு, பசப்ப ஷெட்டியின் மகன் சோமண்ண ஷெட்டி 1915ல் கோயில் ஒன்றைக் கட்டி, அதில் தேவியை சிம்மவாஹினியாக பிரதிஷ்டை செய்தார் என்பது வரலாறு.

இக்கோயிலில் ராகு காலத்தில் தேவிக்கு எலுமிச்சை ஆரத்தி செய்தால் நினைத்தது நடக்கும் என்பது நம்பிக்கை. நூற்றுக்கணக்கில் பெண்கள் செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் எலுமிச்சை ஆரத்தி செய்கின்றனர். மடை புரளும் வழக்கமும் உண்டு. முக்கியமாக இங்கு பிரார்த்தித்தால் திருமணம் கூடி வருவது பலரது அனுபவம். பிராகாரத்தில் இருக்கும் கிணற்று நீரால்தான் அம்மனுக்கு அபிஷேகம் செய்கின்றனர். இந்தக் கிணற்று நீர் எக்காலத்திலும் வற்றுவதே இல்லை. தேவிக்கு உகந்த பிரசாதம் சித்ரான்னம். தினமும் மகா தீபாராதனைக்குப் பிறகு அது பக்தர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் சித்ரான்னமும் மற்ற நாட்களில் பொங்கலும் பிரசாதமாக விநியோகிக்கப்படுகிறது.



சிவாகம முறைப்படி பூஜைகள் நடைபெறும் இக்கோயிலில் பாத்ரபத மாதம் பௌர்ணமி (பிள்ளையார் சதுர்த்திக்கு அடுத்து வரும் பௌர்ணமி), தேவி ஜன்மோத்ஸவம், நவராத்திரி பத்து நாட்கள் நடைபெறும் தசரா உத்ஸவ விசேஷ அலங்காரம் கண்களுக்கு விருந்து! இவை தவிர, புஷ்ய மாதம் (தை மாதம்) வளர்பிறை அஷ்டமியிலிருந்து தேய்பிறை சதுர்த்தி வரையிலான 12 நாட்கள் பிரம்மோத்ஸவம் விமரிசையாக நடைபெறுகிறது. இந்த ஆண்டு 101வது ஆண்டு உத்ஸவம் விசேஷமாகக் கொண்டாடப்பட்டது. நீங்களும் ஒருமுறை சகல வளம் தரும் ப(வ)ன சங்கரியைத் தரிசித்து அருள்பெறலாமே!

– கே.நிருபமா, பெங்களூரு

https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



காசி கங்கா ஸ்நானம், ஸ்ரீசைல சிகர தரிசனம், ஸ்ரீ முகலிங்கத்தில் முக தரிசனம் ஆகியவை மோட்சம் அளிக்கும் என்கிறது இக்கோயில் புராணத் தகவல்.

# மோட்சம் அருளும் ஸ்ரீமுகலிங்கேஸ்வரர்!



www.TheMagnat.com



ஆந்திர மாநிலத்தின் வடகிழக்கில், ஒடிஷா மாநிலத்தையொட்டி அமைந்த ஸ்ரீகாகுளம் மாவட்டத்தில், ஸ்ரீமுகலிங்கம் கிராமத்தில் அமைந்துள்ளது ஸ்ரீமுகலிங்கேஸ்வரர் திருக்கோயில். இக்கோயிலில் சிவபெருமான் ஏக முகத்துடன் லிங்க வடிவில் அரிதாகக் காட்சி தருகிறார். இறைவனின் பெயர் காரணமாகவே ஊருக்கும், 'ஸ்ரீமுகலிங்கம்' எனப் பெயர். கருவறையில் சிவபெருமான் கிழக்கு நோக்கி, ஒரே முகத்துடன், அதுவும் நாசி மற்றும் கண்களோடு மட்டும் லிங்க ரூபத்தில் காட்சி தருகிறார்.

ஆதியில் இத்தலம், 'ஜயந்திநகர்' என்றும், இறைவன் பெயர், 'ஜயந்தீசர்' என்றும் அழைக்கப்பட்டது. சத்ய யுகத்தில், 'கோவிந்தேஸ்வரர்' என்ற பெயரில் தங்கத்திலும், திரேதா யுகத்தில், 'மதுகவனேஸ்வரர்' என்ற பெயரில் வெள்ளியிலும், துவாபர யுகத்தில், 'ஜயந்தீஸ்வரர்' என்ற பெயரில் செம்பிலும் காட்சியளித்த சிவபெருமான், கலியுகத்தில் கருங்கல்லில் சுயம்புவாக ஏகமுகத்துடன் ஸ்ரீ முகலிங்கேஸ்வரர் என்ற பெயரில் அருள்பாலிக்கிறார்.



ஒடிஷா கட்டட பாணியில் அமைந்த, இக்கோயில் ஒரு சிற்பக் கருவூலமாகத் திகழ்கிறது. ஆலயத்தின் நடுநாயகமாக ஸ்ரீமுகலிங்கேஸ்வரர் சன்னிதியும், நான்கு மூலைகளில் சிவபெருமான் தத்புருஷ, அகோர, சத்யோஜாத, சதாசிவலிங்க மூர்த்திகளின் சன்னிதிகளும் உள்ளன. ஆலய முன் மண்டபத்தில் சூரியன், தேவி, மகாவிஷ்ணு மற்றும் விநாயகர் ஆகியோருடன் இத்திருக்கோயில் ஒரு பஞ்சாயதன ஆலயமாக விளங்குகிறது.

மகாமண்டபத்தில் சிவபெருமான் சன்னிதியை நோக்கி பளிங்குக் கல்லில் வடிக்கப்பட்ட நந்தி



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# வெளிமாநிலக் கோயில்

விஜயலட்சுமி சுப்பிரமணியம்



பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. தென்மேற்கு மூலையில் சப்த மாத்ருக்கள் ஸ்ரீ வாராஹி வடிவத்தில் எழுந்தருளியுள்ளனர். இந்த வாராஹியே ஆலயத்தின் தேவியாகத் திகழ்கிறாள். தவிர, அக்னி தேவன் பிரதிஷ்டை செய்த அக்னி லிங்கம், யமன் பிரதிஷ்டை செய்த ஸ்ரீ யமேஸ்வரலிங்கம், கால பைரவர், ஏகபாத மூர்த்தி, குமாரஸ்வாமி, தட்சிணாமூர்த்தி சன்னிதிகளும் உள்ளன.

புராண காலத்தில் வாமதேவ முனிவரின் சாபம் காரணமாக கந்தர்வர்கள் கிராதர்களாகவும் (வேட்டைக்காரர்களாக), சபரர்கள் என்ற மலைவாழ் மக்களாகவும் மாறியதாகக் கூறப்படுகிறது. அவர்கள் தங்கள் தலைவன் சித்திரசேனனோடு இலுப்பை மரங்கள் (தெலுங்கில் இப்பச் செட்டு) நிறைந்த இப்பகுதியில் தங்கள் சாபம் நீங்க வேண்டி சிவபெருமானை நோக்கித் தவம் செய்தனர். சித்திரசேனனும் அவன் மனைவி சித்கலாவும் ஒரு இலுப்பை மரத்தையே சிவலிங்கமாக பாவித்து வழிபட்டு வர, ஒரு நாள் அந்த மரத்தின் கீழிருந்த புற்றிலிருந்து அக்னி சுவாலைகள் வெளிவர, புற்றினை அகற்றிப் பார்த்தபோது சிவபெருமான், மதுக (இலுப்பை) மரத்தின் அடிப்பாகத்தில் சுயம்புவாக, ஏகமுக லிங்கமாக அங்கிருந்ததைக் கண்டு மகிழ்ந்தனர். பிறகு, மன்னரிடம் இதுபற்றிக் கூற, அங்கு ஓர் ஆலயம் எழுப்பப்பட்டு அதில், ஈசனுக்கு ஸ்ரீ மதுகவனேஸ்வரர் எனப் பெயர் சூட்டி பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தனர்.

அக்காலத்தில் இலுப்பை மரங்கள் ஏராளமாக இருந்ததால் இப்பகுதி, 'மதுகவனம்' என்று அழைக்கப்பட்டது. இலுப்பையின் வடமொழிப் பெயர் மதுகம். சிவபெருமான் மதுகவனத்தில் தோன்றியதால் அவர் மதுகவனேஸ்வரர் என்று அழைக்கப்பட்டார்.

சிவ பக்தர் ஒருவர் காசிக்குச் செல்ல முடியாமல் மனம் வருந்த, ஸ்ரீசுப்ரமண்யர் அவரது கனவில் தோன்றி, இத்தலம் காசிக்குச் சமமானது என்று கூறினாராம். எனவே இது, 'தட்சிண காசி' என்றும் அழைக்கப்படுகிறது. சுற்றிலும் நெல் வயல்கள், அடர்ந்த மரங்கள், பின்னணியில் மலைத் தொடர், அருகில் ஓடும் வம்சதாரா ஆறு என்று கண்களுக்கு விருந்தாகும் இயற்கைச் சூழலில் கோயில் அமைந்துள்ளது. கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் வம்சதாரா நதியில் நீராடிய பின்னரே ஸ்ரீமுகலிங்கேஸ்வரரை தரிசனம் செய்கின்றனர்.

இக்கோயில் கங்க மன்னன் காமார்ணவா என்பவரால் கட்டப்பட்டதாக கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அன்னியர் படையெடுப்பின் காரணமாக பொலிவிழந்து சிதிலமடைந்த இக்கோயிலை 14வது நூற்றாண்டில் விஷ்ணுவர்த்தன மதுகர்ணக கஜபதி என்ற மன்னர் புனருத்தாரணம் செய்திருக்கிறார். 11 முதல் 15ஆவது நூற்றாண்டின் முற்பகுதி வரை கிழக்கு கங்க மன்னர்கள் ஒடிஷா மற்றும் மேற்கு வங்கம், ஆந்திரா, சட்டிஸ்கார் போன்றவற்றின் ஒருசில பகுதிகளை ஆண்டு வந்த போது அவர்களது தலைநகராகத் திகழ்ந்த இந்த ஸ்ரீமுகலிங்கம், 'கலிங்க நகரம்' என்ற பெயரால் அழைக்கப்பட்டுள்ளது.

இத்தலத்தில் உள்ள மூன்று ஆலயங்களிலும் மிகப் பழைமையானது ஸ்ரீ சோமேஸ்வரர் ஆலயம். அக்னி திசையில் உள்ள இக்கோயில் சிவலிங்கத்தை சந்திர பகவான் பிரதிஷ்டை செய்ததாக ஐதீகம். ஆலயத்தின் நுழைவாயிலை அடுத்து ஒரே பீடத்தில் ஆந்திரப் பாணியிலும், ஒடிஷா பாணியிலும் வடிக்கப்பட்ட இரண்டு நந்திகளைக் காணலாம். இரண்டாவது, அனியங்கா ஸ்ரீபீமேஸ்வரர் ஆலயம். இது, ஸ்ரீமுகலிங்கேஸ்வர ஸ்வாமி ஆலயத்துக்குப் பிற்பட்ட காலத்தில், மன்னன் அனியங்கா பீமா என்பவரால் கட்டப்பட்டது. இங்கு பஞ்சபாண்டவர்களில் ஒருவரான பீமன், லிங்கப் பிரதிஷ்டை செய்ததாக தல புராணம். இங்குள்ள தேவ கோஷ்டங்களில் பிரம்மா, நரசிம்மர் மற்றும் தட்சிணாமூர்த்தி சன்னிதிகள் உள்ளன.



தொல்பொருள் துறையினரால் நிர்வகிக்கப்படும் இக்கோயிலில், பிரதோஷம், கார்த்திகை சோமவாரம் போன்றவை மிக முக்கியமான விழா நாட்கள். மகா சிவராத்திரி பெரு விழா, மாக சதுர்த்தசி முதல் பிரதமை வரை மூன்று நாட்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இச்சமயத்தில் ஆந்திரா மற்றும் ஒடிஷா மாநிலங்களிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகின்றனர். அன்றிரவு சுவாமி கஜ வாகனத்தில் திருவீதி உலா வருகிறார். சிவராத்திரி நாளில் ஸ்ரீ முகலிங்கேஸ்வரரை தரிசனம் செய்தால் பாவங்கள் விலகி, அஷ்ட ஐஸ்வர்யங்கள், நீண்ட ஆயுள், ஆரோக்கியம், புத்திர பாக்கியம் போன்றவை கிட்டும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

**அமைவிடம்: ஸ்ரீகாகுளத்திலிருந்து சுமார் 56 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது கோயில்.**

**தரிசன நேரம்: காலை 6 மணி முதல் இரவு 8 மணி வரை.**


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



# மந்திர ரூப சக்தி!

"அனுமன் பிரம்மச்சாரிதானே! பிறகு ஏன் சுவர்ச்சலா தேவியை அவருடைய மனைவி என்று கூறுகிறார்கள்? இது ராமாயணத்தில் உள்ளதா? சூரியனின் புத்ரி சுவர்ச்சலாவை அனுமன் திருமணம் புரிந்தாரென்றால், குரு புத்ரியை திருமணம் செய்வது சீடனுக்குத் தகுமா?'' எனும் பல கேள்விகளுடன் தமது சொற்பொழிவை தொடங்கினார் பிரம்மஸ்ரீ சாமவேதம் ஷண்முக சர்மா.

''ராமாயணத்தில் அனுமனின் மனைவி பெயர்கள் இல்லை. சுவர்ச்சலா பற்றிய கதையும் ராமாயணத்தில் கிடையாது. ராமாயண சம்பந்தமில்லாதது என்பதற்காக அதைத் தள்ளிவிடக் கூடாது. சுவர்ச்சலா தேவி என்பது உபாஸனை சம்பந்தப்பட்ட விஷயம். மந்திரங்களின் வழியாகவே தேவதைகள் வர்ணிக்கப்படுகிறார்கள்.

மந்திர சாஸ்திரத்தில் மந்திரங்களின் அதிதேவதைகள் இருக்கிறார்கள். அதேபோல், மந்திர சாஸ்திரங்களில் ஹனுமனுக்கு அநேக ரூபங்களும், அதோடு தொடர்புடைய மந்திரங்களும் நிறைய உள்ளன. அதில் ஒன்றுதான், 'சுவர்ச்சலா ஆஞ்சநேயம்' என்பது.

மந்திரத்தின் அதிதேவதையை சக்தியோடு சேர்த்து உபாசனை செய்ய வேண்டும். இது, லௌகீகமான விஷயம் அல்ல. மந்திர சக்தியோடு தொடர்புடைய மந்திரம். ஹனுமன் சூரியனின் சீடன் என்பது புராணக் கதை. மந்திரங்களின்படி, அனுமனின் சக்தியை 'சுவர்ச்சஸ்' என்பர். தவத்தினால் கிடைக்கும் தேஜஸ், 'வர்ச்சஸ்' எனப்படும். அப்படிப்பட்ட சிறப்பான பிரகாசமே அனுமனின் சக்தியான, 'சுவர்ச்சஸ்.' இதனையே, 'சுவர்ச்சலா'வாக உபாசனை செய்கிறோம்.

இது, 'சௌர' சக்தி. சூரிய சக்தியால் பிரகாசிக்கும் தெய்வ சைதன்யமே ஆஞ்சநேயர். இந்த சக்தியோடு கூட, பகவானை பூஜிப்பவருக்கு இந்த, 'வர்ச்சஸ்' மூலம் அனைத்துப் பலன்களும் கிடைக்கின்றன. சூரியனின் சக்தி சிறந்த வர்ச்சஸ்ஸோடு கூடியது என்பதால் அதனை, 'சூரியனின் புத்ரி' என்று வர்ணித்தார்கள். அவ்வளவுதானே தவிர, அது தந்தை, பெண் உறவு அல்ல.




https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# சொற்பொழிவு

**ராஜி ரகுநாதன்**



சுவர்ச்சலாவும் ஆஞ்சநேயரும் லௌகீகமான கணவன் - மனைவி அல்லர். இது சக்தியோடு கூடிய தேவதா உபாசனை சம்பந்தப்பட்டது. சக்தியோடு கூட சேர்த்து பார்ப்பதே கல்யாணத்தின் பரமார்த்தம். அவ்வளவே தவிர இது, சீதா - ராமர், சிவ - பார்வதி இவர்களின் கல்யாணம் போன்றதல்ல.

ஒரே தேவதைக்கு பல ரூபங்கள் இருப்பதன் உட்பொருள் என்னவென்றால், அந்த தேவதையோடு தொடர்புடைய அநேக மந்திரங்களால், அநேக ரூபங்கள் ஏற்படுகின்றன. மந்திர சப்தங்களின் சேர்க்கையைக் கொண்டு தேவதைகளுக்கு ரூபங்கள் ஏற்படுகின்றன. 'மந்திரம் - தேவதை' இவற்றின் தொடர்பு பற்றி புரிதல் இருந்தால் இது புரிய வரும். எத்தனை மந்திரங்கள் உள்ளனவோ அத்தனை தேவதைகள் இருப்பார்கள். அத்தனை ரூபங்களும் இருக்கும். அவ்வளவுதானே தவிர, அத்தனை தேவதைகளின் ரூபங்களுக்கும் புராணக் கதைகள் இருக்காது. ஒருவேளை இருந்தாலும் அவை, மந்திரக் குறியீடுகளாக இருக்குமே தவிர, நடந்து முடிந்த இதிகாசங்களாக இருக்காது.

அதேபோல், பஞ்சமுக ஆஞ்சநேயர் கூட மந்திர உபாசனா மூர்த்திதான். ராம கதையில் வரும் அனுமான் அந்த மந்திரமூர்த்தி எடுத்த ஒரு அவதாரம். ராமாயணத்தில் சுவர்ச்சலா பற்றிய விவரம் இல்லாவிட்டாலும் உபாசனைப்படி அது சிறந்த பிரமாணத்தோடு கூடியதே.

ரூபம் என்பது மந்திரச் சக்தியை வெளிப்படுத்தும் ஒரு சாதனம் மாத்திரமே. அந்த சக்தியை சப்த வடிவில் உச்சரித்தால், அது மந்திரம். காட்சியாக தரிசிக்கும் போது, ரூபம்.'' ◆

## பாபம் தீர்க்கும் துவாதச ஜோதிர்லிங்க ஸ்தோத்திரம்!

பாரத தேசத்தின் நான்கு திசைகளிலும் பன்னிரு ஜோதிர்லிங்கங்கள் அமைந்து அருள் பாலிக்கின்றன. அவை: 1.சோமநாத லிங்கம் - சோமநாதம், குஜராத் மகாராஷ்டிரம், 2.மல்லிகார்ஜுன லிங்கம் - ஸ்ரீசைலம், ஆந்திரா, 3.மாகாள லிங்கம் - உஜ்ஜைனி, மத்திய பிரதேசம், 4.ஓம்கார லிங்கம் - ஓம்காரம், மத்திய பிரதேசம், 5.வைத்தியநாத லிங்கம் - வைத்யநாதம், மகாராஷ்டிரம், 6.பீமசங்கர லிங்கம் - பீமசங்கரம் (டாகினி), மகாராஷ்டிரம், 7.ராமலிங்கம் - ராமேஸ்வரம், தமிழ்நாடு, 8.விஸ்வேஸ்வர லிங்கம் - காசி, உத்தரபிரதேசம், 9.த்ரயம்பக லிங்கம் - த்ரயம்பகம், ஆந்திரா, 10.கேதார லிங்கம் - கேதாரம், உத்தர பிரதேசம், 11.குஸ்மேஸ லிங்கம் - குஸ்மேஸம், மகாராஷ்டிரம், 12.நாகேஸ்வர லிங்கம் - நாகேசம், நாசிக். இந்த பன்னிரு ஜோதிர்லிங்கங்களைப் போற்றி வழிபடும்விதமாக, ஆதிசங்கரர் இயற்றிய கீழ்க்காணும் ஸ்தோத்திரத்தை தினசரி பாராயணம் செய்து வர, பாபங்கள் விலகும்.

*'ஸௌராஷ்ட்ரே சோமநாதம் ச ஸ்ரீசைலே மல்லிகார்ஜுனம்*
*உஜ்ஜய்ன்யாம் மஹாகாலம் ஓங்காரம் அமலேச்வரம்।*
*பரல்யாம் வைத்யநாதம் ச டாகின்யாம் பீமசங்கரம்*
*சேதுபந்தே து இராமேசம் நாகேசம் தாருகாவனே।*
*வாராணஸ்யாம் து விச்வேசம் த்ரயம்பகம் கௌதமீதடே*
*ஹிமாலயே து கேதாரம் குஷ்மேசம் ச சிவாலயே।*
*ஏதானி ஜ்யோதிர்லிங்கானி சாயம் ப்ராத:படே நர:*
*சப்த ஜன்ம க்ருதம் பாபம் ஸ்மரணேன விநச்யதி।*
*ஏதேஷாம் தர்ஷனாதேவ பாதகம் நைவ திஷ்டதி*
*கர்மக்ஷயோ பவேத் தஸ்ய யஸ்ய துஷ்டோ மகேச்வர:॥'*

**- அருண், தர்மபுரி**





https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

இளம் பெண்கள் பலர் கூடி வட்ட வடிவில் நின்று ஒரே சமயத்தில் தலை குனிந்து கைகளைக் கொட்டி இடமும் வலமும் நிமிர்ந்து அருகில் நிற்கும் தோழியரின் தோள்களைப் பார்த்து ஆடும் விளையாட்டின் பெயர், 'திருத்தோள் நோக்கம்.'



# பலவும் ஆகி நின்ற பரமன்!



திருவாதிரைத் திருநாள். தில்லையம்பலத்தில் சிவபிரானைத் தொழுது மகிழ்ந்த அடியார் திருக் கூட்டம், இன்னும் அந்த பக்திப் புளகாங்கிதத் திலேயே ஆழ்ந்துள்ளது. அக்கம்பக்கத்து ஊர்களிலும் திருவிழாக் கோலம். ஊரின் நடுவிலமைந்த திடலில் இளம்பெண்கள் பலர் வண்ண ஆடைகள் அணிந்து, மலர்கள் சூடி, அணி மணிகள் பூண்டு, ஒரு வட்ட மாகக் கூடி நிற்கிறார்கள். அவர்களைச் சுற்றி ஊரே திரண்டு வேடிக்கை பார்க்கக் கூடியுள்ளது! நாமும் சென்று பார்க்கலாமே!

சில தினங்களுக்கு முன்புதான் இவ்வழியாகத் தில்லை வந்த மாணிக்கவாசகர் சில நாட்கள் இவ் வூரில் தங்கி, இவர்களுடைய பலவிதமான விளை யாட்டுக்களுக்கேற்ற பாடல்களை இயற்றியளித்தார்.



இன்று திருவாதிரை தினமும் கூடிவந்துள்ளதால் பெண் குழந்தைகளும் இளம்பெண் களும் அவற்றைப் பாடி, ஆடி மகிழத் தயாராக நிற்கிறார்கள். கண்டுகளிக்க மற்றவர்களும் கூடிவிட்டார்கள்! இதோ, 'திருத்தோள் நோக்கம்' எனும் அந்த ஆட்டம் ஆரம்பித்து விட்டதே! ஆகா! இந்தப் பெண்கள் கைகொட்டி ஆடு வதில் என்னவொரு லயம்! ஒழுங்கு! நாட்டுப்புறப் பாடல்களுக்கே உரிய இனிய மெட்டுகளில் பாடல்களும் அமுதமாக ஒலிக்கின்றன! ஆடுவோருடன் பார்ப்பவர் களும் கைகளைக் கொட்டியவாறு பாடலைச் சேர்ந்து இசைக்கிறார்கள். ஆட்டம் ஆரம்பித்து விட்டது! கண்ணம்மாளும் காமாட்சியும், 'கணீர்' எனும் குரலில் பாடுகிறார்கள்!

**'பூத்தாரும் பொய்கைப் புனல்இதுவே எனக்கருதிப்**
**பேய்த்தேர் முகக்கஉறும் பேதைகுணம் ஆகாமே**
**தீர்த்தாய் திகழ்தில்லை அம்பலத்தே திருநடம்செய்**
**கூத்தாஉன் சேவடி கூடும்வண்ணம்**
**தோள்நோக்கம்.'**

பேய்த்தேர் என்றால் கானல்நீர் எனப்பொருள். சில சமயம் இந்தக் கானல் நீரானது தூரத்திலிருந்து காண் பவர்களுக்கு, தாமரை மலர்கள் மலர்ந்த பொய்கை போலவும் காட்சி தருமாம். 'அப்படி நாங்கள் ஏமாந்து அறியாமையால் அலைக்கழியாமல் எங்களைக் காப் பாற்ற வேண்டும் சிவபெருமானே! தில்லை அம்பலத் தில் நடனம் செய்யும் கூத்தனே! உன் திருவடிகளை நாங்கள் அடைய வேண்டும் அண்ணலே! அதற்காகத் தோள்நோக்கம் ஆடுவோம்' என வேண்டுகிறார்கள்.

அடைய வேண்டியது அந்த ஈசன் ஒருவனே எனும் பொருள் இதில் மறைந்து விளங்குகின்றது! ஆனால், உள்ளறிவினால் இதனைத் தெளிவாக உணர்ந்து


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# ஆடல் – பாடல் – விளையாடல்!

மீனாட்சி பாலகணேஷ்

19

கொள்ள ஞானிகளால் மட்டுமே முடியும். சின்னஞ் சிறுமிகள் சிவனருளை வேண்டிப் பாட, ஓரிரு பெரியவர்கள் மட்டும் பொருளுணர்ந்து மெய்சிலிர்க்கிறார்கள்.

எட்டு வயது அன்னக்கிளி இதற்கொப்பக் கைக் கொட்டி இடதுபக்கம் நிற்கும் தோழி சிவகாமியின் தோளைப் பார்த்து அழகொழுகப் புன்னகைக்கிறாள். சிவகாமி தனது இடதுபுறம் நிற்கும் மல்லிகாவின் தோளைப் பார்க்கிறாள். அனைத்தும் இடப்பக்கம் திரும்பிய தலைகள்; ஒரே சீரான கைகொட்டல். பாடலின் பொருளை ஏற்கெனவே மணிவாசகர் சிறுமியருக்கும் மற்ற அனைவருக்குமே விளக்கியுள்ளார். ஆகவே, அதன் பொருள் இனிமையிலும் ஆடலின் லயத்திலும் சொக்கி நிற்கிறது கூட்டம். 'ஆகா! எப்படி அழகாப் பாட்டுப் படிக்கிறாங்க இந்தப் பிள்ளைங்க' எனத் தாய்மார்கள் பெருமைப்படுகின்றனர்.

'திருத்தோள் நோக்கம்' என்பது என்ன எனப் பார்ப்போமா? இளம் பெண்கள் பலர் கூடி வட்ட வடிவில் நிற்பார்கள். பின்பு ஒரேசமயத்தில் தலைகுனிந்து தமது கைகளை இடமும் வலமும் கொட்டி நிமிர்வார்கள். நிமிர்ந்ததும் ஒவ்வொருத்தியும் தன்னுடைய தலையை இடதுபுறமாகத் திருப்பி தனக்கு அடுத்து நிற்பவளின் தோளைப் பார்ப்பாள். பின்பு, அதே போன்று திரும்பத் தலைகுனிந்து கைகளைக் கொட்டி நிமிர்ந்து தன் தலையை வலப்புறமாகத் திருப்பி அடுத்தவளுடைய தோளைப் பார்ப்பாள். தோளை நோக்குவதால், 'தோள்நோக்கம்' (தோள்+நோக்கம்=தோணோக்கம்) எனப்பட்டது. இவ்வாறு கைகொட்டித் தன்னுடைய தோள்களையே இடப்பக்கமும் வலப்பக்கமும் மாறி மாறிப்பார்த்து ஆடுவதும் உண்டு! பெண்களின் இந்த வட்டம் மெல்லச் சுழலவும் செய்யும்! இவ்வாறு நடைபெறும் இந்த ஆட்டத்தை உன்னிப்பாகக் கவனித்த மணிவாசகரே இதற்கு 'திருத்தோள் நோக்கம்' எனும் அழகிய பெயரை வைத்தார் போலும். இதன் பழைய பெயர் நமக்கு அறியக் கிடைக்கவில்லை!

இனிமையான அந்தப் பாடல்களைப் பாடியாடும் அனுபவத்தை அத்தனை விரைவாக முடித்துக்கொள்ள அவர்களுக்கு விருப்பமேயில்லை போலக் காணப்படுகிறது! ஒவ்வொரு பாடலையும் பெண்கள் நான்கு முறை பாடி, ஆடுகின்றனர். அடுத்த பாடலை அவர்கள் பாடும்போது, ஒரு பெரியவர் அதனை மற்றவர்களுக்கு விளக்குகிறார். 'முறையாகச் செய்யும் பூசையில் பாத்திரங்களில் நீர் கொண்டு வருவார்கள். தேன், பால், சந்தனம் போன்ற அபிடேகப் பொருட்கள் அளிக்கப்படும். பழங்கள், பாயசம், தின் பண்டங்கள் நிவேதனம் செய்யப்படும். மலர்களால் அருச்சனை நடைபெறும். ஈசுவரன் அடியாருக்கு எளியன் அல்லவா? உண்மை அன்போடு கண்ணப்ப நாயனார் வாயில் கொண்டு வந்து உமிழ்ந்த நீரை ஏற்றுக்கொண்டார். கண்ணப்பர் தன் தலையிலிருந்து மலர்களை எடுத்து இறைவனின் மேல் தூவியதையும் ஏற்றுக் கொண்டார். நிவேதனமாக, மான் இறைச்சியைப் படைத்ததையும் அங்கீகரித்தார். அவருக்கு, இறைவன் அருள் செய்ததைப் புகழ்ந்து தோள்நோக்கம் ஆடுகிறார்கள் நமது பெண்கள்.

**'தன்னானே தன்னானே தானன்னே தானா**
**தன்னானே தன்னானே தானன்னே தானா'**

எனும் எளிய மெட்டில் நான்கு வரிப் பாடல். கைகளைக் கொட்டியபடி 'தானா' எனும் சொல் வரும்போது, இடமும் வலமும் திரும்பிப் பக்கத்தில் நிற்கும் தோழிகளின் தோள்களைப் பார்த்து ஆடுகிறார்கள். நாமும் பாடியபடியே ஆடிக்கூடப் பார்க்கலாம்! உள்ளமும் உடலும் சிலிர்க்கும்!

**'பொருள்பற்றிச் செய்கின்ற பூசனைகள்**
**போல்விளங்கச்**
**செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊன்அமுதம்**
**விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்து**
**அங்கு**
**அருள்பெற்று நின்றவா தோள்நோக்கம்**
**ஆடாமோ.'**



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



(செருப்புற்ற சீரடி - கண்ணப்பரின் கால் செருப்பு; வாய்க்கலசம் - வாயாகிய கலசம்)

பொருள் புரிந்ததனால் மக்கள் கூட்டம் 'ஆஹா' காரம் செய்து ஆரவாரிக்கிறது. மூச்சிரைக்கப் பாடுவதனால் பாட்டுக்கும் ஆட்டத்துக்கும் நடுவில் பாடுவதனைச் சற்று நிறுத்தி சுதாரித்துக்கொண்டு, சில சமயம் கைகளை மட்டுமே கொட்டியவண்ணம் ஆடுகிறார்கள். அடுத்தது என்ன பாடுவார்கள் என்று அவ்வூர் கோயில் சிவாச்சாரியருக்குத் தெரியும். ஏனென்றால், மாணிக்கவாசகர் குழந்தைகளுக்கு விளக்கிப் பாடிய போது அவரும் அருகிலிருந்து கேட்டு, மனதிலும் பதித்துக் கொண்டார் அல்லவா? மக்களிடம் அக்கருத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை எழுகிறது அவருக்கு!

இறைவன், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சந்திரன், சூரியன், ஆன்மா ஆகிய எட்டு வகைப் பொருள்களில், அவற்றோடு கலந்திருப்பவனாகப் பொருந்தி நிற்கிறான். ஏழு உலகங்களிலும் பத்து திசைகளிலும் அவன் ஒருவனே கலந்து பல பொருள்களாக நிற்கின்றான். அவனைப் பாடி, ஆடுங்கள் என்று பெரியவர் (மாணிக்கவாசகர்) குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்.

**'நிலம்நீர் நெருப்புஉயிர் நீள்விசும்பு**
**நிலாப்பகலோன்**
**புலன்ஆய மைந்தனோடு எண்வகையாய்**
**புணர்ந்துநின்றான்**
**உலகு ஏழ் எனத்திசை பத்துஎனத்தான் ஒருவனுமே**
**பலவாகி நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ.'**

எல்லாப் பொருள்களிலும் இறைவன் இருப்பதனை எவ்வளவு எளிமையாகச் சொல்லிவிட்டார். சுட்டியான சிறுமி ஒருத்தி, பிரிந்து வட்டத்தின் நடுவே சென்று நிற்கிறாள். ஆட்டத்தின் லயம் தப்பாதபடி தனது கற்பனைக்கு எட்டிய வண்ணம் நிலத்தையும், நீரையும் ஆகாயத்தையும் சுட்டிக்காட்டுவது போல அபிநயம் பிடிக்கிறாள். அவளுடைய தோழிகள் புன்னகைக்கின்றனர். சின்னஞ்சிறுமியின் ஆட்டத்தைக் கண்டு கூட்டத்தினர் கரவொலி எழுப்புகின்றனர். கூட்டத்தினர் ரசிப்பதைக் கண்ட பெண்களும் சிறுமிகளும் உற்சாகம் மிகுந்திட, மேலும் ஈசனின் புகழினைப் பாடியவண்ணம் தொடர்ந்து ஆடுகின்றனர்.

''தோழியரே! நாம் எல்லோரும் நமது தன்மானத்தை இழந்தோம்; சுயமாகச் சிந்திக்கும் அறிவை இழந்தோம். எதனால் இப்படியானது தெரியுமா? தேவர்கள் எல்லாம் வணங்கித்தொழும் திருவடிகளை உடையவன் எம்பெருமான். அவனுடைய திருவடிகளையே அனுதினமும் தொழுது போற்றுகிறோம். ஆனந்தக் கூத்தனின் அருள் நமக்கு வாய்த்தது பெரும் பேறல்லவோடீ? நாம் மானத்தையும் அறிவையும் இழந்து ஆனந்தம் பெருகியோடீ தோள்நோக்கம் ஆட்டத்தையும் ஆடி மகிழலாமே'' என்று பாடுகிறார்கள்.

**'மானம் அழிந்தோம் மதிமறந்தோம் மங்கைநல்லீர்**
**வானம் தொழும்தென்னன் வார்கழலே**
**நினைந்தடியோம்**
**ஆனந்தக் கூத்தன் அருள்பெறின்நாம் அவ்வணமே**
**ஆனந்த மாகிநின் றாடாமோ தோள்நோக்கம்.'**

புரிந்தோ புரியாமலோ, ஆட்டத்தில் லயித்ததனால், மங்கைக்கும் வள்ளிக்கும் கண்களில் நீர் ததும்புகின்றது. இந்தப் பாடல்களைத் தங்களுக்காகவே இயற்றியளித்த பெரியவரை எண்ணி நெஞ்சம் உணர்ச்சிப் பெருக்கில் விம்முகிறது.

அருளாளனான அந்த ஈசன் மற்றக் கடவுள்களுக்கும் அருள் செய்தவர். ''தனக்கு சக்கரப்படை கிடைப்பதற்காக திருமால் அனுதினமும் சிவபிரானுக்கு ஆயிரம் தாமரை மலர்களால் அர்ச்சனை செய்தாராம். ஒருநாள் சிவபிரான் அவரைச் சோதிக்க எண்ணி, ஒரு மலர் குறையுமாறு செய்துவிட்டார். கொஞ்சமும் தயங்காத திருமால், குறைந்த மலரை ஈடுசெய்வதற்காகத் தனது கண்ணையே அகழ்ந்து தோண்டி, சிவபிரானுக்கு அர்ப்பணித்தாராம். மனமகிழ்ந்த சிவபிரான் திருமாலுக்குக் கண்ணைத் திரும்ப அளித்தது மட்டுமல்லாது, சக்கரப் படையையும் கொடுத்தருளினார்'' என வசந்தி பாடுகிறாள். இந்த மாதிரியான ஈசனின் செயல்களை எல்லாம் பாடி, 'தோள்நோக்கம்' ஆடுகிறார்கள்.

**'பங்கயம் ஆயிரம் பூவினில்ஓர் பூக்குறையத்**
**தம்கண் இடந்துஅரன் சேவடிமேல் சாத்தலுமே**
**சங்கரன் எம்பிரான் சக்கரம்மாற்கு அருளியவாறு**
**எங்கும் பரவிநாம் தோள்நோக்கம் ஆடாமோ.'**

அருமையும் பெருமையும் அழகும் நிறைந்த ஆடல் பாடல் விளையாடல்கள் மணிவாசகர் நமக்களித்த பெருஞ்செல்வம்!

**(ஆடிப்பாடி விளையாடி மகிழ்வோம்)**


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

## பஞ்சாங்க குறிப்புகள் [21.02.2017 முதல் 05.03.2017 வரை] தமிழ் : துன்முகி வருடம்

| தேதி | கிழமை | தமிழ் | | நட்சத்திரம் | திதி | யோகம் | சந்திராஷ்டமம் | முக்கியக் குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 21.02.17 | செவ்வாய் | மாசி | 09 | மூலம் | தேய்பிறை தசமி | அமிர்த-சித்த | ரிஷபம் | - |
| 22.02.17 | புதன் | | 10 | பூராடம் | தேய்பிறை ஏகாதசி | அமிர்த | ரிஷபம் | ஏகாதசி விரதம் |
| 23.02.17 | வியாழன் | | 11 | உத்திராடம் | தேய்பிறை துவாதசி | சித்த | ரிஷபம் காலை 11.31 வரை. பிறகு மிதுனம் | சுபமுகூர்த்த நாள் |
| 24.02.17 | வெள்ளி | | 12 | திருவோணம் | தேய்பிறை திரயோதசி இரவு 9.50 வரை. | நன்றாக இல்லை | மிதுனம் | மஹா சிவராத்திரி, பிரதோஷம், திருவோண விரதம் |
| 25.02.17 | சனி | | 13 | அவிட்டம் | தேய்பிறை சதுர்தசி | சித்த | மிதுனம் இரவு 7.43 வரை. பிறகு கடகம் | - |
| 26.02.17 | ஞாயிறு | | 14 | சதயம் | அமாவாசை | சித்த | கடகம் | அமாவாசை |
| 27.02.17 | திங்கள் | | 15 | பூரட்டாதி | வளர்பிறை பிரதமை | நன்றாக இல்லை | கடகம் | கரி நாள் |
| 28.02.17 | செவ்வாய் | | 16 | உத்திரட்டாதி | வளர்பிறை துவிதியை | அமிர்த | சிம்மம் | கரி நாள் |
| 01.03.17 | புதன் | | 17 | ரேவதி | வளர்பிறை திரிதியை | நன்றாக இல்லை | சிம்மம் | கரி நாள் |
| 02.03.17 | வியாழன் | | 18 | அஸ்வினி | வளர்பிறை சதுர்த்தி பகல் 3.00 வரை. | அமிர்த - சித்த | கன்னி | சதுர்த்தி விரதம், சுப முகூர்த்த நாள் |
| 03.03.17 | வெள்ளி | | 19 | பரணி | வளர்பிறை பஞ்சமி பகல் 1.00 மணி வரை. பிறகு சஷ்டி | சித்த | கன்னி | சஷ்டி விரதம் |
| 04.03.17 | சனி | | 20 | கார்த்திகை | வளர்பிறை சப்தமி காலை 10.30 முதல் | அமிர்த | துலாம் காலை 7.50 முதல் | கார்த்திகை விரதம் |
| 05.03.17 | ஞாயிறு | | 21 | ரோஹிணி | வளர்பிறை சப்தமி காலை 8.00 வரை. பிறகு அஷ்டமி | சித்த | துலாம் | சுபமுகூர்த்த நாள் |

வழங்குபவர் : ஹரிகேசநல்லூர் வெங்கட்ராமன்



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# உடல் ஆரோக்கியம் தரும் கோளறு பதிகம்!





**தேக ஆரோக்கியத்துக்கான எளிமையான பரிகாரம் என்ன?**

**– கமலன், சென்னை**

'த்ரியம்பகம் யஜாமஹே' என்ற ம்ருத்யுஞ்சய மந்திரத்தை தினமும் காலை 11 முறை சொல்வது நல்ல பரிகாரம்.

**குறிப்பு:** கோளறுபதிகம் சொல்வதும் நல்ல பரிகாரமாக இருக்கும். தன்வந்திரி ஸ்வாமிக்கு தினமும் வெட்டிவேர் ஊறவைத்த தண்ணீரைப் படைத்து தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிட்டு வருவதன் மூலம் ஆரோக்கியம் மேலோங்கும்.

**என்ன கல்வியில் சேர்க்கலாம்?**

**– பெயர் வெளியிட விரும்பாத வாசகர், சென்னை**

பரணி நட்சத்திரம், மேஷ ராசி, மிதுன லக்னம். இவ்வருடம் செப்டம்பருக்குப் பிறகு குழந்தைக்கு கல்வியில் நாட்டம் அதிகரிக்கும். அக்கவுண்ட்ஸ் சார்ந்த கல்வி பயனளிக்கும். தினமும் காலை வெறும் வயிற்றில் 10 துளசி இலைகளைச் சாப்பிடச் சொல்லுங்கள்.

**என் மகனுடைய ஆன்மா சாந்தி அடைந்து விட்டதா?**

**– சின்னதம்பி, பெங்களூரு**

உங்களுக்கு ப்ரஸ்னம் பார்த்ததில் வந்திருக்கும் லக்னம் கடகம். தங்கள் மகனுடைய ஆன்மா சாந்தி அடைந்து விட்டது. இருப்பினும் ஒவ்வொரு வருடமும் தங்களுடைய மகன் இறந்த திதியில் யாருக்கேனும் புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கவும்.

**என்னுடைய குலதெய்வம் அம்மன் என்று சொல்கிறார்கள், சரியா?**

**– ராமன், நாக்பூர்**

தங்களுக்குப் ப்ரஸ்னம் பார்த்ததில் வந்திருக்கும் லக்னம் மீனம். கட்டாயமான முறையில் அம்மன் தான் குலதெய்வம். ஆனால், இரண்டு தலைமுறைக்கு நீங்கள் வணங்காமல் விட்டு விட்டீர்கள். உடனடியாக அந்த அம்மன் ஆலயத்துக்குச் சென்று பாயசம் செய்து சமர்ப்பித்து வணங்கவும்.

**என் மகன் திருமணம் எப்போது?**

**– ஜெயக்குமார், சென்னை**

திருவோண நட்சத்திரம், மகர ராசி, மேஷ லக்னம். தங்கள் மகனுக்கு வரும் ஆவணி மாதத்துக்குப் பிறகு திருமணம் இனிதே நடைபெறும். பரிகாரங்கள் எதுவும் தேவையில்லை.

**கடன் பிரச்னை எப்போது அகலும்?**

**– கார்த்திக், சேலம்**

கிருத்திகை நட்சத்திரம், மேஷ ராசி, விருச்சிக லக்னம். ராசிப்படியும், லக்னப்படியும் சனி நடந்து வருகிறது. ராகு திசை நடந்து வருகிறது. தினமும் நவக் கிரகங்களுக்கு ஒன்பது விளக்கு ஏற்றி 11 முறை வலம் வரவும். முன்னோர்களை தினமும் வணங்கவும்.

**குழந்தை பாக்கியம் எப்போது?**

**– அஸ்வினி, மும்பை**

உத்திர நட்சத்திரம், கன்னி ராசி, மகர லக்னம். கட்டாயமான முறையில் பெண் குழந்தை உண்டு. வரும் ஆவணி மாதத்துக்குப் பிறகு நல்ல செய்தி உண்டு.

**எதிர்காலம் எப்படி இருக்கும்?**

**– விஜயலக்ஷ்மி, உடுமலைப்பேட்டை**

திருவாதிரை நட்சத்திரம், மிதுன ராசி, சிம்ம லக்னத்தில் பிறந்த உங்களுக்கு மணவாழ்க்கை அவ்வளவு சிறப்பாக இல்லையென்றாலும் எதிர்காலம் மிகச் சிறப்பாக இருக்கிறது. தினமும் சூரிய நமஸ்காரம் செய்வதோடு மட்டுமல்லாமல், அடிக்கடி சிவன் ஆலயத்துக்குச் சென்று வாருங்கள்.

**பதவி உயர்வு எப்போது?**

**– ரா.பாஸ்கரன், நெல்லை**

பூராட நட்சத்திரம், தனுசு ராசி, கடக லக்னம். பதவி உயர்வை நீங்கள் அடையக்கூடிய காலம் கனிந்து விட்டது. எனினும், முருகப்பெருமானை தினமும் வணங்கி வரவும். பவள மோதிரம் செய்து அணியவும்.

**மணவாழ்க்கை எப்படி இருக்கிறது?**

**– பெயர் வெளியிட விரும்பாத வாசகர், பெரம்பூர்**



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# ஜாதகம் சாதகமே!

ஜோதிடர் பெருங்குளம் **ராமகிருஷ்ணன்**

விசாக நட்சத்திரம், துலா ராசி, மகர லக்னம். மண வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் தினமும் பிரச்னையை சந்திக்க வேண்டியதிருக்கும். நீங்கள் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் சமாளிக்க முடியும். அலுவலகத்தை எடுத்துக் கொண்டால் உங்களுக்கு அதிர்ஷ்ட காலம் கனிந்து விட்டது. இனி வரும் காலத்தில் நல்ல மாற்றத்தை எதிர் பார்க்கலாம்.



**இரண்டாம் திருமணமாவது நன்றாக இருக்குமா?**

**– பாலாஜி, ஈரோடு**

மக நட்சத்திரம், சிம்ம ராசி, மகர லக்னம். ராமேஸ்வரம் சென்று தில ஹோமம் செய்ய வேண்டும். பின் வீட்டின் அருகில் உள்ள ஏதேனும் ஒரு அம்மன் ஆலயத்தில் நாகர் பிரதிஷ்டை செய்ய வேண்டும். அதன் பின் 11 சுமங்கலிகளுக்கு வெற்றிலை பாக்கு கொடுத்து ஆசீர்வாதம் வாங்க வேண்டும். இரண்டாவதாக அமையக்கூடிய திருமணம் நல்ல வாழ்க்கையாக அமையும்.

**திருமணம் எப்போது?**

**– பெயர் வெளியிட விரும்பாத வாசகர், எடப்பாடி**

தங்களுடைய பிறந்த தேதி விவரங்கள் சரியாக இல்லை. உங்களுக்குப் ப்ரஸ்னம் பார்த்ததில் வந்திருக்கும் லக்னம் கன்னி. இந்த வருடமே திருமணம் செய்து கொள்வது நன்மையைத் தரும். பரிகாரம் எதுவும் தேவையில்லை.

**இதே கேள்வியைக் கேட்ட மற்ற வாசகர்கள்**

● **விஜயராகவன், சென்னை**

ஆயில்ய நட்சத்திரம், கடக ராசி, கும்ப லக்னம். திருமணம் வரும் ஆவணி மாதத்துக்குப் பிறகு இனிதே நடைபெறும். பரிகாரம் எதுவும் தேவையில்லை.

● **சிந்தரேஸ்வரி, மதுரை**

பூச நட்சத்திரம், கடக ராசி, கும்ப லக்னம். இந்த வருடம் ஆகஸ்ட் மாதத்துக்குள் திருமண ஏற்பாட்டை செய்வது நன்மை தரும். தினமும் துர்கைக்கு ராகு காலத்தில் எலுமிச்சை விளக்கு தொடர்ந்து 48 நாட்கள் ஏற்றி வணங்கி வருவது சிறந்த பரிகாரம்.

● **பெயர் வெளியிட விரும்பாத வாசகர், சேலம்**

மூல நட்சத்திரம், தனுசு ராசி, மிதுன லக்னம். 30 வயது பூர்த்தியான பின் திருமணம் செய்வது நல்லது. பரிகாரங்கள் எதுவும் தேவையில்லை.

● **பெயர் வெளியிட விரும்பாத வாசகர், சென்னை**

ரோஹிணி நட்சத்திரம், ரிஷப ராசி, மகர லக்னம். திருமணம் வேறு சாதியில் செய்வது நல்லது. மேலும், ஒரே சாதியாக இருக்கும் பட்சத்தில் இரண்டாம் திருமணம் செய்வது நன்மையை தரும். பரிகாரம் எதுவும் தேவையில்லை.



## 'ஜாதகம் சாதகமே!'

## ஜோதிட கேள்வி பதில்

உங்கள் ஜாதகம் தொடர்பான கேள்வியை அருகே கொடுக்கப்பட்டுள்ள கூப்பனில் நிரப்பியோ, தனியாக ஒரு தாளில் எழுதியோ, இந்தக் கூப்பனுடன் இணைத்து அனுப்பவும். ஒரு கூப்பனுடன் ஒரே ஒரு கேள்வியை மட்டுமே அனுப்ப வேண்டும். பெயர் வெளியிட விரும்பாவிடில், குறிப்பிடவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
**ஜாதகம் சாதகமே**
'தீபம்', கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

பெயர் : ..............................
ஆண் / பெண் : ..............................
த/க பெயர் : ..............................
பிறந்த தேதி : .................. நேரம் : ..................
பிறந்த ஊர் : ..............................
கேள்வி : ..............................
..............................
..............................



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# சொன்னது பலிக்கும்!

## மேஷம்

(அஸ்வினி, பரணி, க்ருத்திகை 1/4)

**ரா**சிநாதன் செவ்வாய் பன்னிரெண்டிலும், ராசியிலும். அலைச்சலும், உழைப்பும் அதிகமாகும். திடீர் பிரயாணங்கள் செய்ய நேரும். கணினி துறையில் உள்ள சிலருக்கு இடமாற்றம் வரும். தனகாரகன் குரு ஆறில். தனஸ்தானத்தை பார்ப்பதால் நிதி நிலைமை சமாளிக்கப்படும். சூரியன் 11ல் நன்று. பெரியோர்கள், உயர் பதவியில் உள்ளோர் ஆதரவு நன்கு அமையும். வித்தையில் மேன்மை உண்டு. புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுவது நன்று. தொழிலில் கூட்டாளிகள் ஆர்வம் குறைந்து காணப்படுவர். தினமும் நவக்கிரஹங்களை வலம் வரவும். சந்திராஷ்டமம்: பிப்ரவரி 20 முதல் பிப்ரவரி 20/21 இரவு 00.54 வரை.

## ரிஷபம்

(க்ருத்திகை 3/4, ரோஹிணி, ம்ருகசீர்ஷம் 1/2)

**வி**த்தையில் மேன்மை உண்டு. கணக்காயர்கள், வழக்கறிஞர்கள் முன்னேற்றம் காண்பர். அரசு ஊழியர் களில் சிலருக்கு அனுகூலமான இடமாற்றம், பதவி/சம்பள உயர்வு கிடைக்கும். சந்ததிகள் நிலை உயரும். பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயம் உண்டு. பெண்கள், கலைஞர்கள் முன்னேற்றம் காண்பர். சிலருக்கு புதிய வீடு/வாகன சேர்க்கை ஏற்படும். சனி எட்டில் இருந்தாலும், ரிஷப ராசிக்கு அதிக பாதகம் இராது. கீழ் பணிபுரிவோர், சக ஊழியர் தொல்லை தருவர். தொழில் அதிபர்களுக்கு தொழிலாளர் பிரச்னை இருக்கும். இருப்பினும் சமாளிக்கப்படும். சனி ப்ரீதி நன்று. சந்திராஷ்டமம்: பிப்ரவரி 20/21 இரவு 00.54 முதல் பிப்ரவரி 23 காலை 11.31 வரை.

## மிதுனம்

(ம்ருகசீர்ஷம் 1/2, திருவாதிரை, புனர்பூசம் 3/4)

**ச**னி ஏழில் அமர்ந்து ராசியைப் பார்க்கிறார். பழகுவோருடன் உஷார் தேவை. தொழிலில் கூட்டாளிகளை அதிகம் நம்ப வேண்டாம். களத்ரவகை சுகக் குறைவு ஏற்படும். குரு நான்கில். சிலர் மீது வீண் பழி சுமத்தப்படும். நிதி நிலைமை சாதாரணம். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுவது நன்று. அரசு ஊழியர்கள் சிலர் கட்டாய விடுப்பில் செல்ல நேரும். வித்தையில் பலிதம் சுமார். ஆயுதங்கள், மின் சாதனங்களைக் கையாள்வதில் அதிக கவனம் தேவை. 1.3.17 முதல் செவ்வாய் 11ல். கணினி துறையில் உள்ள சிலருக்கு முன்னேற்றம் ஏற்படும். சனிப்ரீதி நன்று. சந்திராஷ்டமம்: பிப்ரவரி 23 காலை 11.31 முதல் பிப்ரவரி 25 இரவு 7.12 வரை.

## கடகம்

( புனர்பூசம் 1/4, பூசம், ஆயில்யம்)

**ச**னி பகவான் ஆறில் சஞ்சரிப்பது ஒன்றே அனுகூலம். மற்ற கிரஹங்கள் பிரதிகூலமாய் இருந்தாலும் சனி பகவான் தைரியமும், ஊக்கமும் அளித்து எந்நிலையையும் சமாளிக்க உதவும். நிதி நிலைமை சாதாரணம். பிதா உடல் நலனில் கவனம் தேவை. நீதிமன்ற விவகாரங்களில் நல்ல திருப்பம் ஏற்படும். வித்தையில் பலிதம் சுமார். கணினி துறையில் உள்ள சிலர் புதிய வேலை நாடிச் செல்வர். சந்ததிகள் பற்றிய பிரச்னைகள் இருக்கும். அரசு ஊழியர்கள் சிலர் இடமாற்றம், விடுப்பில் செல்ல நேரும். செவ்வாய்க்கிழமைகளில் ஸ்ரீநரஸிம்மர்/முருகன் க்ஷேத்ரம் சென்று தரிசிப்பது நன்று. சந்திராஷ்டமம்: பிப்ரவரி 25 இரவு 7.12 முதல் பிப்ரவரி 27/28 இரவு 00.11 வரை.

## சிம்மம்

(மகம், பூரம், உத்திரம் 1/4)

**கு**ரு 2ல். நிதி நிலைமை அபிவிருத்தி அடையும். குடும்பத்தில் சுப காரியங்கள் மகிழ்ச்சி தரும். சிலருக்கு சந்தான பிராப்தி உண்டு. சூரியன் 7ல். கேது சம்பந்தமான சிலருக்கு உஷ்ண பிணிகள் ஏற்படும். தொழிலில் கூட்டாளிகள் ஆதரவு இராது. களத்ரவகை சுகக் குறைவு ஏற்படும். 1.3.17 வரை செவ்வாய் 8லும், பிறகு 9லும். வாகனங்கள் ஓட்டுவதில் அதிக கவனம் தேவை. பிதா உடல் நலனில் கவனம் தேவை. பொதுப் பணிகளில் ஈடுபட வேண்டாம். கணினி துறையில் உள்ள சிலருக்கு தேக்க நிலை நிலவும். வித்தையில் அதிக கவனம் தேவை. நவக்கிரஹ வழிபாடு, குலதெய்வ வழிபாடு நலம் தரும். சந்திராஷ்டமம்: பிப்ரவரி 27/28 இரவு 00.11 முதல் மார்ச் 1/2 காலை 3.17 வரை.

## கன்னி

(உத்திரம் 3/4, ஹஸ்தம், சித்திரை 1/2)

**ரா**சியில் குரு. சனி நான்கில். பெரும்பாலான கிரஹங்கள் அனுகூலமான நிலையில் இல்லை. எதிலும் நிதானம் தேவை. பண வசதி சாதாரணம். வீடு, வாகன வசதி விஷயங்களில் புதிய செலவினங்கள் ஏற்படும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. தொழிலில் கூட்டாளிகள் ஆதரவு குறைந்து காணப்படும். சிலருக்குக் கண்ணில் உபாதை ஏற்படும். கணினி துறையில் உள்ள சிலருக்கு அதிருப்திகரமான சூழ்நிலை நிலவும். சூரியன் 6ல் இருப்பது சற்றே நன்று. எதையும் சமாளிக்கும் திறன் ஏற்படும். நவக்கிரஹ க்ஷேத்திரங்கள் சென்று தரிசிப்பது நன்று. சந்திராஷ்டமம்: மார்ச் 1/2 காலை 3.17 முதல் மார்ச் 3/4 காலை 5.41 வரை.


https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge





## 20.02.17 முதல் 04.03.17 வரை

## துலாம்

**(சித்திரை ½, ஸ்வாதி, விசாகம் ¾)**

**கு**ரு 12ல். செலவினம் குறையாது. மறைமுக எதிர்ப்புகள் இருக்கும். திடீர் பிரயாணங்கள் தவிர்க்க முடியாது. சனி 3ல். புதிய முயற்சிகளில் நல்ல திருப்பம் ஏற்படும். வித்தையில் பலிதம் சுமார். 1.3.17 வரை செவ்வாய் 6ல். நீதிமன்ற விவகாரங்களில் நல்ல திருப்பம் ஏற்படும். கணினி துறையில் உள்ள சிலருக்கு நற்பலன்கள் நடைபெறும். கர்ப்பிணிகள் தக்க மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது நன்று. அரசு ஊழியர்கள் சிலர் விருப்ப ஓய்வு பெற ஆயத்தம் செய்வர். தொழிலில் கூட்டாளிகளை அதிகம் நம்ப வேண்டாம். வெள்ளிக்கிழமைகளில் பெருமாள்/தாயாரை விசேஷமாக வழிபடுவது நன்று. சந்திராஷ்டமம்: மார்ச் 3/4 காலை 5.41 முதல் அன்று முடிய.

## விருச்சிகம்

**(விசாகம் ¼, அனுஷம், கேட்டை)**

**கு**ரு 11ல். நிதி நிலைமை அபிவிருத்தி அடையும். பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயம் ஏற்படும். சந்ததிகள் நிலை உயரும். அரசு ஊழியர்களில் சிலருக்கு சற்றே அனுகூலமான இடமாற்றம் ஏற்படும். நீதிமன்ற விவகாரங்களில் நல்ல திருப்பம் ஏற்படும். வித்தையில் பலிதம் சுமார். சனி இரண்டில். வாக்கில் நிதானம் தேவை. குடும்பத்தில் பிரச்னைகள் இருப்பினும், சமாளிக்கப்படும். தொழில் அதிபர்களுக்கு தொழிலாளர் பிரச்னைகள் இருக்கும். தொழிலில் கூட்டாளிகளை அதிகம் நம்ப வேண்டாம். பிரயாணத்தில் தங்களுடன் எடுத்துச் செல்லும் பொருள்கள் மீது அதிக கவனம் தேவை. உணவு விஷயத்தில் கட்டுப்பாடு தேவை. சனி ப்ரீதி நன்று.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்திராடம் ¼)**

**ரா**சியில் சனி. குரு பத்தாமிடத்தில். உழைப்பும் அலைச்சலும் அதிகமாகும். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடுவது நன்று. பண வசதி சாதாரணம். தொழிலில் போட்டியும் மந்தநிலையும் நிலவும். வித்தையில் அதிக கவனம் தேவை. சூரியன் மூன்றில். தக்க தருணத்தில் பெரியோர்கள், உயர் பதவியில் உள்ளோர் ஆதரவு கிடைக்கும். சிலர் பூர்வீகச் சொத்துக்களை விற்பனை செய்ய முயற்சி செய்வர். பெண்கள், கலைஞர்களுக்கு சற்றே அனுகூலமான பலன்கள் ஏற்படும். சந்ததிகள் பற்றிய பிரச்னைகள் இருக்கும். தொழிலில் கூட்டாளிகள் ஆதரவு இராது. தினமும் நவக்கிரஹங்களை வலம் வருவது நன்று.

## மகரம்

**(உத்திராடம் ¾, திருவோணம், அவிட்டம் ½)**

**கு**ரு ராசியைப் பார்ப்பது நன்று. நிதி நிலைமை திருப்தி தரும். சனி 12ல். செலவினங்கள் குறையாது. சேமிப்பது கடினம். சூரியன் இரண்டில். சிலருக்கு கண்ணில் உபாதை ஏற்படும். குடும்பத்தில் சுப காரியங்கள் நல்லபடி முடியும். சிலருக்கு சந்தான பிராப்தி உண்டு. வித்தையில் பலிதம் சுமார். அரசு ஊழியர்கள் சிலருக்கு சற்றே அனுகூலமான இடமாற்றம் கிடைக்கும். 1.3.17 வரை செவ்வாய் மூன்றில். தொழிலில் கூட்டாளிகள் ஆதரவு சுமார். கணினி துறையில் உள்ள சிலருக்கு நற்பலன்கள் நடைபெறும். கீழ்பணிபுரிவோர், சக ஊழியர் தொல்லை தருவர். தொழில் ரீதியாக சிலர் குடும்பத்தை விட்டுப் பிரிந்திருக்க நேரும். சனிப்ரீதி நன்று.

## கும்பம்

**(அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾)**

**ரா**சிநாதன் சனி 11ல் இருப்பது நன்று. புதிய முயற்சிகளில் நல்ல திருப்பம் ஏற்படும். குரு எட்டில் இருந்தாலும் நிதி நிலைமை சமாளிக்கப்படும். தொழில் அதிபர்களுக்கு விரைவில் தொழிலை அபிவிருத்தி செய்ய வாய்ப்புகள் வரும். சிலர் தொழில் ரீதியாக குடும்பத்தை விட்டுப் பிரிந்திருக்க நேரும். வித்தையில் பலிதம் சுமார். அரசு ஊழியர்கள் சிலர் இடமாற்றம், கட்டாய விடுப்பில் செல்ல நேரும். சந்ததிகள் பற்றிய பிரச்னைகள் இருக்கும். சிலர் பூர்வீகச் சொத்துக்களை விற்பனை செய்ய முயற்சி செய்வர். 1.3.17 முதல் செவ்வாய் மூன்றில். கணினி துறையில் உள்ள சிலருக்கு நல்ல திருப்பம் ஏற்படும். குரு ப்ரீதி நன்று.

## மீனம்

**( பூரட்டாதி ¼, உத்திரட்டாதி, ரேவதி)**

**ரா**சிநாதன் குரு ஏழில் அமர்ந்து ராசியைப் பார்ப்பது நன்று. நிதி நிலைமை திருப்தி தரும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். சிலருக்கு குழந்தை பாக்கியம் உண்டு. அரசு ஊழியர்கள் சிலருக்குச் சற்றே அனுகூலமான இடமாற்றம் கிடைக்கும். வித்தையில் மேன்மை உண்டு. கணக்காயர்கள், வழக்கறிஞர்கள் முன்னேற்றம் காண்பர். கணினி துறையில் உள்ள சிலருக்கு அதிருப்திகரமான சூழ்நிலையும், ஸ்திரமற்ற நிலையும் இருக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நல்லபடி முடியும். தொழிலில் கூட்டாளிகள் நன்கு செயல்படுவர். புதிய முயற்சிகளில் அனுகூலம் தாமதமடையும். சனி, செவ்வாய் ப்ரீதி நன்று.



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

**சப்த ஸ்தான தலங்களிலும் உள்ள இறைவனை ஒரே நாளில் வழிபட்டால் பாவங்கள் தொலைந்து, முக்தியை அளிக்கும் என்பது ஈஸ்வரன் வாக்கு.**





# சகல நலமருளும் சப்த ஸ்தான மூர்த்திகள்!

'மயிலையே கயிலை; கயிலையே மயிலை' என சிவனடியார்களால் கொண்டாடப்படும் மயிலாப்பூரில் சப்த ஸ்தான தலங்கள் அமைந்துள்ளன. சப்த ஸ்தானம் எனப்படுவது சப்த ரிஷிகளால் வழிபடப்பட்ட ஏழு திருத்தலங்களாகும். இவை, திருமயிலை தல புராணத்தில், 'மயூர சப்த பட்டினம்' என்று அழைக்கப்படுகின்றன. இந்த ஏழு தலங்களின் இறைவரும் மாசி மகம் தீர்த்தவாரியின்பொழுது கண்ணாடி பல்லக்கில் எழுந்தருளி ஒன்றாகக் காட்சியளிப்பர். இந்த ஏழு தலங்களிலும் உள்ள இறைவனை ஒரே நாளில் வழிபட்டால் பாவங்கள் தொலைந்து முக்தியை அளிக்கும் என்பது ஈஸ்வரன் வாக்கு. இனி, சப்த ஸ்தான மூர்த்திகள்...

**1.காரணீஸ்வரர்:** மயிலையில் பஜார் தெருவில் அமைந்துள்ளது இவ்வாலயம். இது வசிஷ்டரால் வழிபடப்பட்டது. சிந்து நதியின் தெற்கு பகுதியில் 'பத்மபுரி' எனும் ஊரில் தனஞ்சயன் என்பவன் வாழ்ந்து வந்தான். இவன் சிறந்த சிவ பக்தன். தனது பெற்றோருக்கும் இறைவனுக்கும் தனது கடமைகளை சரிவரச் செய்து வந்தான். தகுந்த வயது வந்ததும் அவனுக்குத் திருமணம் ஆனது. மனைவியின் மீது தனஞ்சயன் மிகுந்த காதல் கொண்டிருந்தான். சில நாட்கள் சந்தோஷமாக கழிந்தன. அப்போது அவன் மனைவிக்கு வேறு ஒருவர் மீது காதல் வந்து, தனது கணவனைப் பிரிந்து அந்த ஆடவனுடன் சென்று விட்டாள்.

தனஞ்சயனுக்கு உலகமே வெறுத்து விட்டது. எந்த தவறும் செய்யாத தனக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? தனது காதல் மனைவியைப் பிரிந்து எவ்வாறு வாழ்வது என்று மனம் வருந்தினான். அவன் தந்தை பசுபதி, மகனின் மனநிலை அறிந்து அவனை மயிலை திருத்தலத்துக்கு சென்று இறைவனை வழிபடும்படி பணித்தார். தனஞ்சயனும் மயிலைக்கு வந்து சிவலிங்கம் நிறுவி மிகுந்த பக்தியுடன் வழிபட்டு வந்தான். 48 நாட்கள் கழிந்தன. தனஞ்சயனுக்கு மனதில் இருந்த வேதனைகள் மறைந்து தூய விரக்தி உண்டானது.

இறைவனிடம் இந்தப் பிறப்பில் இருந்து விடுதலை பெற வேண்டினான். இறைவன் அவன் முன் தோன்றி உன் பிறப்பின் பயன் குடும்ப வாழ்க்கை இல்லை. எனவேதான், உன் மனைவி உன்னைப் பிரிந்தாள். அனைத்துக் காரியங்களுக்கும் காரணத்தை உணர்ந்தவன் இறைவன் என்பதை அறிந்து விட்டால் கவலை என்பது இல்லை என்று உணர்த்தினார். இங்குள்ள ஸ்வர்ணலதாம்பிகையை வழிபடுவதன் மூலம், பொன் நகைகள் சேர்வதைக் காணலாம். இங்கு திருமணம் நடைபெற வேண்டி நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய் மற்றும் விளக்கெண்ணெயில் தீபங்கள் ஏற்றி பலன் அடைகின்றனர்.

**2.தீர்த்தபாலீஸ்வரர்:** இந்த சிவாலயம் சிட்டி சென்டருக்கு எதிரில், நடேசன் சாலையில் உள்ளது. சிவபெருமானின் திருமணத்தை நினைத்தபோது காணும் அருள் பெற்ற அகத்தியர் பொதிகை மலை வரை 108 லிங்கங்களை நிறுவி தெய்வத் திருமணத்தைக் கண்டார். அலைச்சலாலும் அசதியாலும் அவர் உடல் நலம் குன்றியது. இறைவனிடம் அருள் செய்யுமாறு வேண்டினார். இறைவனும் கடல் ஓரத்தில் தன்னை பிரதிஷ்டை செய்து, கடல் நீரால் அபிஷேகம் செய்தால் அவரது நோய் தீரும் என்று பணித்தார்.



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



ப்ரியா பாஸ்கரன் 46



அகத்தியரும் மயிலை வந்து இறைவனை பிரதிஷ்டை செய்து கடல் வரை 64 தீர்த்தங்கள் அமைத்து 48 நாட்கள் அபிஷேகம் செய்து, தனது உடல் நலம் சீரடையக் கண்டார். இன்றும் நோயால் வருந்துவோர் இங்கு கடலில் நீராடி, இறைவனுக்கு சர்க்கரை பொங்கல் நைவேத்தியம் செய்து வழிபட்டு நோய் தீர்ந்து செல்கின்றனர். இங்கு இறைவனுக்கு கடல் நீரிலும், திரிபுர சுந்தரி அம்மனுக்கு மார்கழியில் வெந்நீரிலும் அபிஷேகம் நடைபெறுகிறது.

**3. வெள்ளீஸ்வரர்:** மயிலை தெற்கு மாடவீதியில் அமைந்துள்ள இத்திருத்தலம் ஆங்கிரஸ முனிவரால் வழிபடப்பட்டது. வேதாரண்யம் ஆலய கர்ப்ப கிரஹத்தில் ஒரு எலி விளக்கில் உள்ள எண்ணெயை தினமும் குடித்து வந்தது. அவ்வாறு செய்யும்போது மூக்கு பட்டு திரி தூண்டப்பட்டு, அந்தப் புண்ணியத்தில் அடுத்த பிறவியில் மஹாபலி மன்னராகப் பிறந்தது. மகாபலியை சோதிக்க இறைவன் வாமன ரூபத்தில் வந்து மூன்றடி நிலம் கேட்ட போது, வந்திருப்பது மஹாவிஷ்ணு என்று அறிந்த சுக்ராச்சாரியார், வண்டுருவம் எடுத்து கமண்டலத்தின் துவாரத்தை அடைத்துக் கொண்டார்.

ஆனால் வாமனாரோ, ஒரு தர்பையை எடுத்து கமண்டல துவாரத்தைக் குத்த, கண் பார்வை இழந்தார் சுக்ராச்சாரியார். தனது பார்வையைத் திரும்பப் பெற மயிலைக்கு வந்து லிங்கம் அமைத்து வழிபட்டார். வைகாசி மாதத்தில் மும்மூர்த்திகளும் அவருக்குக் காட்சி அளித்து இழந்த பார்வையைத் திரும்ப அளித்தனர். இன்றும் வைகாசி பிரமோத்ஸவத்தில் இந்த நிகழ்வு நடத்தப்படுகிறது. எனவே, இங்கு பிரம்மாவின் உத்ஸவர் இருப்பதை நாம் காணலாம். மேலும், இறைவனுக்குப் பின்புறம் உலகளந்த பெருமாளின் திருவுரு இடம்பெற்றுள்ளது. கண் பார்வைக் கோளாறு உள்ளவர்கள் இங்கு வந்து வெள்ளீஸ்வரரை வழிபட்டு பார்வை பெறுகின்றனர்.

**4. விரூபாக்ஷீஸ்வரர்:** மயிலையில் வாழ்ந்த ஒரு செல்வந்தர் சிவநேசன் செட்டியார். அவர் தனது ஒரே மகளான பூம்பாவையை திருஞானசம்பந்தருக்கு திருமணம் செய்து கொடுக்கும் எண்ணத்தில் வளர்த்து வந்தார். ஆனால் அவளோ, நந்தவனத்தில் பூநாகம் தீண்டி இறந்து விட்டாள். மிகுந்த துயரமடைந்த சிவநேசன் செட்டியார் தனது மகளின் சாம்பலையும் எலும்புகளையும் ஒரு கலசத்தில் இட்டு என்றாவது ஞானசம்பந்தர் வந்தால் அவருக்கு காணிக்கையாக்குவதற்காக வைத்திருந்தார். சில ஆண்டுகள் கழிந்தன. சம்பந்தர் திருவொற்றியூருக்கு வருவது கேள்விப்பட்டு அவரை எதிர்கொண்டு அழைத்து நடந்த நிகழ்வுகளைக் கூறினார்.

சம்பந்தர் மயிலைக்கு வந்து பூம்பாவையின் அஸ்திக் கலசத்தை கோபுரம் அருகே கொண்டுவரச் செய்தார். பின், 'மட்டிட்ட புன்னை' எனத் தொடங்கும் ஒரு பதிகத்தைப் பாடினார். ஒவ்வொரு பாடலின் முடிவிலும் அந்த மாதத்தில் நடைபெறும் திருவிழாவை காணாமல் போவாயோ பூம்பாவாய் என்று பொருள் படும்படி பாடினார். பாடி முடித்ததும் கலசத்தை உடைத்துக் கொண்டு பூம்பாவை மீண்டும் உயிருடன் தோன்றினாள். அவளை ஏற்றுக்கொள்ளும்படி சம்பந்தரை வேண்டினார் சிவநேசன் செட்டியார். ஆனால் சம்பந்தரோ, 'உயிர் அளித்ததால் தந்தை ஆனோம்' என மறுத்து விட்டார். தனது காலம் முழுவதும் இறை வழிபாட்டில் கழித்து கன்னியாகவே வாழ்ந்த பூம்பாவைக்காக சிவநேசன் செட்டியார் எழுப்பியதே விரூபாக்ஷீஸ்வரர் ஆலயம். விஜயநகர காலம் வரை இறைவன், 'பூம்பாவை நாயனார்' என்றே அழைக்கப்பட்டிருக்கிறார். சிவாலயம் குத்ச மகரிஷியால் வழிபடப்பட்டது. இங்கு இறைவன் சுந்தரருக்கு நடராஜராகக் காட்சி அளித்தார்.





https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



**5.வாலீஸ்வரர்:** வானர அரசனான வாலி சிறந்த சிவபக்தன். அவன், தனது முன் நின்று போர் புரியும் எவரும் பாதி சக்தியை இழந்து, தாம் அதை அடைய வேண்டும் என்று மயிலைக்கு வந்து லிங்கம் பிரதிஷ்டை செய்து வணங்க, இறைவனும் வரமருளினார். இதனால்தான் ராமனே மறைந்திருந்து வாலியைத் தாக்கினார். இவ்வாலயம் கவுதம முனிவரால் வணங்கப்பட்டது. பகைவர்கள் நீங்க இங்கு வந்து வழிபட்டுச் செல்கின்றனர். அதேபோல் இவ்வாலயத்தின் பின்னால் உள்ள வளரும் பல்லிக்கு சந்தன காப்பிடுவதன் மூலம் நோய்கள் தீருவதைக் காணலாம். பூமிக்கடியில் கிடைத்த பஞ்ச லிங்கங்களும் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இறைவியின் பெயர் பெரியநாயகி அம்மன்.



**6.மல்லீஸ்வரர்:** இவ்வாலயம் பிருகு முனிவரால் வணங்கப்பட்டது. பிரார்த்தன் என்பவன் அதிருத்ர ஹோமம் செய்ய விரும்பி மயிலைக்கு வந்தான். அங்கு மல்லி வனத்தில் இருந்த மிகப் பிரம்மாண்ட திருமேனியைக் கண்டு அங்கு அமர்ந்து ஹோமத்தை தொடங்கினான். ஹோமத்தின் தீவிரத்தைக் கண்ட இந்திரன், அதைக் கலைக்க அரம்பையரை அனுப்பினான். ஆனால் பிரார்த்தனோ, எந்தவித சலனமும் இன்றி ஹோமத்தைச் செய்து முடித்தான். இறைவனும் மனம் மகிழ்ந்து அவனுக்கு முக்தி அளித்தார். இங்குள்ள இறைவி மரகதாம்பிகை மரகதக் கல்லால் ஆனவர். திருமணம் நடைபெற விரும்புவோர் இங்குள்ள கல்யாண சுந்தரருக்கு ஆறு திங்கள் கிழமைகள் மல்லிகை மலர்களால் அர்ச்சனை செய்கின்றனர். குழந்தைப் பேறு விரும்புவோர் ஆறு வாரம் பள்ளியறை பூஜையில் கலந்து கொள்கின்றனர்.



**7.கபாலீஸ்வரர்:** ஒரு நாள் கயிலையில் இறைவன், அம்பிகைக்கு திருநீறு, பஞ்சாட்சரம் மற்றும் பிரணவத்தின் பொருளை உபதேசம் செய்து கொண்டிருக்கும் பொழுது, அம்பிகையின் கவனம் அருகிலிருந்த மயிலின் மேல் செல்ல, கோபம் அடைந்த இறைவன் அம்பிகையை மயிலாகப் போகுமாறு சாபம் அளித்தார். அம்பிகையும் மயிலையில் வந்து இறைவனை வணங்கி மீண்டும் சுய உருகொண்டு அவரைச் சேர்ந்தாள்.

தற்சமயம் இருக்கும் ஆலயம் சுமார் நானூறு ஆண்டுகள் பழைமையானது. போரின் பொழுது கடலோரமாக இருந்த ஆலயம் இங்கிருந்த சிங்கார வேலர் ஆலயத்துக்குள் கொண்டு வந்து சேர்க்கப்பட்டது. இங்கு கற்பகாம்பாளுக்கு எதிரே வாயிலார் நாயனாருக்கு சன்னிதி அமைந்துள்ளது. இவர் தனது வாழ்நாள் முழுவதும் மௌன விரதம் இருந்து அம்பிகையை வழிபட்டவர். மேலும், இங்குள்ள சிங்காரவேலரை ஸ்ரீராமர், சீதையை தேடிச் செல்லும் பொழுதும், போர் முடிந்து அயோத்திக்குத் திரும்பிய பிறகும் என இரண்டு முறை வழிபட்டிருக்கிறார். மேலும், இங்கு ஐப்பசி மாதம் பிரம்மோத்ஸவமும் தைப்பூச திருவிழாவும் நடத்தியுள்ளார். சூரனை அழிக்கச் செல்லும் பொழுது, இங்கு வந்து இறைவனை வேண்டி, முருகன் வீரவேல் பெற்றதாகவும் அதைக் கண்டு விநாயகர் ஆனந்த நர்த்தனம் புரிந்ததாகவும் தல வரலாறு கூறுகின்றது. பூம்பாவையும் இங்கு தனி சன்னிதியில் காணப்படுகிறாள்.

இத்தகைய சிறப்புகள் வாய்ந்த சப்த ஸ்தான தலங்களை இந்த சிவராத்திரியில் கண்டு பேரானந்தம் அடைவோம்.



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



# சிவனுக்கிசைந்த சிவராத்திரி!



கர்ம வினைகளினால் சிக்குண்டு தவிக்கின்ற நம்மை காப்பாற்றுகின்றவர் ஈசன் ஒருவனே. 'திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை' என்பார்கள். எல்லோராலும் கைவிடப்பட்ட நிலையில், துன்பத்தில் நலிந்திருப்பவரின் ஆசைகளைப் பூர்த்தி செய்து சந்தோஷத்தை அருள்பவர் சிவபெருமான். நாயன்மார்களும் சிவனடியார்களும் சிவபெருமான் துணையை தமது இல்வாழ்விலேயே அனுபவித்திருக்கிறார்கள். சிவபெருமானை, தமது உறவாக, குடும்பத்தில் ஒருவராக ஆசை தீர அனுபவித்த அவர்கள், சிவபெருமானை பலவிதமாகப் போற்றியிருக்கிறார்கள். இன்று அவற்றைப் பாடல்களாகவும் பதிகங்களாகவும் கவலைகள் தீர ஓதிக் கொண்டிருக்கிறோம்.

சிவபெருமான் நாயன்மார்களுக்கு மட்டும் உரியவரில்லை. அதிவேகமான இந்த உலகத்தில் தன்னை மறந்து ஓடிக் கொண்டிருக்கும் அனைவருக்கும் சொந்தமானவர். மகாசிவராத்திரியில் மட்டும் நாம் சிவபெருமானை நினைத்து விழித்திருந்து வணங்கினால் போதாது. ஏனெனில், பல பிறவிகளில் செய்த பாவத்தினை ஓரிரு நாட்களில் அழித்து முடிக்க முடியாதல்லவா! சிவபெருமானை நாம் உண்கின்ற போதும் உறங்குகின்ற போதும் நடக்கின்ற போதும் நினைக்க வேண்டும். ஆம்! ஈசனை எப்போதும் தாயாக, தகப்பனாக, காதலியாக, மனைவியாக, ஆசிரியராக, நண்பனாக, காதலனாக, கணவனாக, குழந்தையாகக் காண வேண்டும்.





**'அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்**
**அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்**
**அன்பும் சிவமும் ஒன்றென்று அறிந்தபின்**
**அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே'**

என்பார் திருமூலர்.

மகாபிரளயத்தின் பின்னர் சிவபெருமான் தனியாக ஆழ்ந்த தவத்தில் மூழ்கியிருந்தார். எப்போதும் உடனாய சிவகாமியம்மை, மீண்டும் அண்ட சராசரங்களையும் படைக்க வேண்டி எம்பெருமானை நோக்கித் தவமிருந்தார். அன்னையின் தவத்தில் மகிழ்ந்த சிவபெருமான், அன்னையின் விருப்பத்துக்கு அமைய, 'இந்நாளாகிய சிவராத்திரி சாமப் பொழுதில் கண் விழித்து, நான்கு கால பூசைகளையும் முறைப்படி ஒழுகி, விரதம் பூணுபவர்களுக்கு முக்தி அளிப்பேன்' என அருளினார்.

சிவராத்திரி விரதம் இருப்பதால் செல்வம் சேரும்; தெரியாமல் செய்த பாவங்களுடன், தெரிந்தே பாவங்கள் செய்திருந்தாலும் அவையும் நம்மை விட்டு நீங்கிப் போகும். சிவராத்திரியன்று அதிகாலை நீராடி, வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவதும், நாவினுக் கருங்கலம் ஆனதும், பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை நண்ணி நின்றிருப்பதுமான ஈசனின் பஞ்சாட்சர மந்திரத்தைக் கூறி, பூஜை செய்ய வேண்டும். எதுவும் உண்ணுதல் கூடாது. ஆலயம் சென்று லிங்க மூர்த்தியையும் அம்பாளையும் தரிசித்து வரலாம். அபிஷேகம் செய்யலாம். நாள் முழுவதும் ஈசனின் நாமத்தை ஜபித்துக் கொண்டிருக்க வேண்டும். தேவாரம், திருமுறைகள், திருப்புகழ் பாராயணம் இரட்டிப்பு பலன் தரும். துன்பங்களைத் தரும் ஆசாபாசங்களை உண்ணாமல் உறங்காமல் விரதமிருந்து அறுக்கும் இரவே சிவராத்திரி.

– சிவ. அ.விஜய் பெரியசுவாமி, கல்பாக்கம்




https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

**அமுதூட்டும் காலத்தில் தன் அன்னையின் முகம் நோக்கும் குழந்தையின் ஏக்கம் அவர்கள் எல்லோர் முகத்திலும் தெரிந்தது. நம்பிகளே தொடர்ந்து பேசட்டும் என்று காத்திருந்தனர்.**





# ஆற்றங்கரை ஓரத்திலே...

இக்கதை நிகழும் காலகட்டத்தில் ராமானுஜர் காஞ்சியில்தான் இருந்தார். இன்னமும் துறவறம் ஏற்க வில்லை. இல்லறத்தில்தான் வாழ்ந்து வந்தார். அவரின் உள்மனதின் தேடல்களுக்கு மட்டும் திருக் கச்சிநம்பிகள் மூலம் வரதன் அவ்வப்பொழுது பதில் அளித்து வந்தான். அதில் முக்கியமானது ஆறு வார்த்தை. அதிலும் முக்கியமானது ஆறாவது வார்த்தை. இளையாழ்வாராம் ராமானுஜருக்கு அதுவே ஆறுதல் வார்த்தை. ஆறாம் கட்டளைதனை உரைத்தபோது ஆசார்ய சம்பந்தத்தின் அவசியத்தை வரதன் வலியுறுத்தியிருந்தான்.

இனி, தாமதம் செய்வது அவனது திருவுள்ளத்துக்கு உகப்பாக இராது என்பதை ராமானுஜர் நன்கு உணர்ந் திருந்தார். ஆளவந்தார் பரமபதம் அடைந்த பின்பு ஒரு கணமும் தாமதிக்காமல் திருவரங்கத்தை விடுத்து எவ் வளவு விரைவாக காஞ்சிபுரத்துக்கு வந்தாரோ, அதே விரைவில் இப்போது காஞ்சியிலிருந்து திருவரங்கம் கிளம்பினார். தன் கட்டளைதனை செயல்படுத்த விரைந்து கிளம்பும் இளையாழ்வாருக்கு வரதனும் வழி கொடுத்தான்.

அதேசமயம் திருவரங்கத்திலும் தீவிரமானதொரு ஆலோசனை நடைபெற்றது. ஆளவந்தார் பரம பதித் தார். இனியும் தாமதிப்பதில் பயனில்லை. ஏனெனில், ஆளவந்தாருக்குப் பின்பு திருவரங்கத்தின் தலைமைப் பொறுப்பு வெற்றிடமாகவுள்ளது. அதனை ஏற்றுக் கொள்ள ஒருவர் வர வேண்டும். அவர் யார்? எனும் தீர்மானம் இன்னமும் செய்யப்படவில்லை. பெரிய நம்பிகள், திருவரங்கப்பெருமாள் அரையர், திருமாலை யாண்டான் உள்ளிட்ட பெரியவர்கள், ஆளவந்தாரின் பரமார்த்த சிஷ்யர்கள் பலரும் திருவரங்கத்தில் இருந் தனர். ஆனாலும், தலைமை ஏற்கும் துணிவு அவர்களில் எவருக்கும் இல்லை. அதுவும் தவிர, ஆளவந்தாரின் திருவுள்ளமும் அதுவல்ல. எனவே, குழப்பமானதொரு மனநிலையே அங்கு நிலவியது. எல்லோரும் குழப் பத்திலிருந்த அந்தச் சமயம் பெரியநம்பிகள் வந்து பேச ஆரம்பித்தார்.

''சபையோரிடத்தில் அடியேன் செய்யும் விண்ணப்பம்.''

எல்லோரும் அவரையே கூர்ந்து பார்த்துக் கொண் டிருந்தனர். 'அவர் என்ன சொல்லப் போகிறார்?' என்று அறியும் ஆவல் அனைவரின் முகத்திலும் தெரிந் தது.

''நம் ஆளவந்தாரின் மனோரதம் பூர்த்தியாக வேண் டிய கணமிது. எவ்விதம் சோழ அரசி 'ஆளவந்தீரோ' என்று நம் ஆசார்யரை அழைத்தாளோ... அஃதே போன்று 'ஆமுதல்வன்' என்று ஆளவந்தார் அழைத்த வர் ஒருவர் உண்டு.''

இவ்விதம் கூறிய நம்பிகள் சற்றே நிறுத்தி அனை வரையும் பார்த்தார். சபையில் நிசப்தம் குடிகொண்டி ருந்தது. அமுதூட்டும் காலத்தில் தன் அன்னையின் முகம் நோக்கும் குழந்தையின் ஏக்கம் அவர்கள் எல் லோர் முகத்திலும் தெரிந்தது. நம்பிகளே தொடர்ந்து பேசட்டும் என்று காத்திருந்தனர்.

'தனது பேச்சைத் தொடரலாம்' என்பதையுணர்ந்த நம்பிகள் பேச ஆரம்பித்தார்.

ஆளவந்தார், 'ஆமுதல்வன்' என்றழைத்தவர் 'இளையாழ்வார்' என்றவுடன் சிறு சலசலப்பு தோன்றி யது.

இளையாழ்வார், இளையாழ்வார் என்று அனை வரும் ஒருத்தருக்கொருத்தர் பார்த்துக் கொண்டனர்.

''ஆம்... இளையாழ்வார்! எவருடைய சபதத்தினால் நமது ஆசார்யரின் விரல்கள் திறந்தனவோ! அதே இளையாழ்வார்தான்'' என்ற நம்பிகளின் கம்பீரத் தொனி, பேசி முடித்தபோது அதனை ஆமோதிப்பவன்



https://t.me/softknowledge


www.TheMagnat.com
https://t.me/softknowledge

# ஸ்ரீ ராமானுஜ திக்விஜயம் 27

எம்.வி.அனந்த பத்மநாபாசாரியார்

போல் அரங்கனின் ஆலயமணி 'டாண்' என்று ஒலித்தது.

ஓம்கார நாதமாகிய அவ்வொலியைக் கேட்ட போது, அரங்கத்திலிருந்த அனைவருக்குமே மேனி சிலிர்த்தது. நடந்த சம்பவங்கள் அவர்களின் கண் முன்னே நிழலாடின. ஆளவந்தார் பரமபதித்தபோது காஞ்சியிலிருந்து இளையாழ்வார் வந்தது, அவரின் சரமத் திருமேனியை (இறந்த உடலை)க் கண்டு துக்கித்தது, பின்னர் மூடியிருந்த மூன்று விரல்களைத்





திறக்க சபதம் செய்தது என அனைத்தையும் எண்ணிப் பார்த்தனர்.

இளையாழ்வார் பிறவியிலேயே தெய்வாம்சம் பொருந்தியவர் என்பதையும் ஆளவந்தாரின் பூரண கருணைக்கு உறைவிடமானவர் என்பதையும் அவர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். அதனால், பெரியநம்பிகளின் இந்தத் தீர்மானத்தை ஏகமானதாக ஆமோதித்தனர். தலைமைப் பொறுப்பினை ஏற்பதற்கு இளையாழ்வாரே தகுதியானவர் எனும் முடிவு உறுதியாயிற்று.

ஆனாலும், அதிலொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். "தலைமையேற்கும் தகுதி, ஜ்ஞானம் என முழுதும் அவரிடமிருந்தாலும் வயது இளையவர் ஆயிற்றே" என்றனர் சிலர்.

பெரியநம்பிகள் மெலிதாக நகைத்தார். "இங்குள்ளவர்கள் வயதில் மூத்தவர்கள். அதனால், அவர்களால் தலைமையேற்க இயலவில்லை. இளையாழ்வார் வயதில் இளையவர். ஆதலாலும், தலைமையேற்க முடியாது. இதுதானே உங்களின் கருத்து."

அவரின் அந்தப் பேச்சுக்கு என்ன பதிலுரைப்பது எனத் தெரியாமல் சிலர் மௌனம் காத்தனர்.

"சோழ ராஜாவின் சபையில் ஆக்கியாழ்வானை வாதில் வென்று, அரசனது ராஜ்ஜியத்தில் பாதியை அடைந்த நமது ஆசார்யார் ஆளவந்தாருக்கு அப்போது வயது என்ன? அரசாட்சி செய்யும் வயதா! முன் அனுபவம் அவருக்கு உண்டா?"

இடி போன்ற குரலில் நம்பிகளின் இக்கேள்விக்கு அங்கு சபையில் பதிலுரைக்க எவரும் முன்வரவில்லை.

"இளையாழ்வார் இங்கு வருவதற்கு இனி தடையேதும் உளதோ."

நம்பிகள் அனைவரையும் தீர்க்கமாகப் பார்த்தார். அவர்களின் மௌனமே சம்மதத்தினைத் தெரிவித்தது. இனி, புறப்பட வேண்டியதுதான்.

அரங்கனிடம் நம்பிகள் விடைபெற்றார். "முன்னர் இங்கு வந்தபோது நம்மை சேவிக்க மறுத்த இளையாழ்வாரை காண வேண்டும் எனும் ஆவல் எனக்கும் உண்டு" எனும் செய்தியை அரங்கன் தன்னுடைய திருக்கண்களாலேயே தெரிவித்தான். கருணை பொங்கிய அக்கண்கள் பெரியநம்பியை குளிர்ந்து நோக்கின. அரங்கனாகிய இவ்வருள் வரதன்தான் இளையாழ்வாருக்கும் அங்கே அனுமதியளித்துள்ளானே. பிரயாணம் புறப்பட்டார் பெரியநம்பிகள்.

நம்பிகளைத் தேடி ராமானுஜரும் புறப்பட்டார்.



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge



சிஷ்யனைத் தேடி ஆசார்யன் வருவது நம் ஸம்ப்ரதாயத்தின் ஏற்றமன்றோ! இதே இளையாழ்வாரைக் காண தனது தள்ளாத வயதிலும் ஆளவந்தார் காஞ்சி வந்தார். அவர் போன்றே பெரியநம்பிகளும் விரைந்து வழி நடந்தார்.

காவிரி ஆற்றங்கரையில் இருந்து புறப்பட்டார் பெரியநம்பிகள். அது, இரண்டாகப் பிரிந்து பெருகுவதால் இரண்டு ஆறானது. வேகவதீ, பாலாற்றின் கரையினின்றும் இளையாழ்வார் புறப்பட்டார். இங்கும் அது இரண்டு ஆறானது. இரண்டும், இரண்டு நான்கு. இந்நான்கும் சங்கமிக்கும் க்ஷேத்திரம் இதோ இப்போது காணப் போகிறோம். இதுவும் ஆற்றங்கரைதான். இதற்கு, 'வகுளாரண்யம்' என்பது பெயர்.

மகிழ மரங்கள் நெருங்கி நிழல் தரும் புண்ய பூமி. 'சுகநதி' எனும் கிளியாற்றின் கரையிலொரு க்ஷேத்ரம். ராமன் புஷ்பக விமானத்தினின்றும் இறங்கிய திருக்கோலத்தில் இத்தலத்தில் சேவை சாதிக்கிறான்.

அதாவது, ராவண வதம் முடிந்த பின்பு பெருமாள் சீதையுடன் புஷ்பக விமானத்திலேறி அயோத்திக்குப் புறப்பட்டான். அச்சமயம் வகுளாரண்யம் எனும் இத்தலம் நேர்ப்பட்டது. இங்கு விபாண்டகர் எனும் மஹரிஷி தவம் செய்து வந்தார். ராமனின் அவதாரத்துக்கு (அதாவது பிறப்புக்கு) மிக முக்கியக் காரணமாகிய ரிஷ்யச்ருங்க முனிவரின் தகப்பனார் இந்த மஹரிஷி.

தன் பிள்ளையின் யாகத்தினால் ராமன் பிறந்தாலும் ராமனின் கல்யாணக் கோலத்தை சேவிக்கும் ஆவலில் இங்கு தவம் செய்து வந்தார். அயோத்திக்கு அவசரமாகச் சென்றாலும் இம்மாமுனிக்கு அருள்தர வேண்டி கருணாகரனாகிய ராமன் விமானத்தை கீழிறக்கி மஹரிஷிக்கு காட்சியளித்தான். இத்தெய்வீக திருத்தலம் கிளியாற்றின் (சுகநதி) கரையில் அமைந்துள்ளது.

நான்கு ஆறுகள் தவிர்த்து இவர்கள் இருவரும் சந்தித்தது ஐந்தாவது ஆறு. இது நமக்கு உய்யுமாறு. ஆம் நம்மை உய்விக்கும் ஆறு. ஐந்தாம் ஆறு என்றாலும் ஐந்து அர்த்தங்களாகிய அர்த்த பஞ்சகம் எனும் மாபெரும் விசேஷங்களைக் காட்டித் தரவல்ல ஆறு.

தூய பெருநீர் யமுனைத்துறைவனாகிய கண்ணனின் கதைதனை கங்கைக் கரைதனில் சுகப்ரஹ்மம் உபதேசம் செய்தார். பரீட்சித் மஹாராஜனுக்குச் செய்த அந்த உபதேசம் பாகவதம் எனும் அம்ருதமாக உலகத்தை வாழ்வித்தது. இன்று கங்கையிலும் புனிதமாகிய காவிரியின் நடுவிலிருந்து யமுனைத் துறைவராகிய ஆளவந்தாரின் சிஷ்யராகிய பெரியநம்பிகள் சுக நதிக்கரையில் இப்போது ராமானுஜருக்கு உபதேசம் செய்யப் போகிறார்.

சுகப்ரஹ்மத்தின் வாயிலாக ஆத்ம தத்வம் உபதேசிக்கப்பட்டது போன்று அகநதிக்கரையில் ஆத்ம லாபத்தை அடையும் வழி உபதேசிக்கப்படப் போகிறது. இனி, த்வயம் விளைந்த திருப்பதியில் நாம் திவ்யாநுபவம் பெறலாம்.

(தொடரும்)

## அஸ்ஸாமில் சிவராத்திரி!

அஸ்ஸாம் தலைநகர் குவாஹாத்தியில் அருள்மிகு உமாநந்தா ஆலயத்தில் மகா சிவராத்திரி திருநாள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ஆலயம் பிரம்மபுத்திரா நதியின் நடுவில் அமைந்துள்ள 'மயில்களின் தீவில்' (Peacock Island) உள்ளது. இதுதவிர, 'சிப்சாகர்' என்ற இடத்திலும் மகா சிவராத்திரியை விசேஷமாகக் கொண்டாடுகிறார்கள்.



**– கே.ராஜலக்ஷ்மி, சென்னை**

## சிவராத்திரித் துளிகள்



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

**அ**ழகிய குமரனின் முன் அட்டைப்படம் அமர்க்களம். **- இரா.கல்யாண சுந்தரம், சென்னை**

**'கே**ட்டேன் ரசித்தேன்' பெரியவர்கள் பலரின் பேச்சுக்களை வாசகர்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

**'ஜா**தகம் சாதகமே' கேள்விகள் மூலம் நமக்கும் தொடர்புடைய தகவல்கள் கிடைக்கின்றன.

**அ**ட்டைப்படக் கட்டுரை மூலம் தைப்பூசத்தின் மகிமைகளை விரிவாகத் தெரிந்துகொண்டேன்.

**- மாரிமுத்து, காட்டூர்**

**'சி**த்தம் அழகியார்' என்ற பொருள் பொதிந்த இனிமையான சிறப்புப் பெயர் கொண்டோர் பற்றி படித்து நெகிழ்ந்தேன்.

**- ஜெயா ராஜாமணி, மதுரை**

**சோ**ளிங்கர் பெருமாளை நேரில் தரிசிக்க கிளம்பிய நேரம், பின் அட்டையில் முதலில் தரிசித்தது மனதை நிறைத்தது!

**- சியாமளா ராஜகோபால், சென்னை**

**'கு**றை தீர்ப்பான் பத்துமலை முருகன்' முருகனின் அற்புதங்களை விளக்கியது.

**- கே.கல்யாண ராமன், திருவாரூர்**

**நா**மாம்ருதம், ராமாமிருதம், கானாமிருதம் இவைகளைச் சொல்லச் சொல்ல தேவாமிருதம் போல் உள்ளது. **- பி.கலா, திருச்சி**

**வா**சகர்களின் ஐயங்களுக்கு 'கேள்வி நேர பதில்கள்' ஆனந்த வாழ்வுக்கு அருமருந்து.

**- க.சௌந்தர்யா, புதுச்சேரி**

**அ**னைத்து நலன்களும் பெற தர்மஸம்வர்த்தினி சமேத அகஸ்தீஸ்வரரை வணங்குவோம்.

**-என்.மைத்ரேயி, சென்னை**

**ப**க்தன் இறைவனிடம் நம்பிக்கையுடன் வைத்த பக்திதான், 'அமாவாசையில் முழுமதி உத்ஸவம்.'

**- பி.சித்ரா, விழுப்புரம்**

**'அ**பரஞ்சி கழுத்தில் அரங்கன் மாலை' சித்தர் தரிசனம் சிந்தனையைத் தூண்டியது.

**- ஆர்.விநாயகராமன், நெல்லை**

**'ப**லன் தரும் பரிகாரங்கள்' மூலம் அவற்றுக்கான பரிகாரமும் அறிந்து பரவசமானேன்.

**- சி.ஆர்.நாகராஜன், பொள்ளாச்சி**

**நா**கநாதர் குறித்து இதுவரை அறிந்திராத பல அரிய தகவல்களை அறிந்துகொள்ள முடிந்தது.

**- எஸ்.பாலாஜி, மயிலாடுதுறை**

## ஆராதனை

# தேவாமிருதம்!




**'பி**றர் வலி... தன் வலி...' கட்டுரை சிந்திக்க வைத்தது எனில் மிகையாகாது.

**- வி.தீட்சணா, சென்னை**

**'அ**ரியும் சிவனும் ஒண்ணு' எனும் அரிய தத்துவத்தை விளக்கியது 'பேதைமை விலங்கொடித்த மால்மருகன்' கட்டுரை.

**- சி.என்.ரமாதேவி, சென்னை**

**தை**ப்பூச சிறப்பிதழில், வள்ளலார் நிகழ்த்திய அற்புதத் தகவல் இடம்பெற்றிருப்பது மிகச் சிறப்பு.

**- வெ.லட்சுமி நாராயணன், வடலூர்**

**கி**ருஷ்ண பக்தை பிரேமாபாய் திருமகனாய் அவதரித்து, பின்னாளில் ஹரிதாஸ் ஆக்கியது 'கிருஷ்ண பிரேமை'தான்.

**- மயிலை கோபி, சென்னை**



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

தொல்பொருள் ஆய்வகம் இங்கு தோண்டியபோது கிடைத்த ஆதாரங்களின்படி, 'காந்தார பல்கலைக்கழகம்' இங்கு இருந்ததென்றும் 'ஆல்பெருனி' என்ற பிரபல கணித சாத்திர அறிஞர் இங்குதான் பாரத நாட்டின் பல விஞ்ஞான மற்றும் சம்ஸ்கிருத சாத்திரங்களைக் கற்றறிந்தார் என்றும் தெரிகிறது.

# அருள் பெருகும் அமிர்த குண்டம்!



பாகிஸ்தானில் இந்து புராண மற்றும் சரித்திரப் புகழ் பெற்ற புண்ணியத் தலங்கள் பல உள்ளன. பிரிவினைக்குப் பிறகு தூப, தீப, நைவேத்தியங்களுக்குக் கொடுப்பினை இல்லாது, நிகழ்கால சாட்சிகளாக நிற்கும் திருத்தலங்கள் பல அங்கு கணக்கில்லாமல் காட்சி தருகின்றன. பாகிஸ்தானின் பஞ்சாப் மாநிலம், 'சக்வாலா' மாவட்டத்திலிருந்து 40 கி.மீ. தொலைவில் உள்ள 'கடாஸ் ராஜ்' திருத்தலம் அவற்றுள் முக்கியமானது.



கண்ணுக்குக் குளிர்ச்சியான இயற்கைச் சூழலோடு, சின்னச் சின்னக் குன்றுகள், நடுவில் குளங்களோடு கூடிய பல இடிந்த கோயில்கள் அங்கு தென்படுகின்றன. சிறிதும் பெரிதுமான நூற்றுக்கும் மேற்பட்ட கட்டடங்கள் தென்படும் இந்த விரிந்த பிரதேசத்தில் அனைத்தையும் விட சற்று உயரமான மலை மீது அருகருகில் ஏழு கோயில்கள் மற்றும் பெரிய திருக்குளமும் காட்சியளிக்கின்றது. 'சாத்கர்' என்று அழைக்கப்படும் இந்த ஏழு ஆலயங்களுக்கும் திருக்குளத்துக்கும் தொடர்புடைய புராண வரலாற்று விசேஷங்கள் பல உள்ளன.

தக்ஷ யாகத்தில் நிகழ்ந்த அவமானத்தால் சதீ தேவி, யோக அக்னியால் தன்னைத்தானே எரித்துக் கொண்டாள் என்றறிந்த ஈசனின் இரண்டு கண்களிலிருந்தும் பெருகிய கண்ணீர்த் துளிகள் இரண்டு இடங்களில் விழுந்தனவாம். ஒன்று, ராஜஸ்தானில் அஜ்மீர் அருகில் உள்ள புஷ்கர க்ஷேத்ரம். மற்றொன்று பாகிஸ்தானில் உள்ள கடாஸ் ராஜ். இந்தக் குளம், 'அமிர்த குண்டம்' என்று அழைக்கப்படுகிறது. இது ஒரு ஜீவ சரஸ்ஸு. 'கடாக்ஷ' என்ற சொல் காலப்போக்கில் மருவி, 'கடாஸ் ராஜ்' என்றானது.

மகாபாரதத்தில் பாண்டவர்கள் பதினான்கு வருடங்கள் வனவாசம் செய்ததாக வர்ணிக்கப்படுகிறது. அதில் நான்கு ஆண்டுகள் அவர்கள் வசித்த 'துவைத வனம்' இதுவே என்றும், அவர்கள் வசித்த ஐந்து வீடுகளும், மேலும் இரண்டு வீடுகளுமே இந்த ஏழு ஆலயங்கள் என்றும் ஒரு வரலாறு கூறுகிறது. வனவாசம் முடிந்த பிறகு, ஸ்ரீ கிருஷ்ணர் இங்குள்ள ஒரு வீட்டில் சிவலிங்கம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்தார் என்றும் அதுவே, 'போலே நாத்' ஆலயமாக புகழ் பெற்றது என்றும் கூறப்படுகிறது. வனவாச காலத்திலேயே யக்ஷ பிரச்ன கதை நிகழ்ந்ததென்றும், யக்ஷன் பாதுகாத்து வந்த குளமே தற்போது 'அமிர்த குண்டம்' என்று அழைக்கப்படுகிறதென்றும் மற்றொரு வரலாறு தெரிவிக்கிறது.

அமிர்த குண்டத்தின் நீர் மிகவும் மகிமை வாய்ந்ததென்பது பக்தர்களின் நம்பிக்கை. போலேநாத் சிவன் கோயிலோடு கூட, ராமச்சந்திர மந்திர், துர்கா மாதா, காளீ மாதா, ஹனுமான் மந்திர் மேலும் இரு சிறிய கோயில்கள் இங்குள்ளன. அருகிலேயே பல பௌத்த ஸ்தூபங்களும் காணப்படுகின்றன. வரலாற்று



https://t.me/softknowledge

www.TheMagnat.com

https://t.me/softknowledge

# வெளிநாட்டுக் கோயில்

ராஜி ரகுநாதன்





ஆய்வாளர்களின் கூற்றுப்படி காஷ்மீரைச் சேர்ந்த, 'கர்க்கோட' அரச வம்சத்தவர்களும், 'வர்ம' அரச வம்சத்தவர்களும் கி.மு. 625-939 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் இந்த ஆலயங்களை நிர்மாணித்தார்கள் என்று அறியப்படுகிறது.

900 முதல் 1500 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பல கோயில்கள் இங்குள்ளன என்று பாகிஸ்தான் அரசின் தொல்பொருள் அமைச்சகம் தெரிவிக்கிறது. 1947ல் பிரிவினைக்குப் பின் இங்கிருந்த இந்துக்கள் அனைவரும் இந்தியாவின் பஞ்சாபுக்குச் சென்று விட்டார்கள் என்று கூறப்படுகிறது. சுமார் அறுபது ஆண்டுகளுக்கு மேலாக அலட்சியத்துக்கு ஆளாகி சிதிலமடைந்த கடாஸ் ராஜ் ஆலயத்தின் மீது 2005ல் பாகிஸ்தான் அரசின் கவனம் திரும்பி, சில நன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அப்போதைய இந்திய துணை பிரதமர் லால் கிருஷ்ண அத்வானியை அழைத்து இந்த க்ஷேத்ரத்தினைப் புனரமைக்க, அவர் கையால் வேலையைத் தொடங்க வைத்தனர். அதற்காக 2007ல் 51 லட்சம் ரூபாய் பட்ஜெட் ஒதுக்கி மூன்று பேர் அடங்கிய ஒரு கமிட்டியை நியமித்தது பாகிஸ்தான் அரசாங்கம். கமிட்டியின் அங்கத்தினர்கள் இந்தியா, ஸ்ரீலங்கா, நேபால் நாடுகளில் பயணித்து கடாஸ் ராஜ் ஆலய புனரமைப்புக்கு வழி தேடினர்.

பின், அவர்கள் லாகூர் டெவலப்மென்ட் ஆதாரிடியிடம் வேலையின் மேற்பார்வைப் பொறுப்பை ஒப்படைத்தனர். அதே ஆண்டு கடாஸ் ராஜை வேர்ல்ட் ஹெரிடேஜ்க்குச் சொந்தமான உலக பாரம்பர்ய தலங்களில் ஒன்றாக்க வேண்டுமென யுனெஸ்கோவைக் கோர, பாகிஸ்தான் அரசு முடிவெடுத்தது.

அத்வானி கடந்த பத்தாண்டுகளாக அடிக்கடி கடாஸ் ராஜ் பற்றி விசாரித்து வந்தாலும் திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. 2015, ஜூலை மாதம் பாகிஸ்தான் அரசு நன்நோக்குச் செயலாக அமிர்த குண்டத்தின் நீரை அத்வானிக்கு அன்பளிப்பாக கொடுத்தனுப்பியது. காலம் கடந்தும் புனரமைப்பு வேலையில் முன்னேற்றம் காணப்படாததால் இந்துக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். தவிர, ஆலய வளாகத்தின் அருகில் சிமெண்ட் தொழிற்சாலைகள் பெருகி வருவதாலும் அதற்குத் தேவையான நீரை அமிர்த குண்டத்திலிருந்து எடுத்து வருவதாலும் குளத்து நீர் வறண்டு போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மகா சிவராத்திரி அன்று பாகிஸ்தானில் உள்ள இந்துக்கள் மட்டுமின்றி, இந்திய எல்லையிலுள்ள கிராமங்களிலிருந்தும் பலர் போலேநாத் சிவாலயத்துக்குச் சென்று விசேஷ பூஜைகள் நடத்துவது வழக்கம். அன்றைய தினம் அப்பிரதேசம் முழுவதும் பெரிய திருவிழா போல் காட்சி அளிக்கும். சிவராத்திரிக்கு மூன்று நாட்கள் முன்பிருந்தே பக்தர்களுக்காக விதிகளைத் தளர்த்தி பாகிஸ்தான் அரசாங்கம் சில ஏற்பாடுகளை செய்வது வழக்கம். ஆனால், உள்நாட்டு பாதுகாப்பு என்ற பெயரில் வெளியே தெரியாத வகையில் பல கட்டுப்பாடுகளை விதிப்பதால் இந்துக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

2017 ஜனவரி 11 அன்று பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரீப், கடாஸ்ராஜ் சென்று பாதுகாப்பான குடிநீருக்கான திட்டம் ஒன்றைத் தொடங்கி வைத்து, சிவராத்திரிக்கு வரும் பக்தர்களுக்கு அனைத்து வசதிகளையும் செய்து தர ஆணையிட்டுள்ளார். அப்போது, 'கடாஸ் ராஜ் பிரதேசத்தை சுற்றுலா தலமாக விரைவில் அபிவிருத்தி செய்யப்படும்' என்று அறிவித்தார். பாகிஸ்தான் அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ◆



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge

# உங்களுடன்...

## வாசக நெஞ்சங்களே, வணக்கம்.

'பாஷ்யகாரரும் பாண்டிய நாடும்' - இதுதான் தலைப்பு! ஸ்ரீபெரும்புதூரில் ஸ்ரீராமானுஜர் சன்னிதியுடன் இணைந்த ஆதிகேசவப் பெருமாள் ஆலயத்தில் இந்து சமய அறநிலையத் துறையில் இருந்து வாரந்தோறும் இசை, நாட்டிய, உரை நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஸ்ரீராமானுஜரின் ஆயிரமாவது ஆண்டு நிகழ்ச்சிகளை முன்னிட்டு இத்தகைய ஏற்பாடு. வாரந்தோறும், சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஸ்ரீராமானுஜரின் வாழ்க்கை குறித்த சொற்பொழிவுகள், இசை நிகழ்ச்சிகள் இங்கே மாலை நேரங்களில் களைகட்டுகின்றன. கோயிலுக்கு வரும் பக்தர்கள் பெருமளவில் அமர்ந்து இவற்றைக் கேட்டு, பகவத் ராமானுஜரின் நினைவுகளில் தம்மை மறக்கிறார்கள்.

அடியேனையும் ஒரு நாள் பேச அழைத்தார்கள். சுமார் ஒன்றரை மணி நேரம் பேச வேண்டும் என்றும், தலைப்பை நீங்களே சொல்லுங்கள் என்றும் கேட்டபோது, உடனே மனத்தில் தோன்றிய தலைப்பு, 'பாஷ்யகாரரும் பாண்டிய நாடும்' என்பது தான்! காரணம், பாண்டிய நாடும் தாமிரபரணி நதிக்கரையும்தான், ஸ்ரீராமானுஜர் அவதரிக்கப்போகிறார் என்பதை கட்டியம் கூறும் விதமாய்க் கூறியது. எப்படி?

நம்மாழ்வார், தம் 32ம் வயதிலேயே, நான்கு வேதங்களையும், தமிழில் சாரமாக திருவிருத்தம், திருவாசிரியம், திருவந்தாதி, திருவாய்மொழி என அளித்து, தாம் வந்த நோக்கம் நிறைவு பெற்றது என்றும், தாம் விண்ணுலகம் செல்லப் போவதாகவும் தம் சீடர் மதுரகவியாழ்வாரிடம் கூற, அவர் மனம் துக்கித்து, குருவைப் பிரிந்து எப்படி இருப்பது என்று கேட்டார். அதற்காக அவர் ஓர் உபாயம் சொன்னார். பொருநை நதி நீரைக் காய்ச்சினால் விக்ரஹம் கிடைக்கும், அதை வைத்து தேற்றிக் கொள்ளுமாறு கூறினார். அதன்படி மதுரகவிகளும் செய்ய, அப்போது கிடைத்தது ஒரு விக்ரஹம். அது நம்மாழ்வாரைப் போலன்றி, வேறு விதமாய் இருக்க, நம்மாழ்வார், தாம் பாடிய 'பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்' எனும் பாசுரத்தைச் சொல்லி, அவ்வாறு மக்களின் சாபங்களை நீக்க வரப்போகிற பவிஷ்யதாசார்யரின் திருமேனி வடிவு இது எனக் காட்டி, பூஜிக்கச் சொன்னார். இவ்வகையில், ஒரு மகானின் அவதாரத்தை முன்னமேயே உணர்த்தியது தாமிரபரணி நதிக்கரையில் இருந்த ஆழ்வார்திருநகரித் தலம்!

திருவனந்தபுரம் சென்ற ராமானுஜரை அங்கிருந்த துஷ்டர்களிடம் இருந்து காத்து, ஒரே இரவில் அவரை திருக்குறுங்குடி நம்பி சன்னிதியில் சேர்ப்பித்தது, பெருமான் நம்பிக்கு ராமானுஜரே உபதேசம் செய்தது, திருமண் காப்பு இட்டது, திருமாலிருஞ்சோலை கள்ளழகருக்கு ஆண்டாள் கனவு கண்டதுபோல் நூறு தடா நிறைய அக்காரவடிசில் சமர்ப்பித்தது, பின் திருவில்லிபுத்தூர் சென்ற ராமானுஜரை நன்றிப் பெருக்குடன் ஆண்டாளே வாய் திறந்து, 'அண்ணரே' என்று அழைத்தது, நம்மாழ்வார் மீதான அதிதீவிர பக்தியால் ஆழ்வார்திருநகரியில் உள்ள நம்மாழ் வாரின் பாத கமலங்களாகிய சடாரிக்கு ஸ்ரீராமானுஜம் என தம் பெயரையே ஏற்றது, ஈரங்கொல்லி (துணி வெளுப்பவர்) ஒருவரின் பிள்ளைகளை ஆழ்வாரின் பெயரிட்டு அழைக்கக் கேட்டு மனம் ஏங்கியது, திருக்கோளூருக்குச் செல்லும் போது, அங்கே கடைநிலைப் பெண் ஒருத்தியின் உயர்ந்த பக்தி வேதாந்த வசனங் களைக் கேட்டு மனம் கசிந்து, அவள் வீடு சென்று அவள் கையால் உணவருந்தியது என, ஸ்ரீராமானுஜர் செய்த பக்தி, சமூகப் புரட்சியின் பெரும் அம்சங்கள் தென் தமிழகத்தில் நிகழ்ந்து, திராவிட நாடு பக்தி இயக்கத்தின் வேர் என்பதை இன் றும் அழுந்தப் பதிக்கிறது.

அன்பன்
**செங்கோட்டை ஸ்ரீராம்**

Published by LAKSHMI NATARAJAN on behalf of Bharathan Publications Private Limited, from 47-NP, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai 600 032 and Printed by R. Harikrishnan at Bharathan Press, 47-NP Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai 600 032. Editor : Lakshmi Natarajan

தீபம்: 6 சுடர்: 11

தீபம் - இல்லத்தின் அருள் வெளிச்சம்

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில்
அச்சிடுபவர் :
**ஆர்.ஹரிகிருஷ்ணன்**

ஆசிரியர் பொறுப்பேற்று
வெளியிடுபவர்:
**லக்ஷ்மி நடராஜன்**
பொறுப்பாசிரியர்:
**செங்கோட்டை ஸ்ரீராம்**

தலைமை நிருபர்கள்:
**ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு**
**எஸ்.வனராஜன்**
வடிவமைப்பு :
**எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன், பா.கோபால்**

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899
**ஆசிரியர் குழு :**
044 - 4343 8822
deepam@kalkiweekly.com
**விளம்பரப் பிரிவு :**
044 - 4343 8811
marketing@kalkiweekly.com
**விற்பனை பிரிவு :**
044 - 4343 8844
sales@kalkiweekly.com
**சந்தா பிரிவு :**
044 - 4343 8833
subscription@kalkiweekly.com
**சந்தா விவரம் (ஒரு வருடம்):**
உள்நாடு : ₹ 400/-
வெளிநாடு : ₹ 3,200/-
(தபால் செலவு உட்பட)
இன்டர்நெட் முகவரி :
www.deepamonline.com
கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு கல்கி நிர்வாகம் பொறுப்பல்ல.

75 கல்கி குழுமம்



https://t.me/softknowledge

www.TheMagnat.com
https://t.me/softknowledge




படம்: வி.என்.கேசவபாஷ்யம்

https://t.me/softknowledge

https://t.me/softknowledge
www.TheMagnat.com

C (S) DN / 445 / 15 - 17 Licensed to post without prepayment under WPP No. TN / PMG (CCR)/WPP-275/15-17* Date of publication - 5th and 20th of every month.

we promise
PQR
PRICE • QUALITY • RANGE

KANCHEEPURAM
Vara Mahalakshmi
Silks

YES. ITS TRUE
Kancheepuram Varamahalakshi Silks
is the only brand to have the
LARGEST STORE IN KANCHEEPURAM



No.1 BRAND IN SILK SAREES
Awarded by Times Retail Icons 2015

KANCHEEPURAM
# 16, Gandhi Raod , Kancheepuram
Ph: 044 4720 3030

CHENNAI
Luz Church Road Mylapore
(opp. Alwarpet Anjaneyar Temple )
Phone 044 -43 55 3029

www.kanchivml.com
/kancheepuramvaramahalakshmisilks

Kancheepuram Sarees , Arni Sarees, Banaras Sarees , Dharmavaram Sarees, Uppada Sarees,
Handloom Sarees, Real Zari Kota Sarees , Designer Sarees

https://t.me/softknowledge